
# ஐந்திணை வளம்

## புலியூர்க் கேசிகன்



ராமையா பதிப்பகம்

696

# ஐந்திணை வளம்

புலியூர்க் கேசிகன்

ராமையா பதிப்பகம்
சென்னை - 600 014.
☎ 9790706549 / 9790706548

நூல் கிடைக்குமிடம் :

**கௌரா புத்தக மையம்**
செயிண்ட் ஜான் சர்ச் வணிக வளாகம்
10, ராக்கின்ஸ் சாலை, திருச்சிராப்பள்ளி-1
☎ : 99520 34876 / 0431 2419584


**கௌரா புத்தக மையம்**
4, வெங்கட்ராங்கம் பிள்ளை தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 5.
☎ : 97907 06548/94449 10346

விலை : ரூ. 45.00

* முதற் பதிப்பு : டிசம்பர் 2009
* © உரிமை : பதிப்பகத்திற்கே
* பதிப்பாசிரியர் : எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
* நூலின் பெயர் : ஐந்திணை வளம்
* பக்கங்கள் : 128
* ஒளி அச்சு : ஜெய் ஜீனா
* வெளியீடு : ராமையா பதிப்பகம்
ஜி-4, சாந்தி அடுக்ககம்,
3, ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு,
ராயப்பேட்டை, சென்னை - 14.
* ISBN : 978-93-80219-36-3
* அச்சிட்டோர் : கிளாசிக் பிரிண்டர்ஸ், செ - 2

CODE : 916

**கௌரா ஏஜென்ஸீஸ்**
10/14, தோப்பு வேங்கடாசலம் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 5.
☎ : 044-2844 3791 / 97907 06548 / 97907 06549
www.gowrabookfair.com. E-mail : gowra_09@yahoo.in / gowra09@gmail.com


அம்மாவுக்கு...

# இந்த நூல்...

மனித உணர்வுகளை நுட்பமாகப் புரிந்து கொண்டு, அந்த உணர்வுகளின் போக்கையும், அவற்றால் அமையும் அகவாழ்வு புறவாழ்வுகளையும் தெளிவாக வகுத்துக் காட்டியிருப்பவர்கள், பழந்தமிழ் நாட்டுப் பாவலர்களும், அறிஞர்களுமே ஆவர்.

பருவத்தின் எழுச்சியோடு இணைந்து நிலத்தின் தன்மைகளும், காலத்தின் தன்மைகளும் எவ்வாறு எல்லாம் மக்களின் வாழ்வை உருவாக்குகின்றன என்பதையும், அவர்கள் இலக்கியச் சுவையோடு சிறப்பாக எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

இது தமிழ் மொழிக்கே உரிய ஒரு தனிச்சிறப்பாகவும், அறிஞர் உலகத்தால் வியந்து போற்றப்பெறுகின்றது.

இவ்வகையில், குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல் என்னும் ஐந்திணை ஒழுக்கங்களிலும், காதலர்களின் உணர்வுகளும், செயல்களும், பேச்சுக்களும் எவ்வாறு எல்லாம் அமைந்து விளங்கின என்பதனைச் சுவையாகவும், நுட்பமாகவும் விளக்குவது, மூவாதியரின் ஐந்திணை எழுபது என்னும் நூல் ஆகும்.

அந்த நூலின் செய்யுட்களைத் தழுவிக் காதலர்களின் வாழ்வுப்போக்கை அனைவருக்கும் தெளிவாக எடுத்துச் சொல்லுவதற்கு முயன்றிருக்கின்றேன். அந்தக்கால வாழ்வுச் செழுமையை அறிந்து போற்றவும் இது உதவும்.

தமிழன்பர்கள் இந்த இனிய நல்லதமிழ் விருந்தினை விரும்பி வரவேற்பார்கள் என்று நம்புகின்றேன். அன்னை பராசக்தியின் அருளையும் நினைந்து வணங்கிப் போற்றி இதனைத் தமிழ் உலகுக்கு வழங்கி மகிழ்கின்றேன்.

**புலியூர்க் கேசிகன்.**

# உள்ளடக்கம்


ஐந்திணை வளம் ........................................ 1

கடவுள் வாழ்த்து ........................................ 3

1. குறிஞ்சி வளம் ........................................ 6

1. இடை நின்ற புணை - 2. வாடல் மறந்தன! - 3. அலையும் அலைபோயிற்று - 4. யாமாகப் பிரியோம் - 5. நயம் திகழும் - 6. இன்னுயிர் தாங்கும் மருந்து - 7. அன்னாய் வெகுளாதே! - 8. அறிவின்கண் நின்ற மடம் - 9. தெளித்த தெளிவு - 10. வாழ்தல் இலள் - 11. நெஞ்சு ஊன்றுகோல் - 12. ஏமாப்பு உடையது - 13. முயங்கினேன் வலித்தான் - 14. வாரல் என்பது உரை

2. முல்லை வளம் ........................................ 35

1. நீரோடு அலமரும் கண் - 2. என்னாதி என்பார் இலர்! - 3. கொல்லுநர் போல வரும் - 4. உயிர் துடிப்பது போலும்! - 5. உருகுவது போலும் - 6. புயலும் வரும் - 7. வாழ்கிற்பார் இல் - 8. வான் விற்கோலிற்று - 9. நில்லா வளை - 10. வற்றுவிட்டன்று நீர்! - 11. நின்றது நீர் - 12. படுமழை கொல்

3. பாலை வளம் ........................................ 51

1. சுரம் நிரைத்து - 2. பாரார் கொல்! - 3. வாழ்தியோ உயிரே! - 4. காணப் புணர்ப்பது - 5. வலன் உயர்ந்து தோன்றும் - 6. ஈரமற்ற நெஞ்சினர்! - 7. தெருள் இலார் - 8. கள்ளர் வழங்கும் சுரம் - 9. கண்ணுள் நீர் நில்லா - 10. இறந்தார் கொல் - 11. இறப்பர் கொல் - 12. கன்னியர் போலும் - 13. பல்லி படும் !- 14. நடந்து செல்வாளோ?

4. மருத வளம் ........................................ 74

1. பட்டம் சிதைப்ப வரும் - 2. நோவது எவன்? - 3. கூத்தாடி உண் - 4. பெண்டிர்க்கு உரை - 5. கண்டதும் மகிழ்ந்தாள் - 6. செல்க பாண! - 7. நினக்குக் குறையுண்டோ? - 8. பொய்ச்சூள் அறியாதேன் - 9. என் மார்பு அறியும் - 10. நீரும் ஏங்காதீர் - 11. நின் மேலது பழிபாடு - 12. ஊர தகுவதோ? - 13. சிறுவன் உடையேன் 14. அனைத்தும் உளேன்

5. நெய்தல் வளம் ........................................ 96

1. உயிருக்கு ஊதியம் - 2. நின்னல்லது இல் - 3. நாணுவரென்று பெயர்ந்தாள் - 4. கடல் துஞ்சாதது - 5. உணர்வு இலாதேன் - 6. அயல்நெறி செல்லுங்கொல்? -7. தேர்மேல் வரும் - 8. அன்றிலே உரையாய் - 9. குருகு அறியாகொல்! - 10. வண்ணந்தா என்கம்! - 11. தோள் பசலையாயின்று - 12. நெறி அறிதி!

# ஐந்திணை வளம்

‘செல்வம் என்பது, சிந்தையின் நிறைவே’ என்று சொல்வார்கள் சான்றோர்கள். வாழ்க்கையின் பல கூறுகளையும் ஆர அமர ஆராய்ந்து பாத்தோமானால், இந்த உண்மையின் செறிவு நமக்குத் தெளிவாகப் புலனாகும்.

சிந்தையின் நிறைவே செல்வம் என்பதனால், சிந்தையின் நிறைவுக்கு ஊறு விளைவிப்பன அனைத்தும் செல்வமன்று என்றாகின்றது. சிந்தையது நினைவுக்கு வேண்டிய செயல்களை மேற்கொள்வதே செல்வத்தைத் தேடுதல் என்பது ஆகின்றது. இதனால், நாம் செல்வம் என்றதும் பொன்னையும், பொருளையும் கருதத் தொடங்கி விடாமல், சிந்தைக்கு நிறைவு தரும் ஆன்மவளத்தையே கருத வேண்டியவர்கள் ஆகின்றோம்.

வாழ்க்கையின் சிறந்த அனுபவங்களும், அவை நமக்கு மனநிறைவினைத் தருவனவாக அமையும்பொழுது அளப்பரிய செல்வமாகவே நிலைபெறுகின்றன. இவற்றுள் வாழ்க்கைக்கு உறுதி சேர்ப்பனவற்றைச் செல்வமெனவும், ஊறு விளைவிப்பன வற்றை வறுமை எனவும் பெரியோர் கொள்வார்கள்.

அறிவுடைமையிலும், தெளிவும் செப்பமும் கூர்மையும் உடையதான சிறப்பினை அறிவுச்செல்வம் என்றுதான் நாம் கூறுகின்றோம். இப்படிச் செல்வம் என்ற சொல்லானது, மனித வாழ்விற்கு நலந்தரும் பல்வேறு நிலைகளையும் வளங்களையும் உள்ளடக்கிய ஒரு செறிவுடைய சொல்லாகவே விளங்குகின்றது.

‘ஐந்திணை வளம்’ என்கின்ற இந்த நூலும் ஒரு சிறந்த செல்வமே ஆகும். ‘அன்பின் ஐந்திணை’ என ஆன்றோர் வகுத்துரைத்த ஒழுகலாறுகளையும், அந்த ஒழுக்கத்தே ஈடுபட்டு இன்ப துன்பங்கட்கு உட்படுகின்ற தலைவன் தலைவியரது தகைமைகளையும் இது நமக்கு உணர்த்துகின்றது. இதன்மூலம் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என்கின்ற ஐந்திணைக் கூறுபாடுகளையும் நாம் தெளிவாக அறிந்து, மனநிறைவு

பெறுகின்றோம். இந்த மனநிறைவினாலே நாம் ஐந்திணைச் செல்வத்தைப் பெற்றவர்களாகி, ஐந்திணைச் செல்வர்களாகி அகம் மலருகின்றோம்.

இங்ஙனம் அமைந்த இந்தத் தமிழ்ச் செல்வத்தினைத் தமிழறிஞர்கள் பொன்னேபோற் போற்றிப் பதினெண் கீழ்க் கணக்கு நூல் **'ஐந்திணை எழுபது'** என்னும் அருந்தமிழ் நூலாகக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் வழிவந்த நாம், அவர்களை வழியொற்றி அந்தச் செல்வத்தை நாமும் உடையவர்களாகி உவப்படைந்து உயர்தல் வேண்டும்.

'ஐந்திணை எழுபது' என்னும் பெயரோடு வழங்கும் இந்த அரிய செல்வத்தினை அமுதொத்த அழகுதமிழில் இன்புற யாத்து அருளிய சான்றோர் **மூவாதியர்** என்பவராவார். இவருடைய பெயரையன்றி, இவர்தம் வரலாற்றைப் பற்றிய செய்திகளுள் எதனையும் நம்மால் அறிய இயலவில்லை.

உலகம் உவக்க நூல் செய்த இந்த மூவாதியர் தம் புகழுருவோடு தமிழ் உள்ளவரையும் நிலைபெறுவர். இவர் பெய்ரைக்கொண்டு இவரைச் சமண சமயத்தவர் என்பாரும் சைவ சமயத்தவர் என்பாரும் இருசாரார் உள்ளனர். ஆனால் இவருடைய உள்ளத்தைக் கொண்டு பார்த்தால், இவரைச் செழுந்தமிழ்ச் சமயத்தினர் என்று தான் சொல்லத் தோன்றுகின்றது.

'மூ' என்பதும் 'ஆதி' என்பதும் சைவ சமயத்துள் கொள்ளப்படுகின்ற 'பதி பசு பாசம்' என்னும் முப்பொருள்களைக் குறிப்பனவாகலாம். முப்பொருளாகிய இந்த ஆதிப் பொருள்களை முற்றவும் உணர்ந்திருந்த மெய்ஞ்ஞானச் செல்வராகத் திகழ்ந்தமைப்பற்றி, இவருடைய பெயர்'மூவாதியர்' என்று ஆகியிருத்தலும் கூடும்.

இவருடைய இந்த நூல், ஐந்திணைகட்கும் திணைக்குப் பதினான்கு வெண்பாக்களாக அமைந்து, எழுபது செய்யுட்களோடு திகழ்ந்தது. அவற்றுள் முல்லைக்கண்ணும் நெய்தற்கண்ணும் இரண்டிரண்டு செய்யுட்களைக் காலவெள்ளம் தின்று விட்டது. எஞ்சியிருப்பன அறுபத்தெட்டுச் செய்யுட்கள். அந்த அளவிலாவது நாம் பேறுபெற்றவர்கள் ஆகின்றோம். கால வெள்ளம் நான்கு செய்யுட்களோடு திருப்தியடைந்து விட்டதல்லவா!

இந்தச் செய்யுட்கள், அந் நாளைய தமிழகத்தின் பெருவளத்தின் உயர்வினையும், அக் காலத்தே வாழ்ந்த தமிழ்க் குடியினரின் சால்பையும் அவர்தம் உள்ளவுணர்வுகளையும் சொல்லோவியங்களாகச் சுவைபடக் கூறுகின்றன. செய்யுட்களைத் தழுவி, ஓரளவிற்கு அவற்றை விளக்கிக் காட்டித் தமிழன்பர்களை இன்புறுத்துவதே இந்த நூலின் நோக்கம்.

செய்யுட்களின் கருத்தை உணர்ந்து கொள்ள இந்த நூல் உதவும். ஆனால், ஐந்திணை ஒழுகலாறுகளின் நயத்தை முற்றவும் அறிந்து இன்புற வேண்டுமானால், கருத்துக்களை யொட்டிய காட்சிகளை ஒவ்வொன்றாக மனத்தே கற்பித்துக் கொண்டு, அந்தத் தலைவன் தலைவியரிடையே நாமும் கலந்து நின்று அனுபவித்தல் வேண்டும். அதுவே, உண்மையில் ஐந்திணை வளத்தை அனுபவிப்பதாகும். தமிழ் அன்பர்கள், இதனை மனத்துட் கொண்டு எல்லா இலக்கியச் செல்வங்களையும் கற்றறிவதற்குப் பழகுதல் வேண்டும். அப்பொழுதுதான், அவர்கள் இலக்கிய வளத்தினராகிக் களிப்படைவது எளிதாயிருக்கும்.

## கடவுள் வாழ்த்து

எண்ணுவன எல்லாம் இனிதாக முடிதலைத்தான் நாம் அனைவரும் விரும்புவோம். நம் விருப்பம் அதுவானாலும், நம் விருப்பப்படியே நாம் எண்ணுவன அனைத்தும் முடிவதில்லை. இடைப்படும் இடையூறுகளும் தடைகளும் நம்மைக் கவலைகொள்ள வைத்துவிடுகின்றன. இவற்றை எப்படி நீக்க முடியும்? அது நம்முடைய ஆற்றலுக்கு உட்பட்டதாக இருந்தால் நாம் அதைப்பற்றிக் கவலைப்படவே மாட்டோம். ஆனால், நம்மால் வருங்காலத்தைச் சிந்திக்க முடிவதில்லை. எதிர் காலத்தில் வருகின்ற இடையூறுகளை வராமற் காப்பதற்கும் நம்மால் இயலாது. ஆனால், நமக்கு அத்தகைய தகுதியுடைய ஒப்பற்ற துணை வேண்டும். இந்தத் துணையாக இருக்கக் கூடியவன் விநாயகப் பெருமான் ஒருவனே ஆவான். விக்கினங்களைப் போக்கி அருளுகின்ற தனிச் சிறப்பு உடையவன் அவன்! அதனால், அவன் மீது பொறுப்பைச் சுமத்திவிட்டு நாம் நம் வேலையைக் கவலையின்றித் தொடங்கலாம். இந்த முறையிலே, களிற்று முகவனைப் போற்றுகின்ற செய்யுள் இந்தக் கடவுள் வாழ்த்து ஆகும்.

நெற்றியில் மூன்றாவதாகிய ஒரு கண்ணினைக் கொண்ட தலையினையுடைய பெருமான் விநாயகன். அண்டத்தையே தன் வடிவமாக உடையவனும் அவன். அனைத்துக்கும் மூலமாக அமைந்தவனும் அவன். நஞ்சு பொருந்திய கழுத்தினனான சிவபெருமான் பெற்றெடுத்த யானை முகவனும் அவன். அவன்தான் நமக்குத் துன்பம் வராமற்படிக்குக் காக்கக் கூடியவன். அவனையே நாம் துணைகொள்ளல் வேண்டும்.

அவனைத் தொழுது போற்றி வேண்டினாற் போதும், அருட்கடலான அவன் நமக்குத் தவறாது அருள்பாலிப்பான். அப்போது, நாம் எண்ணும் பொருள்கள் எல்லாவற்றையுமே செவ்வையாக முடித்துவிட அவன் நமக்கு உதவி செய்வான். அத்துடன், இவ்வுலகிற் பொருந்தியுள்ள கலைகள் அனைத்தையும் நமக்குத் தந்தும் அவன் உதவுவான்.

இந்த நம்பிக்கையோடு ஆனைமுகவனை வழிபட்டுப் போற்றுகின்றனர் ஆசிரியர். செய்யுள், அவருடைய நம்பிக்கையின் உறுதிப்பாட்டுடன் கம்பீரமாக அமைந்திருக்கிறது.

**எண்ணும் பொருளினிதே எல்லாம் முடித்தெமக்கு**
**நண்ணும் கலையனைத்தும் நல்குமால்-**
**கண்ணுதலின்**
**முண்டத்தான் அண்டத்தான் மூலத்தான் ஆலஞ்சேர்**
**கண்டத்தான் ஈன்ற களிறு.**

நாம் பெறுவதற்கு எண்ணுகின்ற பொருள்கள் எல்லாவற்றையும், இனிதாக வந்தடையுமாறு முடிவுபெறச் செய்து உதவுபவன் ஆனைமுகன்.

அத்துடன், இவ்வுலகத்தே பொருந்தியிருக்கும் கலைகள் அனைத்தையும் நமக்கு ஒருங்கே தந்து அருள்பவனும் அவன்.

இதனால், நாம் எடுத்துக் கொண்ட செயல் எண்ணியபடி முடியுமோ முடியாதோ என்று கவலைப்பட வேண்டியதுமில்லை. அதனை முடிக்கும் ஆற்றல் நம்மிடம் இருக்கிறதோ இல்லையோ என்று நாம் தளர்ச்சி கொள்ள வேண்டியதுமில்லை. நாம் செய்ய வேண்டியதெல்லாம் ஆனைமுகவனை வேண்டிப் பணிவதுதான். பிறவற்றை அவனே கவனித்துக் கொள்வான். இந்த உறுதியோடு செய்யுள் இலங்குகின்றது.

இப்படி உதவுகின்றவன் யாவன்? இவன் யாவனென்று தெரிந்தால், நாமும் கவலையற்று இருக்கலாமே? அதனையும் செய்யுள் உரைக்கின்றது.

அவன் நெற்றிக்கண்ணை உடைய தலையினைக் கொண்டவன். 'நெற்றிக்கண்ணினைத் திறந்து நோக்கினாலே எதிரிடும் இடையூறுகள் சாம்பராகி அழிந்துபோம். அதனால் அவனைத் துணைக்கொள்வது, நமக்கு அளவற்ற வலிமையாளனின் துணையைக் கொண்டது போன்ற மன நிம்மதியைத் தரும்.

அவன் அண்டத்தான்; பிரணவ ரூபனாகிய பெருமான் அவன். அதனால், அனைத்தும் அவனுள் அடங்குவன. ஆகவே, அவனால் இயலாததும் இல்லை; அவ்ன் அறியாததும் இல்லை.

அவன் மூலத்தான். ஆதி பரம்பொருளே அவன்தான். அதனால் அவனைத்தவிர நமக்கு உறுதுணை வேறு எதுவுமே இல்லை.

அவன், ஆலஞ்சேர் கண்டத்தான் ஈன்ற களிறு. பிறரை அழிக்கின்ற ஆலத்தைத் தானுண்டு, பிறரைக் காத்த அருளாளன் சிவபிரான். அந்த நஞ்சின் கொடுமை கூட அவனைச் சேர்ந்ததும் குன்றிப் போகின்றது. கழுத்திலே நீலக்கறையாக அமைந்து, அவனுக்கு அது அழகும் செய்கிறது. அவன் ஈன்ற களிறுதான் இவன்.

இதனால், அவனுடைய குடிப்பெருமையும் விளங்கும். கருணைக் கடலான தகப்பனுக்குப் பிறந்த மகன் கருணை யற்றவனாகவா இருப்பான்? மகன் தந்தையைப் போன்ற வனாகவேதான்; கருணையாளனாகவேதான் திகழ்வான்.

இதனால் ஆனைமுகவனைக் காட்டிலும், நமக்கு உதவுகின்ற ஆற்றலும் அருளும் உடையவர் வேறு யாருமில்லை; அவனே உதவும் தகுதியுடையவன்; அவனே உதவும் கருணை கொண்டவன்; அவனைப் போற்றி அவனருளையே வேண்டுவோம். இவ்வாறு அறிவுறுத்துகின்றது செய்யுள்.

இந்தச் செய்யுளின் அமைதி, இதனைச் செய்தவர், பிற்காலத்தவராக இருக்கலாம் என்ற ஐயத்தை தருகின்றது. எனினும் சிறப்பாக பொருட்செறிவுடன் திகழ்வதால் நாம் இதனை மனங்கொள்வோம்.

# 1. குறிஞ்சி வளம்

**குறிஞ்சி நிலத்தவர்களிடையே நிகழ்ந்த களவுறவின் தொடர்பாக வளர்ந்த தலைவன் தலைவியரது உள்ளத்து நினைவுகளைக் கூறுவது இப்பகுதி.**

## 1. இடை நின்ற புணை

ஒரு தலைவனும் தலைவியும் தம்முள் தாமே கண்டு, காதலித்துக், களவு உறவிலேயும் கூடித் திளைத்து மகிழ்ந்து வருகின்றனர். இருவரும் மலைநாட்டைச் சேர்ந்தவர்கள். மலைநாட்டுக் குன்றவரிடையே மதிப்புடன் விளங்கிய பெருங்குடியினைச் சேர்ந்தவர்களாகவும் அவர்கள் இருந்தார்கள்.

பொதுவாகக் குன்றவர் குலத்தாரிடையே அந்த நாளிலே நிலவிய பழக்க வழக்கங்கள் இந்தக் கூட்டுறவுக்கு ஓரளவு உதவியாக இருந்தன. குலமரபுப்படி, அவள், தன் தோழியருடன் தினைப்புனங் காவலுக்குச் சென்றாள்; அவனும் தன் குலமரபுப்படி காட்டிடத்தே வேட்டையாடச் சென்றான். அங்கேதான் இவர்கள் சந்தித்தனர்.

ஊழின் வலிமை பெரிது. உழுவலன்பின் தொடர்போ மிகவும் நெருக்கமானது. அதனால், அவர்கள் தம்முள் தாமே ஒருவரை ஒருவர் காணவும், கண்டதும் ஒருவர்பால் ஒருவர் உள்ளத்தை இழந்து பித்தாகி நிற்கவும் நேரிட்டது.

பருவத்தினது மலர்ச்சியுடனும், குடும்பத்தினது செழுமையினாலே போற்றி வளர்க்கப்பட்ட கொழுமையுடனும், இயற்கையின் அருளாலே வந்தடைந்த எழிலின் மிகுதியுடனும் அவள் அங்கே அணங்கென நின்றிருந்தாள். அவளுடைய உருவந்தான் அவனை முதலில் கவர்ந்தது என்றாலும், அந்தக் கவர்ச்சியுடன் மட்டுமே அவனது காதல் வேகம் நின்றுவிடவில்லை. உழுவலன்பினது நெருக்கத்தால், அவன் உயிர் அவளை நாடிச் சென்று அவளோடு கலந்து விட்டது. அவன் நிலை தளர்ந்து நின்றான். அவளையே நினைத்தான். வந்த

செயலும், தன் குடியது பெருமையும், தன்னுடைய ஆண்மையும் அனைத்துமே தோற்றான். அவற்றையெல்லாம் இழந்து, அந்தக் குமரியின் நினைவிலேயே தன்னை மறந்தான்.

அந்தக் குமரியின் நிலையும் ஏறக்குறைய அப்படித்தான் இருந்தது. அவன் யார்? எந்த ஊரவன்? யார் பெற்ற மகன்? இப்படிப் பட்ட எண்ணங்கள் அவளிடம் எழவே இல்லை. அவனைக் கண்டதும், தான் அவனுக்கு உரியவள்; அவனே தன் நாயகன்; இந்த ஒரே நினைவுதான் அவளிடையே நிரம்பி வழிந்தது.

இப்படித் தொடங்கிய சந்திப்பு, படிப்படியே வளர்ந்து களவுறவாகப் பரிணமித்தது. இருவரும் தனித்துக் கூடிக் கரவாக இன்புற்றனர். இந்தக் கூட்டம் எளிதில் வாய்ப்பது மிகவும் கடினமாக இருக்கவே, தலைவன், தலைவியுடைய உயிர்த் தோழியின் உதவியை நாடினான். அவளும், தலைவனைத் தன் தலைவிக்கு உரியவனாதற்கு வேண்டிய தகுதிகள் எல்லாம் கெண்டவனாதலைத் தெரிந்தபின், அவனுக்கு ஒத்தாசையாக இருக்கலானாள்.

தோழியின் உதவி கிடைத்த பின்னர், காதலர்களின் சந்திப்பும் ஓரளவுக்கு எளிதாகவே நிகழ்ந்துவரலாயிற்று. அவர்களுடைய அளவிறந்த அன்பினையும், காதற் பெருக்கினையும் தோழி அறிந்தவள். அதனால், அவளுடைய உள்ளமும் மிகவும் மகிழலாயிற்று.

இப்படிக் தொடர்ந்து நடந்துகொண்டே போன களவு உறவுக்கும், இடையில் சிக்கல் ஏற்படத் தொடங்கிற்று. தினைக்கதிரின் அறுவடைக்குரிய நாள் நெருங்க நெருங்கத் தோழியின் மனத்திலே கவலை தோன்றிற்று, நாளுக்குநாள் அது வளரலுமாயிற்று.

தலைவன் தலைவியர் இருவரும் உலகை மறந்து ஒழுகினர். அவர்கட்கு அவர்களுடைய ஒருமைப் பாட்டைத் தவிர வேறு நினைவே எழவில்லை. தலைவனுடைய உள்ளமும் அந்தக் களவு உறவிற்கு அடுத்தபடியாகத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய திருமண முயற்சிகளைப் பற்றி எண்ணவில்லை; தலைவியும் அதைப் பற்றி நினைக்கவில்லை.

"தலைவிக்கு அவன் எல்லாவகையிலுமே பொருத்தமானவன்தான். இருந்தாலும், அவர்களுடைய

திருமணம் நடந்தால் தானே நமக்கு நிம்மதி. நாளைக்கோ, இரண்டு நாட்களிலோ, தினைக் கதிரைக் கொய்துவிட்டனர் என்றால், அதன்பின்அவர்கள் சந்திப்பது இயலாததாகி விடுமே! தலைவியை வீட்டோடு வைத்துவிடுவார்களே! அவனால் அங்கு வரவும் முடியாது; வந்தாலும் அவளைச் சந்திக்க இயலாது. அடக்க முடியாத காதல் வேகத்தினாலே அவனும் ஒருக்கால் வந்துவிடத் தலைவியும் பிரிவினது துயரைப் பொறுக்க மாட்டாதவளாகி அவனைச் சென்று கூடுவதற்குத் துடித்தனளானால், அப்போது எத்தகைய விபரீதமான விளைவுகள் ஏற்படும்?" இப்படி எல்லாம் தோழி எண்ணலானாள்.

"இன்று இவளைச் சந்திக்க வாய்ப்பு எளிதாக இருக்கிறதனால் தொடர்ந்து வருகின்ற இவன், நாளைக்கு இவள் வீட்டிலே காப்புடன் இருக்கின்றதனை உணர்ந்து வராமலேயே இருந்து விட்டால்?" இப்படி நினைத்ததும், தோழியின் உள்ளம் மிகவும் பதறியது. அவர்களுடைய உறவினை நிலையான ஒரு திருமண உறவாக்கித் தன் கவலைகளை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்துவிட அவள் முடிவு செய்தாள். இந்த முடிவுக்குப்பின், அவளிடத்தே புதியதொரு ஊக்கமும் தெளிவும் பிறந்தது.

வழக்கம் போன்றே அன்றும் தலைவன் வந்தான். தலைவியை அவன்பாற் சேர்த்தபின் ஒதுங்கி நின்ற தோழி, அவன் தன் ஊருக்குச் செல்லுவதற்கு மீண்டபோது, அவனை எதிர்கொண்டு வாழ்த்தினாள். தன் கருத்தையும் நயமாகத் தெரிவிக்கின்றாள். தான் சொல்லக் கருதியதை வெளிப்படையாகச் சொல்லாமல் குறிப்பாக, இனிமையுடன் உணர்த்துகின்றாள்.

"ஒரு தினைப்புனத்திலே பசுமையான கதிர்கள் செழுமையாகத் தோன்றியுள்ளன. அவரைக் கொடிகள் அத் தினைப் பயிரின்பால் படர்ந்து விளங்குகின்றன. பசுமையோடு விளங்கும் அந்தப் புனத்தைக் கண்டது ஒரு கவரிமான். அது இளமையின் முறுக்குடன் விளங்கிய மலைமானும் ஆகும். அதன் கண்கள் அப்போது ஆசையினாலே மலர்ந்தன. மெள்ளக் காவலர் அறியாதே புனத்துட் புகுந்த தினைப்பயிரை அது மேயத் தொடங்கிற்று."

"இப்படிக் கவரி மடமான் மேய்கின்ற, படர்ந்த மலைச்சாரல்களைக் கொண்ட, கானக நாடனே" என்று

பேச்சைத் தொடங்குகின்றாள் அவள். அவளுடைய சொற்கள் தாம் எவ்வளவு ஆழமாகப் பொருள் பொதிந்தவையாக விளங்குன்றன!

'தோழியரோடு பொருந்தி, மலைச்சாரலிடத்தே பசுமையான பயிரைப்போலக் கவர்ச்சியுடன் விளங்கிய தலைவியைப் புனங் காவலர் அறியாதே, களவிலே துய்த்து இன்புற்றவனே!' என்று சொல்லாமற் சொல்லும் தோழியது அறிவுநுட்பத்தை என்னென்பது?.

"விளங்கும் அணிகளைக் கொண்ட தலைவிக்கும் நினக்கும் இடையே யான் புணையாக நின்றதை மறந்து விடாதே", என்று மட்டும் சொல்லி அமைகின்றாள் அவள்.

"இருவருக்கும் இடையிலே புணையாக நின்று கூட்டுவித்த உதவியை மறந்துவிட வேண்டாமாம். அதற்கு நன்றியாக, அவளை விரைவில் மணந்துகொண்டு, அவள் கவலையைப் போக்குதல் வேண்டுமாம்." குறிப்பாக இப்படியும் வலியுறுத்துகின்றாள் அவள்.

இளமைப் பருவத்தாரிடையே நிகழ்கின்ற இந்த நயமான உறவையும், அதன் முத்தாய்ப்பாக அமைந்த தோழியது இந்தச் சொற்களையும், அதனை உணர்ந்து நின்ற தலைவனது அறிவு நலத்தையும் எண்ணும்போது, மூவாதியரின் உள்ளத்தே இன்பவுணர்வு பொங்குகின்றது. அவர் பாடுகின்றார்,

**அவ்வரை பொருந்திய பைங்குரல் ஏனல்,**
**கவரி மடமா கதூஉம், படர்சாரல்**
**கானக நாட! மறவல், வயங்கிழைக்கு**
**யான், இடைநின்ற புணை.**

தோழியின் பேச்சினை இப்படி அழகாகச் செய்யுளாக்கி இன்புறுகின்றார். அரிதான அந்த நயம், நம் நினைவுகளை அந்தக் காட்சியோடு கலந்துநின்று வியக்கத் தூண்டுகின்றது.

"அவரை பொருந்திய கதிரையுடைய பசுந்தினையைக், கவரி மடமா கதுவாநின்ற, படர்ந்த சாரலினையுடைய கானக நாடனே! வயங்காநின்ற அணியினை உடையாளுக்கு யான் நடுவுநின்ற புணையினை மறவாது நினைப்பாயாக" என்பது செய்யுளின் பொருள்.

## 2. வாடல் மறந்தன!

இந்தக் காலத்திலே, பெற்றோர்கள், தம் பெண்ணுக்கு ஏற்ற மாப்பிள்ளையைத் தேடுவதற்கு மிகவும் தொல்லைப் படுகின்றார்கள். ஏற்றவனாக ஒருவன் கிடைத்தால் மட்டும் போதாது, அவனுக்கு மாப்பிள்ளை விலை வேறு தாராளமாகக் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. குடும்பங்களின் செல்வ நிலைமைக்கு ஏற்ப இந்த மாப்பிள்ளை விலையும் கூடிக்கொண்டே போகும். . மாப்பிள்ளையின் கல்வி தொழில் முதலிய தகுதிக்கு ஏற்பவும், தொகை உயரும். சில சமயங்களில் இந்த விலை பலவாயிரம் ரூபாய்களாக விளங்குவதும் உண்டு.

இதனைத் தடுக்கச் சட்டமும், சான்றோரின் அறிவுரைகளும் எழுந்தன. அவற்றால் ஒருவிதமான பயனும் ஏற்பட்டதாக நம்மால் பெருமைப்பட முடியவில்லை. பணம் இல்லாத காரணத்தால் கிளிபோன்ற கன்னியரையும் மணஞ்செய்து தருவதற்கு ஒரு வழியின்றி வாடுகின்றவர்களைத் தான் நாம் உலகில் காணுகின்றோம். ஆனால், நம் நாட்டின் நிலைமை முன்காலத்திலே இப்படி இருக்கவில்லை. பெண்ணுக்கு 'முலைவிலை' கொடுக்கும் வழக்கமே அந்நாளில் இருந்திருக்கின்றது. சிலரிடையே, இன்றைக்கும் இப்படி ஒரு வழக்கம் இருப்பதாக நண்பர்கள் கூறுகின்றனர்.

இந்த 'முலைவிலை' என்பது ஏன் ஏற்பட்டது? எப்படி ஏற்பட்டது? இதனைப்பற்றி எதனையும் நம்மால் தெளிவாக ஆராய்ந்து உரைக்க முடியவில்லை. பழைய கால நாகரிகத்தில் ஆணும் பெண்ணும் உழைப்பாளிகளாகவே விளங்கினர். ஒரு குடும்பத்தில் பிறந்த பெண், அந்தக் குடும்பத்திற்கு உதவுபவளாக இருப்பாள். குடும்பத்தின் பலவகையான வேலைகளில் அவளும் கலந்துகொண்டு உழைத்து வருவாள். திருமணத்திற்குப் பின் அவள் தன் கணவனுடன் போய்விட நேர்வதனால், அவள் பிறந்த குடும்பத்திற்கு உழைப்பவருள் ஒருவர்குறைவர். இதனை ஈடுசெய்யவே 'முலைவிலை' என்று ஒரு தொகையை, அவளைப் பெற்றோருக்குத் தருகின்ற பழக்கம் நம் நாட்டில் ஏற்பட்டிருக்கலாம்.

இப்படி ஏற்பட்ட பழக்கம் காலப்போக்கில் ஒரு சமூக மரபாகி நிலை பெற்றிருத்தலும் கூடும். இதனால், முலைவிலை

கொடுப்பதற்கான பொருள் தேடுகின்ற முயற்சியொன்றும், இளைஞர்களுடைய வாழ்வில் அக்காலத்தே ஏற்பட்டிருந்தது.

நம் முன்னோர்கள் மிகவும் நுட்பமாகச் சமூகவியலை வகுத்து, அதனை மேற்கொண்டு வாழ்ந்திருக்கின்றனர். ஆண்மகன் ஒருவன், இந்த முலைவிலைக்கு உரிய பொருளைத் தானே ஈட்டிக் கொணர்தல்தான் சிறப்பாக அந்நாளிலே மதிக்கப் பெற்றது. பெற்றோர்கள் கொடுப்பதனை எந்த இளைஞனும் ஏற்கமாட்டான். அது ஆண்மைக்குரிய செயலன்று. இள்ளஞனான அவன், ஒருத்தியை மணந்து அவளோடு குடும்பம் நடத்த வேண்டும் என்றால், அந்தக் குடும்பத்தின் நல்வாழ்விற்கு வேண்டிய பொருளினை ஈட்டுவதற்கான திறமை அவனிடம் இருக்க வேண்டாமா? அவனுடைய இந்தத் திறமையைச் சோதிப்பதற்கு ஒரு நல்ல வழியாகவும் இந்த மரபு அந்நாளிலே உதவிற்று.

களவிலே உறவாடிக் களித்த தன்னுடைய காதலியை மணந்து இல்லறம் பேணுவதற்கு விழைகின்றான் காதலன். அவள்பால் பிரியா விடைபெற்றுப் பிரிந்து, வேண்டிய பொருளினைச் சம்பாதித்து வருவதற்கு வேற்றுநாடு நோக்கியும் போய்விடுகின்றான்.

'தன் காதலன், பொருளோடு விரையவந்து தன்னை வரைந்து மணந்து கொள்ளப் போகின்றான்' என்ற பூரிப்புத் தலைவிக்கு ஒரு புறம் இருந்தாலும், அவனைப் பிரிய வேண்டுமே என்ற வருத்தமும் இல்லாமல் இல்லை. பிரிவுத் துயரினைப் பொறுத்துக் கொள்ள முயன்றாலும், அது நாளுக்கு நாள் மிகுந்துகொண்டே போயிற்று. இந்த நிலையிலே காலமும் வறிதே கழிந்துகொண்டு போகின்றது.

ஒரு நாள், தலைவனுடைய குடும்பத்தைச் சார்ந்த பெரியோர்கள், தலைவியை மணம் பேசும் பொருட்டாகத் தலைவியது இல்லத்திற்கு வருகின்றனர், தலைவியின் வீட்டாரைச் சந்தித்துத் தங்கள் கருத்தைத் தெரிவிக்கின்றனர். உரிய முலைவிலைப் பொருளையும் கொணர்ந்து அவர்களிடம் தருகின்றனர்.

தலைவியின் பெற்றோரும் உறவினரும் அந்தத் திருமண உறவைப்பற்றிய பலவகையான தன்மைகளையும் ஆராய்ந்தனர்.

அதன் பின்னர், தலைவியை அவனுக்கு மணஞ்செய்து தருவதற்கும் இசைகின்றனர்.

இந்த நிலையினாலே தலைவின் களிப்புக் கரைபுரண்டு பெருகுகின்றது. அவளுடைய உள்ளக் களிப்போடு உடலும் ஒருவிதப் புதுப் பொலிவினைப் பெறுகின்றது. அந்த மகிழ்ச்சியோடு விளங்கும் அவளைக் கண்டதும், தோழிக்கு உற்சாகம் பிறக்கிறது.

"ஏனடீ! நின் காதலன் இன்னமும் வந்து நின்னைத் தழுவவில்லையே! அதற்குள்ளாகத் திடீரென நின் மேனியிற் புதுப்பொலிவு தோன்றுவது ஏன்? நின்னுடைய தோள்களின் வாட்டமெல்லாம் போயினவிடம் தெரியாதபடி மறைந்ததும் எதனால்? அந்த இரகசியத்தை எனக்கும் சொல்லடி" என்று அவள் கேட்கின்றாள்.

"அப்படி எதுவும் இல்லையே" என்று முதலில் சொன்னாலும், தலைவியின் உள்ளத்து உவகையானது பொங்கி வழிகின்றது. கண்களிலே புதிய ஒளியெழுந்து வீசத் தொடங்குகின்றது. இதழ்க் கடையிலே இன்பநகை நெளிந்தோடுகின்றது. 'நாடன் நயமுடையன் என்பதனால், தோள் வாடல் மறந்தன' என்கிறாள் அவள்.

இந்தக் காட்சி மூவாதியரது உள்ளத்தினைக் கவர்ந்தது, அவர்,

**கொல்லைப் புனத்த அகில்சுமந்து கல்பாய்ந்து**
**வானின் அருவி ததும்பக் கவினிய**
**நாடன் நயமுடையன் என்பதனால் நீப்பினும்**
**வாடல் மறந்தன தோள்.**

என்று பாடுகின்றார்.

"மிகவுயரத்தே நின்றும் வீழ்ந்து வருகின்ற அருவி நீரானது, தோட்டமாகிய தினைப்புனத்தின் கண்ணே உளவான அகிற்கட்டைகளைச் சுமந்துகொண்டு வருகிறதாம். எங்கணும் அந்த வெள்ளம் கரைபுரண்டு செல்கிறதாம். அதனால் காடெல்லாம் அழகுமிகுந்து விளங்கா நிற்குமாம்."

"இத்தகைய கானத்திற்குரிய தலைவன் அவன். அவன் சொன்ன சொல் தவறாத நற்பண்பினை உடையவன். இதனால்,

அவன் பிரிந்து போயினாலும், தலைவியின் தோள்கள் தாம் வாடுதலை மறந்தே இருந்தனவாம்." இப்படி உரைக்கின்றாள் தலைவி.

இதன்கண் அமைந்த சிறப்பை நாம் நன்றாகக் கவனிக்க வேண்டும்.

## 3. அலையும் அலைபோயிற்று

ஒரு கன்னிப் பெண் வீட்டிலே இருந்தால், அந்த வீட்டாருக்குத் தூக்கமே பிடிக்காது. 'அவளுக்கு ஏற்ப ஓர் இளைஞனைக் கண்டு பிடித்து, அவளுடைய திருமணத்தைச் சிறப்பாக நடத்த வேண்டுமே' என்ற கவலைதான் அவர்களிடம் நிலவும்.

கன்னியர் காளையரைக் கண்டிருக்கலாம். தக்கவன் ஒருவனைக் காதலித்தும் இருக்கலாம். ஆனால், அவர்கள் அந்தக் காதல் உறவினாலேயே குடும்பத்தவராகி விட இயலாது. பல நூற்றாண்டுகளுக்கு முன்னரும், நம் தமிழர் சமுதாயத்திலே இந்த நிலைதான் இருந்தது. இன்றும் பெரும்பாலும் இதே நிலைமைதான் இருந்து வருகின்றது.

பெற்றோர்களின் இசைவுடன், ஊர் அறிய, உறவினர் கூடி வாழ்த்தத் திருமணம் நிகழ்தல் வேண்டும். திருமண நிகழ்விற்குப் பின்னர்தான், அவர்களைக் கணவன் மனைவியராகச் சமூகம் ஏற்றுக்கொள்ளும்.

ஆகவே, காதல் என்ற உறவு சமூகத்தின் முத்திரையோடு திருமணமாக உறுதி பெறாத வரை, களவு உறவாகவே, பிறர் அறிந்தால் பழித்துப் பேசும் உறவாகவே, அந்த நாளிலும் இருந்திருக்கிறது; இன்றும் இருந்து வருகின்றது.

ஆனால், இயற்கை எப்போதும் பெரிதான ஆற்றல் கொண்டது. அது சமூகக் கட்டுத் திட்டங்களைக் கொஞ்சமும் பொருட்படுத்துவதே இல்லை. இளைஞரையும் கன்னியரையும் தூண்டி விட்டுக் காதலிக்கச் செய்து, அது வேடிக்கை பார்க்கின்றது.

இப்படி, இயற்கையின் பிடியிலே சிக்கிக் காதல் நோயிலே உழன்று வந்தாள் ஒரு நங்கை. காதல் மலர்ந்த பின் வீட்டில்

கண்டிப்பும் வளர்ந்தது. அவளுடைய போக்கிலே மாறுதலைக் கண்ட தாய், அவளை வீட்டை விட்டுச் செல்லாதபடியும் தடுத்துவிட்டாள். அவளுடைய நிலைமை தர்ம சங்கடமான ஒரு நிலைமை ஆயிற்று.

காதல் நோய் ஒருபுறம் அவளை வருத்துகின்றது. அதனை வெளியே சொல்லமுடியாது, நிறையும் நாணமும் வேலியிட்டுவிட, அவள் செய்வதறியாது திகைத்து, நாளுக்கு நாள் நலிகின்றாள். அன்னை அறிந்தால், அதனால் வரும் விபரீதங்களை நினைத்துப் பார்க்கவே அவளால் முடியவில்லை. காதலனைச் சந்திப்பதும் மிக மிகக் கடினமாக இருந்தது. இந்த நிலையிலே அவள் ஏக்கத்தால் தளர்ந்து சுடுமூச்சு எறிந்தவளாக மெலிவுற்று வந்தாள்.

மகளின் நிலையினைக் கண்டதும் தாய் பதைபதைக் கிறாள். திருமண ஆசை வந்துவிட்டது என்பதை உணர்ந்த அவள் விரைவிலே தன் மகளுக்குத் திருமணத்தை நடத்திவிட முயலுகின்றாள். த்க்க வரனைத் தேடியும் அலைகின்றாள்.

இப்படிப்பட்ட நிலைமையிலேதான், தலைவியுடைய காதலனின் வீட்டார் வந்து, அவனுக்கு அவளைத் திருமணஞ் செய்து தருமாறு, தலைவியின் பெற்றொரிடம் கேட்கின்றனர். அவர்களும், அந்த இளைஞனைத் தங்கள் மகளுக்கு ஏற்றவன் என்றறிந்ததும், அந்த உறவிற்கு இசைந்துவிடத் திருமணமும் உறுதியாகின்றது.

தலைவியின் தோழிக்கு இந்த முடிவைக் கேட்டதும் மகிழ்ச்சி வெள்ளம் கரை புரள்கின்றது, தலைவியிடத்தே சென்று, இந்த நல்ல செய்தியைச் சொல்லுவதற்காக ஒடோடியும் வருகின்றாள்.

'ஏனடீ! இப்படி விழுந்தடித்துக்கொண்டு ஒடி வருகின்றாய்?' என்று தலைவி, தன் தோழியைக் கேட்கின்றாள். அதற்கு அவள், நிகழ்ந்ததை உரைக்கும் முறையிலே அமைந்த நயமிகுந்த செய்யுள் இது.

**இலையடர் தண்குளவி ஏய்த பொதும்பில்**
**குலையுடைக் காந்தள் இனவண் டிமிரும்**
**வரையக நாடனும் வந்தான் மற்றன்னை**
**அலையும் அலைபோயிற் றென்று.**

"இலைகள் அடர்ந்துள்ள, குளிர்ந்த காட்டு மல்லிகைக் கொடிகள் பொருந்தியுள்ள சோலையிடத்தே, கொத்தாகவுள்ள காந்தட்பூவினிடத்தே, வண்டினம் ஆரவாரிக்கும் தன்மையினையுடைய மலையகத்திலிருக்கும் நின் தலைவனது நாடு; அந்த நாட்டிற்கு உரியவனாகிய நின் காதலனும் நம் வீட்டிற்கு இன்று வந்தான். அவன் வரைவோடு வந்தது நினக்கு நல்லதோ இல்லையோ, நம் அன்னை ஓர் இளைஞனைத் தேடி வருந்திய வருத்தம் எல்லாம் இன்றோடு போயிற்று" என்கின்றாள் தோழி.

மூவாதியர், இந்தக் காட்சியிலே உள்ளத்தை இழந்து விடுகின்றார். காட்சி கவியாக எழுகின்றது.

'அன்னை அலையும் அலை போயிற்று இன்று' என்பதால், அன்னையர் தம் மகளிரின் மணவினை நிகழ்வு குறித்து மிகவும் கவலையோடு திகழ்வரென்பது விளங்கும்.

பூக்களிலே மல்லிகைப் பூவிற்கு ஒரு தனித்தன்மை உண்டு. அதன் நறுமணம் இன்பவேட்கையை கிளர்ந்தெழச் செய்யும் என்பார்கள். இங்கே, தலைவனுடைய இன்ப வேட்கை மிகுதியைக் குறிப்பவள், 'இலையடர் தண் குளவி ஏய்ந்த பொதும்பில்' என்கின்றாள்.

காந்தள் மலர்கிறது; அதன் தேனை வண்டினம் ஆரவாரத்தோடு சென்று நுகர்கின்றது. அவ்வாறே மணம் பெறும் தலைவியைக் கூடித் தலைவனும் இன்பத்தை நுகர்வான் என்பதும் குறிப்பாக இதன்கண் சொல்லப்படுகின்றது.

தலைவியிடம் தோழி சொல்லுகின்ற இந்த காட்சியைக் கற்பனை செய்து அநுபவித்துப் பார்க்க வேண்டும். அப்பொழுதுதான், இந்தச் செய்யுளின் பொருள் பொதிந்த நயச் செறிவு நமக்குப் புலனாகும்.

## 4. யாமாகப் பிரியோம்

தலைவியின் உள்ளப் பாங்கினை விளக்குகின்ற காட்சியொன்றையும் நமக்கு மூவாதியர் காட்டுகின்றார். சுவையான இந்தக் காட்சியிலே, தமிழ்க்குடி மகளிரின் தகைசிறந்த கற்புநெறி சுடரிட்டு ஒளிவீசுகின்றது.

தலைவியும் தோழியும் சோலைப்புறமாகத் தனியே போய்க்கொண்டிருக்கின்றனர். தலைவியின் காதலையும் களவு

உறவையும் தோழியும் அறிந்தவள். அத்துடன், அவள், தலைவியைத் தலைவன் சந்திப்பதற்கு வேண்டிய உதவிகளையும் செய்துவருபவள்.

இடையிற் சில நாட்கள், தலைவன் குறித்தபடி தலைவியைச் சந்திக்க வராததால், தலைவியிடம் அந்தப் பிரிவாகிய ஏக்கம் நிறைந்திருக்கின்றது. 'அன்றாவது அவன் வரமாட்டனா' என்ற ஆர்வத்தால், அவள் உள்ளம் பெரிதும் அலைமோதிக் கொண்டிருக்கிறது. அவள் தளர்வோடு போய்க் கொண்டிருக்கின்றாள்.

தலைவன் வாராதிருந்த செயலை நினைக்க நினைக்க, அவன் மீது இல்லாத சந்தேகமும் பொல்லாத ஆத்திரமும் தோழியிடத்தே எழுகின்றன. அவன் தலைவிபாற் கொண்டிருந்த காதலைக்கூட, அதனால் அவள் செறிவற்றதாகக் கருதத் தொடங்கிவிடுகின்றாள்.

அந்த நிலையிலே தலைவனும் வருகின்றான். அவன் வரவினைத் தோழியும் கண்டுவிடுகின்றாள். தலைவியோ அதனைக் காணாதவளாகத் தன் உள்ளத்து ஏக்கத்திலேயே முற்றவும் ஆழ்ந்திருக்கிறாள்.

தலைவனின் பிழையை எடுத்துக் கூறி, அவனைக் கண்டிக்கவும், அதேசமயம் தலைவியை அவனையே நினைத்திருக்கும் ஏக்கத்திலிருந்து தெளிவுகொள்ளச் செய்யவும், தோழி கருதுகின்றாள். தலைவனும் கேட்குமாறு, சற்று உரத்த குரலிலேயே, அவனைப் பழித்தும் உரைக்கத் தொடங்குகின்றாள்.

தலைவன் குறித்தபடி வாராமையால் எழுந்த துயரத்திலே உழன்றாலும்கூடத், தலைவிக்கு அவன்பால் ஏற்பட்டிருந்த காதலன்பு குறைந்துவிடவில்லை. மேலும், அவனையே தன் நாயகனாக வரித்துவிட்ட அவளுடைய உள்ளத்தால், அவனைப் பழித்துரை செய்யும் தோழியினது பேச்சைக் கேட்டு வாளவிருக்கவும் முடியவில்லை. அதனால், தோழிக்கு அவள் தன்னுடைய மனநிலைமையைக் கூறுகின்றாள்.

'தோழி ஊர்மன்றத்துப் பலாமரத்தின், சுளை முதிர்ந்த தித்திப்பான பழத்தினை உண்டு, நீர்வேட்கையுடன் கூடிய

மந்தியானது வந்து, காட்டுப் பசுவினது பால்மடியை வருடும்; அப்போது அந்தப் பசுவும், தன் கன்றிற்குப்போல அன்புபட்டதாகி, அதற்கும் பாலைச் சுரக்கும்; அதனைக் குடித்து மந்தியும் தன் வேட்கை தீரும்.

'இப்படிப்பட்ட அழகிய மலைநாட்டிற்கு உரியவனாகிய நம் தலைவனை, யாமாக ஒருபோதுமே பிரிய மாட்டோம்; ஆதலிற் பழித்தல் வேண்டா' என்கின்றாள்.

தலைவின் இந்தச் சொற்களைக் கேட்டதும் தலைவனது உடல் புல்லரிக்கின்றது. தலைவிக்குத் தன்பாலிருக்கும் காதல் ஆழத்தையும், நம்பிக்கையையும் அவன் புரிந்து கொள்கின்றான். அவளைக் கவலைப்பட வைத்த தன் பிரிவுச் செயலைக் கருதித் தனக்குள் நொந்து கொள்கின்றான். அவளை முறைப்படி விரைவிலே மணந்து கொள்ள வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ளவும் துணிகின்றான்.

'யாமாப் பிரிவது இலேம்' என்பதற்கு, 'யாம் உளேமாகப் பிரிவதிலம்' என்று பொருள் உரைப்பார்கள். அதுவும் பொருத்தமான ஒரு உரையேயாகும்.

தலைவியின் உள்ளச் செவ்வி, மூவாதியரை மிகவும் கவர்கின்றது. அவர் பாடுகின்றார்:

**மன்றத்துப் பலவின் சுளைவிளை தீம்பழம்**
**உண்டுவந்து மந்தி முலைவருடக் - கன்றமர்ந்து**
**ஆமா காக்கும் அணிலை நாடனை**
**நாமாப் பிரிவ திலம்.**

'மந்தி முலை வருட ஆமா சுரக்கும்' என்றாற்போல் அந்நாட்டிற்குரிய தலைவனும் மிகவும் கருணையாளன் ஆவான் என்பதும், தான் மனமுவந்து காதலித்தவளை ஒரு போதும் கைவிட மாட்டான் எனவும், தலைவிகொண்ட மனவுறுதி இதனாற் புலனாகும்.

இந்தச் செய்யுளை 'அளி சிறந்தவழித் தலைவி கூறியது' என்று இளம்பூரணர் சொல்வர்; அதனையும் நாம் நினைவிற் கொள்ளுதல் வேண்டும். 'அளி சிறந்தலாவது' தலைவனது கூட்டத்தால் தலைவி இன்பநலத்தினைத் துய்த்துக் களிகொள்ளல். ஆமா-காட்டுப் பசு.

## 5. நயம் திகழும்

தலைவி அவ்வாறு தலைவன்பாற் கொண்ட காதலது மிகுதிப்பாட்டினை எடுத்துரைத்ததும், அதனைக் கேட்ட தோழி, அது முறைதானே என்று தெளிவு கொண்டவளாகி அமைந்துவிடவில்லை. 'இவ்வளவு காதலன்புடன் திகழும் இவளைப் பெறுப்பில்லாது துயரத்துக்கு ஆளாக்கிய தலைவன் மிகவும் கீழான புத்தியுடையவன்; அவன் சிறந்த பண்பினனே அல்லன்' என்றுதான் அவள் நினைக்கின்றாள். அவளுடைய இந்த நினைவின் வேகம், அடுத்து அவள் உரைக்கின்ற சொற்களிலே வெளிவருகின்றது.

'தோழி நீயோ இப்படியெல்லாம் நம்பிக்கை வைத்திருக்கின்றாய். அவன்பால் உள்ளத்தை இழந்துவிட்ட நீ, பிறரை அளந்தறிகின்ற அறிவுத் திறனையும் இழந்து விட்டாய் போலும்! நின்னுடைய உறவினை, நின்னைப் போலவே அவனும் போற்ற வேண்டாமோ? அதுதானே காதலன்பின் நியதி. ஆனால், அவன் நின்னைத் தன்னுடைய இன்பவெறிக்குப் பயன்படுத்திக் கொள்பவனாக இருக்கின்றானே அல்லாமல், நினக்கு அருளுகின்ற பெருந்தகைமை உடையவனாக விளங்கவில்லையே!

'அவன் நினக்குத் தகுதியானவன் அல்லன். நின் பெருமைக்குப் பொருத்தமற்ற சிறுமதி கொண்டவன் அவன். நின்னுடைய அன்பினைப் பெறுவதற்கு அவன் கொஞ்சமும் அருகதையற்றவன். அதனால், அவனை மறந்துவிடு' என்கின்றாள்.

தோழியின் சொற்களைக் கேட்டதும், தலைவன் மனத்திலே வேதனை படர்கின்றது. தன்னுடைய பிழையினை நினைக்கின்றான். தடுக்க முடியாத சூழ்நிலையால் தான் வாராது போயினும், அதனால், எத்தகைய விபரீத விளைவுகட்குக் காரண மாக நேர்ந்ததென்பதை நினைத்து வேதனைப் படுகின்றான்.

தோழியின் பேச்சைக் கேட்டதும், தலைவியின் உள்ளத்திலே பெரிதும் வேதனை படரத் தொடங்குகின்றது. அவள் கற்புச் செல்வியாதலால், தன் மனம் நிறைந்த தலைவனைத் தன் தோழியே பழித்துப் பேசுவதனைக் கேட்டதும் துடிதுடிக்கின்றாள்.

ஆனால், தோழியின் பழிப்புரை, தன்மேற் கொண்ட அன்பினால், தான் படுகின்ற பிரிவுத் துயரைக் காணச் சகியாமையினால் ஏற்பட்டது என்பதனையும் அவள் அறியாமல் இல்லை. அதனால், தன் தோழிக்கு மீண்டும் சமாதானம் கூறவே முற்படுகின்றாள்.

'தோழி சான்றாண்மையாளரது நட்பு என்றும் சிதைவுறுவதில்லை. நிலைபெற்று வலிமை பெறுதலையே செய்யும். பின்னரும், அது நமக்குப் பேரின்பநலத்தையும் தருவதாயிருக்கும். இந்த உண்மையை நீ மறந்து விடாதே.'

'நீர் நிலைகளால் வளத்துடன் காணப்படும் பூஞ்சோலைகளையுடைய மலைநாட்டைச் சேர்ந்தவன் நம் தலைவன். அவனும் சான்றாண்மை குன்றாதவன். அவன் நட்பானது குறைபடுதலின்றி இன்பம் மிகுந்ததாகவே விளங்கும். இப்படித்தான் என் நெஞ்சம் சொல்லுகின்றது. அதனால், அவன் உறவை இகழ்ந்து உரையாதே. அதனை என்னாற் கேட்டுப் பொறுத்திருக்க முடியவில்லை' என்கின்றாள்.

தலைவியின் உள்ளத்தை வெளிப்படுத்தும் அந்தச் சொற்களைத் தலைவன் கேட்கின்றான். தான் அடைந்த காதலியின் பெண்மையை நினைந்து பெருமிதம் கொள்ளுகின்றான். தன்னைப் பழித்த தோழியை வெறுப்பதற்குப் பதிலாகத் தன் காதலியின் உள்ளத்தைப் புரிந்து கொள்ளச் செய்த பேருதவிக்காக, மனங்கலந்து போற்றுகின்றான்.

இந்தக் காட்சியை நினைக்கின்ற மூவாதியர், தலைவியர்பால் எத்தகைய மனத்திண்மை நிலவவேண்டும் என்ற இல்லற நிலைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டினைக் காண்கின்றார். அந்தத் தலைவியைப் போலவே ஒவ்வொரு இல்லத்தலைவியும் அமையவேண்டும் எனவும் விரும்புகின்றார். அவர் உள்ளம் பாடுகின்றது. தலைவியின் பேச்சு அந்தப் பாடற் பொருளாகி நம்மை இன்புறுத்துகின்றது.

**சான்றவர் கேண்மை சிதைவின்றாய் ஊன்றி**
**வலியாகிப் பின்னும் பயக்கும்; மெலிவில்**
**கயந்திகழ் சோலை மலைநாடன் கேண்மை**
**நயந்திகழும் என்னும்என் நெஞ்சு.**

'மெலிவில் கயந்திகழ் சோலை மலைநாடன் அவன். ஆகவே, அவன் நம்மையும் மெலிவுறச் செய்தல் இலன். அவன்

கேண்மை நயந்திகழும் என்னும் என் நெஞ்சு. சான்றவர் கேண்மை சிதைவின்றாய், ஊன்றி வலியாகிப் பின்னும் பயக்கும்' என்றெல்லாம் உரைக்கின்ற தலைவியின் உளப்பாங்கினை நாமும் வியந்து போற்றுதல் வேண்டும்.

இந்த மனவுறுதி பெண்ணிடத்து நிலைபெற்று விடுமானால், அங்கேதான் இல்லறவாழ்வு இனிமையின் ஏற்றத்துடன் பொலிவுறும் .என்பதனையும், நாம் மனங்கொள்ளல் வேண்டும்.

## 6. இன்னுயிர் தாங்கும் மருந்து

தலைவன் தலைவியரின் களவொழுக்கம் நாள் தவறாமல் நடந்து வருகின்றது. இன்பத்தின் எக்களிப்பினாலே, அவர்களிருவரும், உலக நினைவை இழந்தவராகி, அந்தச் சிந்தனைய்யை அறவே மறந்து ஒன்றுபட்டுப், பித்தாக நடந்து வருகின்றனர். இவர்களுடைய இந்த நிலையைக் கண்டு, பின் விளைவுகளை நினைந்து, பெரிதும் கவலை கொள்ளுகின்றாள் தலைவியின் தோழி.

எப்படியும் தலைவனைக் கண்டு, விரைவிலேயே தலைவியை வரைந்துவந்து மணந்து கொள்வதற்குத் தூண்டுதல் வேண்டுமென்று தோழி கருதுகின்றாள். அதனால், அன்று தலைவியைக் கூடியவனாக, அந்த இன்பச் செழுமையிலே திளைத்தவனாகப், பிரியா விடை பெற்றுப் பிரிந்து தன் ஊருக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் தலைவனை, எதிரே வந்து நின்று கண்டு, தன் கருத்தை வெளியிடுகின்றாள்.

வெளிப்படையாகச் சொல்லாமல், மிகவும் நயமாக அவன் உள்ளம் புண்பட்டு விடாத படியும், அதேசமயம் அது வரைவு வேட்கையினைக் கொள்ளும்படியும், தோழி மிகவும் திறமையாகவே தன் பேச்சை நிகழ்த்துகின்றாள்.

"பொன்போன்ற பூங்கொத்துக்களை உடைய வேங்கை மரங்கள் மணத்தை நிறைத்துக் கொண்டிருக்கும் குளிர்ந்த சோலைகளையுடைய மலைநாடனே' என்று, தலைவனை விளிக்கின்றாள்.

'வேங்கை பூக்கின்ற காலம் மணம் பேசுதற்குரிய நற்காலமாயிற்றே; நின் காதலியை நீயும் மணந்து கொண்டு

இல்லறம் நிகழ்த்துவதற்கு முயலுதல் வேண்டாவோ?' என்ற அறிவுரையினையே தோழி நயமாக உரைக்கின்றாள்.

"தலைவனே! இவளை மறந்துவிடாதே! விளங்குகின்ற அணிகளை உடையாளான இவளுக்கு, நின்னை அல்லாமல் வேறு துணைசெய்வார் யாரும் இலர். நின் கண்ணோட்டத்தால் தன்னுடைய இனிய உயிரைத் தாங்கியிருப்பவள் இவள். இவள், நின் பிரிவைத் தாளாது படுகின்ற வேதனையைக் கருதிப் பார்ப்பாயாக. அதனைத் தீர்க்கும் மருந்தாகிய திருமணத்தையும் இவளுக்குத் தருவாயாக" என்று மேலும் சொல்லுகின்றாள் தோழி.

தலைவனும் தோழியின் சொற்களால் தலைவியது நிலையினை உணர்கின்றான். தன்னுடைய பொறுப்பினையும் நினைக்கின்றான். அவன் உள்ளமும் உறுதிகொள்ளுகின்றது.

'நீ கவலையுறல் வேண்டா; யான் அதனை விரைவிலேயே மேற்கொள்வேன்' என்று தோழிக்கு உறுதிகூறித் தலைவனும் செல்லுகின்றான்.

தோழிக்குத் தலைவியிடம் விளங்கிய அன்பின் மிகுதியைக் காண்கின்றார் மூவாதியர். அவர் மனம் அந்த அன்புச் செறிவினைப் போற்றுகின்றது.

**பொன்னிணர் வேங்கை கமழும் நளிசோலை**
**நன்மலை நாட! மறவல் வயங்கிழைக்கு**
**நின்னல தில்லையால் ஈயாயோ கண்ணோட்டத்து**
**இன்னுயிர் தாங்கும் மருந்து.**

நளி--குளிச்சி கண்ணோட்டம்--அருளுதல்

'மறவல்; வயங்கிழைக்கு நின்னலது இல்லையால்; கண்ணோட்டத்து இன்னுயிர் தாங்கும் மருந்து ஈயாயோ? என்று வேண்டிநிற்கும் தோழியின் அன்புச் செறிவினை நாமும் போற்றுதல் வேண்டும்.

தலைவனும் தலைவியும் இயற்கைத் தூண்டுதலின் வசமாகி நிற்கின்றனர். அவர்களுடைய பெற்றோர்களோ சமூகத்தின் கட்டு திட்டங்களை மதிப்பவர்கள். இவர்களுக் கிடையில், அந்த இரண்டு ஜோடிகளையும் இணைத்து உதவும் பாலமாக விளங்குகின்றாள் தோழி. தலைவியது இன்ப

வுறவையும் அவள் ஆதரிக்கின்றாள்; அது மணமாகி மலர வேண்டும் என்ற சமூகவிதியையும் அவள் மறக்கவில்லை. தோழியரின் இந்த நிலையை நாம் நினைவிற் கொண்டால், நமக்கு அன்பின் ஐந்திணை வாழ்விலே அவர்களுடைய முதன்மையான இடம் என்னவென்பதும் நன்கு விளங்கும்.

## 7. அன்னாய் வெகுளாதே!

நேரடியாகத் தலைவனைச் சந்தித்து, அவனிடம் விரைவிலே வரைந்து கோடலைக் கருதுமாறு தூண்டுகின்ற தோழியது சொல்லாற்றலை மேலே கண்டோம். இப்படி நேரடியாகச் சொல்வதன்றிப் படைத்து மொழிதலின் மூலமும், அவர்கள் தம்முடைய கருத்தினைத் தலைவனுக்கு உணர்த்துவார்கள். இப்படி உணர்த்துகின்ற ஒரு காட்சியையும் நமக்குக் காட்டுகின்றனர் மூவாதியர்.

பகல் வேளையிலே, சோலைப்புறத்தே, குறிப்பிட்ட ஓரிடத்தில், தலைவனும் தலைவியும் சந்திப்பதென்ற முன்னேற்பாட்டின்படி, தோழியும் தலைவியும் வந்து, அந்தக் குறிப்பிட்ட இடத்திலே அவனுக்காகக் காத்திருக்கின்றனர். தலைவன் வரவில்லை. அவன் வரவுக்காகக் காத்திருக்கின்ற வேளையில் தலைவி அவன் நினைவாகவே தன்னை மறந்தவளாக இருக்கின்றாள். தோழியோ, அப்போது தலைவன் வந்ததனையும் அவன் பக்கத்தே தான் ஒதுங்குவதனை எதிர்ப்பார்த்து ஒதுங்கி நிற்பதனையும் அறிகின்றாள். அவளுடைய உள்ளத்திலே ஒரு நினைவு எழுகின்றது. தலைவனுக்குத் தங்களுடைய இக்கட்டான நிலையினை எடுத்துக்காட்டவும் அதன் மூலம் அவன் உள்ளத்தைக் களவு உறவினின்றும் விலக்கி, மணந்து வாழும் இல்லற உறவிற்குச் செலுத்தவும் முடிவு செய்கின்றாள்.

தலைவிபால், தலைவனோடு கூடிவருவதனால் உண்டாகிய மாற்றங்களைத் தலைவியின் செவிலித்தாய் அறிந்துவிட்டதாகவும், அதனால் ஐயுற்றுத் தன்னை வினவியதாகவும், தான் அவட்கு விடையிறுக்க ஆற்றாது கவலையுற்றதாகவும் ஒரு நிலையினைத் தோழி படைத்துக் கொள்ளுகின்றாள். அப்படிப் படைத்துக் கொள்பவள், தலைவியும் தானும் இருக்குமிடத்திலேயே தாயும் இருப்பதாகக்

கற்பித்துக் கொண்டு, தன் கருத்தை உரைக்கவும் தொடங்குகின்றாள்.

'அன்னாய்! எங்களைச் சினந்து ஏதும் கூறுதல் வேண்டா' என்று பேச்சைத் தொடங்குகின்றாள்.

தாய் தலைவியை ஐயுற்றது மட்டுமன்று; சினந்தும் கடிந்தும் கொண்டனள் என்பதனையும், அதன்மேல் அவள் அவர்களைக் காவலுக்கு உட்படுத்துத்லைச் செய்தாலும் செய்வள் என்பதனையும், இந்தச் சொற்கள் தலைவனுக்கு உணர்த்துகின்றன. அவன், தங்கள் உறவு ஒரு புதிய திருப்பத்தை நோக்கிப் போவதையும், களவினைத் தொடர்வது அதன்மேற் பெரிதும் இடர்ப்பாடான நிலைமைகளை உண்டாக்குவதாக இருக்கும் என்பதனையும் உணர்கின்றான்.

தோழியோ மேலும் தொடர்கின்றாள்.

"இவளோ தவறிலள்; அதனாற் காய்ந்தீயல் அன்னாய்!" என்கின்றாள்.

தலைவி தவறு செய்யாதவளாம்! தோழி கூறுகின்றாள். தங்கள் உறவினை அன்னைக்கு மறைக்கத் துணிந்து பொய்பேசவும் முற்பட்டுவிட்ட தோழியின் செயலைக் கண்டதும், அந்த நிலைக்கு அவளைக் கொணரச் செய்த தனது செயலினை நினைந்து தலைவன் வருந்துகின்றான். இனியும் இந்த நிலையைத் தொடர்ந்து நிகழுதற்கு விடாது, விரைவிலே தலைவியை மணந்து கொள்ளுதற்கான முயற்சிகளிலே மனத்தைச் செலுத்த வேண்டும் என்ற உறுதி பிறந்தவனாகவும் ஆகின்றான்.

'சிறப்பு மிகுந்த சிவந்த நீர் வழிந்தோடுகின்ற காட்டாற்றிலே, தேன் கலந்து வீழ்கின்ற அருவியிலே, முழுகித் திளைத்து விளையாடினோம். அதனாற் கண்கள் சிவந்தன. அவையன்றி யாம் ஏதும் தவறாயின செய்தறியோம். எம்மைச் சினந்து கொள்ளல் வேண்டா' என்கிறாள் தோழி. தலைவன் பெருமூச்சு விடுகின்றான். தோழியின் புத்தி நுட்பத்தை வியக்கின்றான். அவர்கள் முன்பாக வருவதற்கும் நாணுகின்றான். எனினும், ஆர்வம் மிக்கெழத் தாய் செல்வதற்குச் சிறிது காத்திருந்து, மறைவாகத் தாய் இல்லாமையை நோக்கி அறிந்தபின், அவர்கள் முன் தோன்றுகின்றான்.

தாயின் ஐயத்தையும் சினத்தையும் பற்றித் தோழி கூறியதைத் தானும் கேட்டதாகவும், விரைவிலே வரைந்து வேட்டலுக்கு முயல்வதாகவும் உறுதி கூறுகின்றான்.

சுவையான இந்தக் காதற்காட்சி மூவாதியரையும் கவர்கின்றது. அவருடைய தமிழ் உள்ளம் செய்யுள் வடிவாக மலர்கின்றது.

**காய்ந்தீயல் அன்னை! இவளோ தவறிலள்;**
**ஓங்கிய செந்நீர் இழிதரும் கான்யாற்றுள்**
**தேங்கலந்து வந்த அருவி குடைந்தாடத்**
**தாஞ்சிவப் புற்றன கண்.**

உண்மையாகத் தாய் கேட்கவும் இல்லை; தலைவியோ தோழியோ அதற்கு விடையிறுக்க வேண்டிய அவசியமும் உண்டாகவில்லை. என்றாலும், இப்படிப் புதுமைப்பட ஒன்றைப் படைத்துக் கொண்டு சொல்லுவதன் மூலமாகத் தங்கட்கு வருகின்ற துன்பங்களைத் தலைவனுக்கு உணர்த்துகின்றாள் தோழி. சொல்லாற்றல் மிகுந்த தோழியரைப் பெற்றதனால் தான், களவுறவுகள், அந்த நாளிலே சமூகத்தில் பெரிதான கேட்டினை விளைக்கவில்லை போலும்.

## 8. அறிவின்கண் நின்ற மடம்

தோழி நினைப்பது போல எல்லாம் விரைந்து நிகழ்ந்துவிடவில்லை. அதனால், அவள் பொறுப்பு மிகுதி யாகின்றது. தலைவனைத் தூண்டுதலை அவள் தவறாது மேற்கொள்ளுகின்றாள். எனினும், அவனைப் பிரிந்து இருக்கப் பொறாதவள் தலைவியாதலின், அவர்களுடைய சந்திப்பிற்கும் உதவியாக இருக்கின்றாள்.

ஒருநாள், தலைவனும் தலைவியும், தம்முட் களவிலே கூடியவராக இன்புற்று மகிழ்கின்றனர். அதன்பின், தலைவன் தன் ஊருக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றான். எதிரே தோழி வருகின்றாள். அவளைக் கண்டதும், அவன் நன்றியுடன் வணக்கஞ் செலுத்துகின்றான். பதில் வணக்கத்தைச் செலுத்தியவளாக, அவள் பேசுகின்றாள்.

'மிளகுக் கொடிகள் வளர்ந்துள்ள, தித்திப்பான மாவினது நல்ல கனியானது, மனங்கமழும் குளிர்ந்த சுனையின்

தெளிந்த நீர் துளும்பும்படியாக அதனுள் வீழும். இத்தகைய நறுமணமிக்க குளிர்ந்த சோலைகள் விளங்கும் நாட்டிற்குரிய தலைவனே!' என்று விளிக்கின்றள் தோழி.

'தோழி! நின் வருணனை மிகவும் நன்று. ஆயின் எதற்காக இவ்வளவு பெரிய அடிப்படை? சொல்ல விரும்புவதை நேராகவே கூறலாமே?' என்கின்றான் தலைவன்.

தோழி அவனைச் சிந்திக்க விட்டுவிட்டுத் தான் மௌனத்தை மேற்கொள்ளுகின்றாள்.

'வெறிகமழ் தண்சுனைத் தெண்ணீர் போன்று விளங்கிய தலைவியது குடும்பத்திலே, தன்னுடைய களவு உறவான செயல், செயலளவில் தேமாங்கனிபோல இனிமையுடையதே யானாலும், வீழ்ந்த வேகத்தால் கலக்கத்தை ஏற்படுத்தியது என உரைக்கின்றாளோ இவள்? தங்களின் உறவினை அவர்கள் அறிந்திருப்பார்களோ? இப்படியெல்லாம் தலைவனின் நினைவோட்டம் செல்லுகின்றது; அவன் திகைப்படைகின்றான். எதுவும் தோன்றாதவனே போலத் தோழியை நோக்குகின்றான்.

"அறிவினிடத்தாக நிலைபெற்ற மடமை என்பதும் ஒன்று உளதோ?" என்று, அவனைக் கேட்கின்றாள் தோழி.

'மடமை அறிவிடத்தே இருப்பதாவது? அறிவு என்பதே மடமை நீங்கிய தெளிவுதானே?' தலைவன் மீளவும் சிந்தனையிலே ஆழ்கின்றான்.

'நீயோ அறிவுடையவன், இந்தக் களவினால் வருகின்ற அலரினையும், அதனால் ஏற்படும் துயரங்களையும் அறியக் கூடியவன், இருந்தும், அறியாதவனே போலச் செயலற்று இருப்பதென்றால், அறிவுடையானாகிய நின்னிடத்தேயும் மடமை நிலைநிற்கின்றது என்பதுதானே பொருள். தோழி விளக்குகின்றாள். தலைவன் தன்னை உணர்கின்றான்.

'விரைவிலே வேண்டியன செய்வேன்' என்று உறுதி கூறிப் போகின்றான். தோழியின் இந்த நுட்பமான பேச்சு, மூவாதியரால் வெண்பாவாக மலர்ந்து, நமக்கு விருந்து நல்குகின்றது.

**வெறிகமழ் தண்சுனைத் தெண்ணீர் துளும்பக்**<br>
**கறிவளர் தேமா நறுங்கனி வீழும்**

**வெறிகமழ் தண்சோலை நாட! ஒன் றுண்டோ**
**அறிவின்கண் நின்ற மடம்!**

'அறிவின்கண் நின்ற மடம்' என ஒன்றில்லை. அதனால், நீயும் மடமை கொள்ளாது, நின் அறிவின் விளக்கத்தோடு நடந்து கொள்க' என்கின்றாள் தோழி. அறிவினனாகிய அவனும் பொருளினை அறிகின்றான். நாமும் சொல்லாட்சியின் செறிவிலே திளைக்கின்றோம்.

வெறி--மணம், கறி--மிளகு, மடம்--அறியாமை.

## 9. தெளித்த தெளிவு

மற்றொரு நாள், தலைவியும் தோழியுமாக வந்து தலைவனைச் சந்திப்பதற்கெனக் குறிப்பிட்ட சோலையிடத்தே அவனது வரவினுக்காகக் காத்திருக்கின்றனர். அதுபோது, தலைவன் வந்து வேலிமறைவில் நிற்பதனை அறிந்த தோழி, அவனுக்கு மணவினைமேற் கருத்துச் செல்லுதலை விரைவுபடுத்த நினைத்தவளாகத், தலைவியிடம் அவனைப் பழித்துப் பேசுகின்றாள்.

'தோழி இந்த மலைநாடனோடு நீ ஒழுகிவருகின்ற ஒழுக்கத்தை நினைத்தால் எனக்குப் பெரிதும் கவலையாக இருக்கின்றது. அவன் சொல்லைக் காப்பாற்றும் தூயவனாகவோ, துணிவுடையவனாகவோ எனக்குத் தோன்றவில்லை. இந்த உறவினால் நமக்கு இனித் துன்பமே வரப்போகின்றது போலும். என் உள்ளம் அதனை நினைத்து நடுங்குகின்றது' என்கின்றாள்.

தன் காதலனை ஐயுற்று உரைக்கும் தோழியின் சொற்களைக் கேட்டதும், தலைவி, தான் அவன்பாற் கொண்டுள்ள அசையாத காதலுறுதியினை எடுத்துக் கூறி, அவன் உறவை வெறுத்து உரையாதிருக்க வேண்டுகின்றாள்.

'தோழி!'

'ஊர் மன்றத்தே பொருந்தியுள்ள கற்களிலே, கருங் கண்களையுடைய முசுக்குரங்குகள் குதித்தாடும் மலைகளைச் சூழவுடைய நாட்டினன் நம் தலைவன்.

'அவன், முதல் நாட் கூட்டத்திலே நான் அஞ்சினேனாக, எனக்குத் தெளிவதற்கு உரியவான பல உறுதி மொழிகளையும் உரைத்தனன். என்னைத் தெளிவித்துக் கூடுதலையும் செய்தனன்.

அவன் உறவு நன்மை தருவது என்று அறிந்து யானும் அந்நாளில் தெளிவுகொண்டேன். அவனையும் ஏற்றுக்கொண்டேன்.

'அன்று, அவன் காட்டிய பேரன்பாகிய ஒப்பற்ற வொன்று, ஈடு இணையற்றது. அதற்கு ஈடு சொல்லவும் என்னால் இயலாது, அது என்றும் அத்தன்மையதாக மாறாதே இருக்கும். இதனால் நீ ஐயுறுதல் வேண்டா' என்கின்றாள்.

**மன்றத்து உறுகல் கருங்கண் முசுவுகளும்**
**குன்றக நாடன் தெளித்த தெளிவினை**
**நன்றென்று தேறித் தெளிந்தேன் தலையளி**
**ஒன்றுமற் றொன்றும் அனைத்து.**

தலைவியின் காதலீடுபாட்டையும், அவள் தன்மேற்கொண்டிருந்த உறுதியான பற்றினையும் உணர்ந்த தலைவன், அவளை விரைந்து மணந்து வாழ்தல் வேண்டும் என்றும், பிரியாதிருந்து பேரின்பத்தே திளைக்கச் செய்தல் வேண்டும் மென்றும் உறுதிகொள்ளுகின்றான்.

மன்றம்-ஊர் மன்றம்; ஊரவர் கூடும் பொதுவான அம்பலம். இதன்கண் பலரும் அமர்ந்திருத்தற்கு ஏற்றபடி கற்கள் வரிசையாக அமைக்கப் பெற்றிருக்கும். அவற்றில் முசுக்கள் குதித்தாடும் என்றதனால் அவ்வூரவர் பெரிதும் அருளுடையவர் என்பதும் விளங்கும். ஆகவே, அருளுடைய ஊரவனாகிய அவனும், அருளுதலினின்றும் பிறழாது, சொன்னபடியே தனக்குத் தண்ணளி செய்து இன்புறுத்துவான் என்று கூறுகின்றாள் தலைவி.

## 10. வாழ்தல் இலள்

தலைவன் தலைவியரின் களவு உறவு தொடர்கின்றது. அது கடிமணமாகி மலர்தலை நாடிய தோழியின் உள்ளம் பெரிதும் கவலையுறுகின்றது. எனினும் இன்ப நாட்டத்தினரான அவர்கள், அதனைப் பற்றிச் சிறிதும் கவலையுறாதவராகவே நடந்து வருகின்றனர். தோழிக்கு மனவேதனை மிகுதியாகின்றது.

ஒருநாள், தலைமகன் சோலைப்புறமாக வந்து கொண்டிருக்கின்றான். தோழி அவனைச் சந்திக்கின்றாள். அவனுடைய உள்ளத்திலே உறைக்கும்படியாக அவனுக்குத் தன் எண்ணத்தை உரைக்க முற்படுகின்றாள்.

"வேடர்கள் தேனிறால்களை அழித்துத் தேனைக் கொண்டு செல்வார்கள். அவர்கள் சென்றதன் பின்னர், தேனற்றுச் சிதைந்த தித்திப்பான இறால்கள் தேனடைகள் தரைக்கண்ணே ஆதரவற்றுக் கிடக்கும்.

"அவ்விடத்தே வரும் மான்கன்றுகள், தம் காற்குளம்பு களினாலே அந்த இறால்களை மிதித்துத் துகைக்கும். அத்தகைய வரையக நாடனே."

தோழி, இப்படித் தன்னை விளிக்கவும், அறிவுடைய ஆண் மகனான அவனுள்ளம், அவளது சொற்களிற் பொதிந்த பொருளின்மேற் செல்லத் தொடங்குகின்றது. 'மலையுச்சியிலே இருந்த தேன்நிறைந்த தேனிறால்களைப் போலத் தலைவியும் உயர்குடும்பத்துப் பிறந்த இன்ப எழிலுடன் இருந்தனள். வேடர்கள் தேனைக் கொண்டு சென்றாற்போலத் தான் அவள் நலனை நுகர்ந்து சென்ற தன்மை இருந்தது. அங்ஙனம் சென்ற தான் அவளை விட்டுப் பிரிந்து துயருள் வாடவிட்டது, தேனற்ற இறால்களை வேடர்கள் விட்டுச் சென்றாற் போன்றது. அவற்றை மான் குட்டிகள் துகைப்பது போன்று அழகழிந்து பிரிவினாலே நலிந்திருக்கும் தலைவியை அலவற்பெண்டிர்கள் அலர் உரைத்துப் பழிதூற்றுகின்றனர். ஆகவே, இனியும் வரைதற்குக் காலந்தாழ்க்குமாயின், அவர் துயரைத் தாங்காது நலிந்து போவாள்" இப்படியெல்லாம் நினைவோட்டம் செல்ல, அவன்,

'தோழி! நீ உரைப்பதனை யானும் உணராமலில்லை. விரைவிலே அவளை மணந்து கொள்வேன். நீ எது குறித்தும் கவலைகொள்ளல் வேண்டா' என்கின்றான்.

'அவளை வரைவதற்கு வருதலன்றிக் களவின்பத்தைக் கருதியவனாக மட்டுமே நீ இனியும் வருவாயானால், எங்கள் நிரைதொடியாகிய தலைமகள், இனி உயிர் வாழ்தலும் இலள் ஆவள். இதனை நீ அறிந்தாற்போதும்!' என்று கூறிவிட்டுத் தோழியும் சென்று விடுகின்றாள்.

தோழி, தலைவனுக்குக் கூறுகின்ற இந்தச் சொற்களிலே, மூவாதியர், தலைவிபால் அவளுக்கிருக்கின்ற அளவிடற்கரிய அன்புச் செறிவினைக் காண்கின்றார். அவர் மனம் இறும்பூது எய்துகின்றது.

**பிரைசம் கொளவீழ்ந்த தீந்தேன் இறாஅல்**
**மரையான் குழவி குளம்பிற் றுகைக்கும்**
**வரையக நாட! வரையாய் வரின்எம்**
**நிரைதொடி வாழ்தல் இலள்.**

'அவள் வாழாள்' ஆகவே, நீ தொடர்ந்து இன்புறுதல் என்பதும் இல்லாமற்போம். கருணையற்றவன்; நம்பினவளைக் கைவிட்டவன்; வாய்மை இல்லாதவன் என ஊரும் நின்னைப் பழிக்கும்' என்றெல்லாம் தோழியின் பேச்சிலே உள்ளார்ந்த பல எச்சரிக்கைகள் மிளிர்தலையும் நாம் காண்கின்றோம்.

## 11. நெஞ்சு ஊன்றுகோல்

தலைவன் வந்து வேலிப்புறத்தே செவ்விநோக்கி நின்றிருப்பதை அறிந்த தோழி, அவனது முயற்சி எல்லாம் களவின்பத்தை அடைதலாகவே இருத்தலையும், இல்லற நெறிநோக்கி ஏகத்தொடங்காததையும் நினைந்து புண்பட்டவளாகத், தலைவியிடம் அவனைப் பழித்துக் கூறுகின்றாள்.

தலைவனை விளித்துக் கூறாது, தானே தன் நெஞ்சுக்குக் கூறி நொந்து கொள்ளுகின்றாள் அவள்.

'வேடுவர்களாலே சுட்டுக் கரிக்கப் பெற்றதும், பன்றிகள் உழுது கிண்டியிருப்பதுமான தினைக்கொல்லையுள், ஆண் குரங்குகள் வாழையின் முற்றிய காய்களைப் பழுப்பதற்காக வேண்டிப் புதைத்துவிட்டுப் பின்னர்ப் புதைத்த விடம் தெரியாமல் சோர்ந்து வருந்துகின்ற தன்மையினையுடைய, அருவிகள் தாழ்ந்து வீழ்ந்து கொண்டிருக்கின்ற, மலைநாட்டைச் சேர்ந்தவன் எம் தலைவன்.

'அவன், என் தோழியான இவளுக்கு, இந்த நேர்வளையாளுக்கு, நெஞ்சிடத்தே பட்டுத் தைத்த அம்பினைப் போன்ற தெளிவான சொற்களைத்தான் சொல்லியிருக்கின்றான். என்கின்றாள் அவள்.

தலைவன் அந்த உரையைக் கேட்கின்றான். புனத்தை அழித்ததால், இனிப் புனங்காவலுக்குத் தலைவி வர மாட்டாள் என்பதனையும், அதனால் அவளைக் கண்டு இன்புறுதல் இயலாதென்பதனையும் உணர்கின்றான்.

வாழைக் காயைப் புதைத்த கடுவன், புதைத்த இடந் தெரியாது அயர்வது போலத், தானும் வாழ்க்கைத் துணைமையினைக் கருதிக்கொண்ட களவு உறவினை, முறையாக மேற்கொள்ளவியலாமல் தளர்ந்துவிட்ட தன்மையினையும் அறிகின்றான்.

தான் தெறிவித்த சொற்கள் அம்புகளாகத் தலைவியின் நெஞ்சிலே ஊன்றின என்றதனால், தான் சொற்பிறழ்ந்த காரணத்தால், அச் சொற்களையே எண்ணி எண்ணி மனம் புண்பட்டு வருந்தி நலிகின்ற தலைவியது நிலையையும் புரிந்து கொள்ளுகின்றான்.

அரியதான அந்தப் பேச்சினை அழகான செய்யுளாக ஓவியப்படுத்தி உதவுகின்றார் மூவாதியர்.

**கேழல் உழுத கரிபுனக் கொல்லையுள்**
**வாழை முதுகாய் கடுவன் புதைத்தயரும்**
**தாழருவி நாடன் தெளிகொடுத்தான் என்தோழி**
**நேர்வளை நெஞ்சூன்று கோல்.**

தலைமகன் வரைவினை நீட்டித்தவிடத்து, அவனுடைய ஏலாமையைச் சுட்டி இப்படிப் பழிக்கின்றாள் தோழி.

கேழல்-பன்றி, கடுவன்-ஆண் குரங்கு. கோல் -அம்பு

## 12. ஏமாப்பு உடையது

தோழி உரைத்த சொற்களைக் கேட்டதும், தலைவியின் உள்ளம் வேதனை கொள்ளுகின்றது. தான் அவன்பாற் கொண்ட நம்பிக்கையின் உறுதியையும், அவன் சொன்ன சொற்களைப் பொய்க்காத வாய்மையாளன் என்பதனையும், தோழிக்குச் சொல்ல நினைக்கின்றாள்.

தோழியின் பழிச்சொற்கள் காரணமற்று எழவில்லை என்பதனை அவள் அறிவாள். ஆகவே, தலைவன்பால் தவறில்லை என்று கூற முற்படாது, அது தனக்குப் பாதுகாவலான ஓர் உறவு என்று வற்புறுத்தவும் முயல்கின்றாள்.

தலைவியின் இந்த உரையினையும், தலைவன் வேலிப் புறத்தே நின்றபடியே கேட்டிருக்கின்றான்.

'தோழி! பெரிய கையினையுடைய கரிய களிற்று யானையானது மலை நெல்லைத் தின்றுவிட்டுக், கரிய

அடியினையுடைய மராமரங்கள் நிறைந்த சோலையினிடத்தே, பசிய இலைகளாலுண்டான நிழலினிடத்தே கிடந்து உறங்கும். வண்டுகள் ஆரவாரிக்கும் சோலைகள் சூழ்ந்த, அத்தகைய மலைநாட்டினன் நம் தலைவன்!

'அவனுடைய நட்பானது, அவனைத் தழுவினாரான எம்போல்வார்க்கு என்றும் காப்பினை உடையதே யாகும்' என்கின்றாள்.

**பெருங்கை இருங்களிறு ஐவனம் மாந்திக்**
**கருங்கான் மராம்பொழிற் பாசடைத் துஞ்சாம்**
**சுரும்பிமிர் சோலை மலைநாடன் கேண்மை**
**பொருந்தினார்க் கேமாப் புடைத்து.**

'இருங்களிறு ஐவனம் மாந்திக் கருங்கான் மராஅம் பொழிற் பாசடைத் துஞ்சும்' என்பதனால், தலைவனது நாட்டு வளமையைக் கூறினாள். மேலும், அந்தக் களிற்றைப் போன்று, தன் வீட்டவர் அறியாமல் தன்னைக் களவிலே கூடி இன்புற்றபின், அவன் கவலையற்றுத் தன் ஊரிடத்தே உள்ளனன் என்பதையும் குறிப்பாக உணர்த்துகின்றாள்.

'சுரும்பிமிர் சோலை மலைநாடன்' எனவே, அவனது தன்மையும், 'சுரும்பினம்போல மலருக்கு மலர் செல்கின்ற தன்மை உடையது போலும்' என்பதையும் குறிப்பினாலே கூறுகின்றாள்.

'எனினும், அவனைக் கூடினார் கற்புடைய மகளிராதலின், அவர் அவனையே தமக்குரிய காப்பாகக் கொள்ளும் மனவுறுதி கொண்டவர் எனத், தனது பெண்மைச் செவ்வியினைப் பொருந்தினார்க்கு ஏமம் உடைத்து' என்பதன் மூலம் வலியுறுத்துகின்றாள்.

இதனைக் கேட்கும் தலைவன், தன்னுடைய கவலையற்ற போக்கிற்கு வருந்தியவனாக 'விரைவிலே அவளை வேட்டு வந்து மணப்பதிலே கருத்துச் செலுத்துபவனாவான்' என்பது இதன் பயனாகவிளைவதாம்.

## 13. முயங்கினேன் வலித்தான்

தலைவன் தலைவியரின் உறவு இதன்பின் தடைப்படுகின்றது. தலைவி இற்செறிக்கப்படுகின்றாள். இரவுக்

குறியிற் சந்திப்பதுகூட அவர்களுக்கு எளிதாயில்லை. இந்நிலையிலே பொங்கிய அவளது காமவேகம் அவளுடலினையும் பற்றி நலிவிக்கத் தொடங்குகின்றது. அவள் மேனியின் மாற்றத்தைக் கண்ட தாய், அது அணங்கு வருத்தியதனாலே வந்துற்றதாக இருக்குமெனக் கருதி, அதனை மாற்றுவதற்கு நினைந்து வேலனை அழைக்கின்றாள். அவனும் வந்து மறியறுத்துப் பலியிட்டு வெறியாடுதலுக்கு ஏற்பாடுகளைச் செய்கின்றான்.

தலைவியின் மனம் தன் வீட்டிலே நிகழுகின்ற வெறியாட்டு நிகழ்ச்சிகளைக் கண்டதும், பெரிதும் வேதனைப் படத் தொடங்குகின்றது. தன் தோழியிடம் சென்று, தன் மனவேதனையைக் கூறுகின்றாள்.

'தோழி! நீண்ட கதிரையுடைய பசுந்தினையை, வளைந்த வாயினையுடைய கிளி கவர்ந்து செல்லுகின்ற தன்மையினாலே, என்னைப் புனங்காவலுக்கு அனுப்பினர். அவ்விடத்தே, விளக்கமாகத் திகழாநின்ற சோலைகளையுடைய மலைநாடனின் நட்பு ஒன்றினையே பெற்றேன். அதனால், ஆர்வத்தோடு மிகுதியும் அவனைத் தழுவியும் இன்புற்றேன்.

'அன்னையும் வேலனும் இவற்றை அறியாராயினர். தெய்வம் என்னை அணங்கியது எனக் கொண்டு வேலன் ஆட்டுக்குட்டியைப் பலியாக அறுத்துப் படைத்து வெறியாடுதற்கும் துணிந்தனனே! இனி யாது செய்வேன் நான்?'

இப்படிக் கூறியதனால், நீ சென்று, என் நிலையின் உண்மையைத் தாய்க்கு உரைத்து, இந்த வெறியாடலைத் தடுப்பாயாக எனக் கூறினாளாகக் கொள்க.

**வார்குரல் ஏனல் வளைவாய்க் கிளைகவரும்**
**நீரால் தெளிதிகழ் கானாடன் கேண்மையே**
**ஆர்வத்தின் ஆர முயங்கினேன் வேலனும்**
**ஈர வலித்தான் மறி.**

தலைவி இவ்வாறு சொல்வது, அறத்தொடு நிற்றல் ஆகும். அறத்தொடு நிற்றலாவது, தான் கொண்ட தலைவனுடன் தனக்கு மணவினை நிகழ்த்துமாறு, தன் உறுதியினைத் தெரிவித்து, அதன்கண்ணே தளராது நிலைபெறுதல்.

## 14. வாரல் என்பது உரை

தலைவன், தன்னுடைய காமத்தின் மிகுதிகாரணமாக இரவிடைக் காட்டினூடே வழிநடந்து, தலைவியைச் சந்திக்குமாறு வருகின்ற வழக்கத்தை மேற்கொள்ளுகின்றான்.

தலைவியும் அவனைப் பெற்றுக் கூடி இன்புறுதலை விரும்புபவள் என்றாலும், அவன் வருகின்ற வழியிடையே ஏற்படக்கூடிய துன்பங்களை எண்ணியதும், அவள் உள்ளம் சோர்வடைகின்றது. தன் தோழியிடம், 'அவனை இரவில் வரவேண்டாம்' என்று சொல்வாயாக என்று வேண்டுகின்றாள்.

தலைவனின் நலத்திலே ஈடுபாடுகொண்டவள் அவள். அதனால், அவனுக்கு ஊறு ஏற்படுமென நினைத்ததும் அவளுடைய இன்பநாட்டம் கரைகின்றது. அவன் தீங்கற்று விளங்குதலையே விரும்பும் கற்புமேம்பாடு சிறக்கின்றது.

'தோழி! நின்னால் முடிக்கப்பட வேண்டிய செயல் ஒன்று என்னிடத்தே உள்ளது. நிறையிழந்த செறிந்த ஓர் உயிருக்கு இப்போதே சென்று பாதுகாத்தலுக்கு வேண்டியவற்றைச் செய்தல் வேண்டும். அது என்ன தெரியுமா?'

'தெரியாது' என்று தோழி சொல்லத் தலைவி மேற்கொண்டு சொல்லுகின்றாள்.

'வேறொன்றும் இல்லை. பாம்புகள் நடமாடும் நெடிய சோலைகளை உடைய நாடனாகிய நம் தலைவன்பாற் செல்க. சென்று, நம் வீட்டுப்புறத்தே இரவுப் போதில் வருதல் வேண்டா என்பதனைச் சொல்வாயாக' என்று முடிக்கின்றாள்.

**குறையொன்று உடையேன்மற் தோழி! நிறையில்லா**
**மன்னுயிர்க்கு ஏமஞ் செயல்வேண்டும் இன்னே**
**அராவழங்கு நீள்சோலை நாடனை நம்மில்**
**இராவரல் என்பது உரை.**

இதனால், தலைவியைப் பிரிந்திருக்க ஒண்ணாத தலைவன், விரைந்துவந்து மணந்து கொள்வதற்கு முயல்வான் என்பதும் தெளிவாகும்.

இங்ஙனமாக நிகழும் குறிஞ்சித்திணையது சார்பான ஒழுக்கங்கள், தலைவன் தலைவி தோழி ஆகியோரிடையே,

அகவொழுக்கம் அமைந்திருந்த செப்பத்தினை நமக்குத் தெளிவுபட உரைப்பனவாகும்.

பெரும்பாலும், குறிஞ்சித் திணையின் பொதுவான ஒழுக்கங்கள் புணர்தலும் புணர்தல் நிமித்தமும் ஆகிய பொதுவான நோக்கத்தைக் கொண்டே நிகழ்வனவாகும்.

களவிலே கண்டு காதலித்துக் கூடியொழுகி வரும் தலைவனும் தலைவியும் சமுதாயத்தின் பொதுவான நியதிகளைப் பாராட்டாது, ஊழினது வலியினாலேயே இவ்வாறு ஒன்றுபட்டு நடப்பதனை மேற்கொள்வார்கள் எனல் வேண்டும்.

எனினும் உறவு, ஊரறிந்து ஏற்றுக்கொண்ட ஒன்றாகவும் உறவினர் கூடி இசைவளித்த ஒன்றாகவும் அமையாததனால், ஒருவரையொருவர் பிரியாதிருக்கின்ற நிலை வாய்ப்பதற்கு அவர்க்கு வழியில்லை. கூட்டத்திற்கு முன்னர்த் தலைவியின் கவலையும், ஆவலும் மிகுதிப்பட்டு நிற்பனவாதலும், கூட்டத்திற்குப் பின்னர் அவன் பிரிந்து போவதனால் அவளை வந்தடையும் துயரங்களும், இந்த ஒழுக்கத்திலே மிகவும் சாதாரணமாக ஏற்படுவனவேயாகும்.

இப்படியே, தலைவனிடத்தும் தலைவியைக் காணும் ஆர்வமும், காணாது போவோமே என்ற கவலையும் பிறவும் எழுதல் இயல்பே. எனினும், உள்ளார்ந்த இன்ப நாட்டத்தினது முருகிய சக்தி அவர்களை இழுத்துச் சென்று ஒன்றுபடுத்தி வைக்கின்றது. இதனை நாம் தெளிவாக அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

# உ. முல்லை வளம்

**முல்லையாகிய ஒழுக்கத்திலே விளங்கும் பொருள்பொதிந்த சிந்தனைச் செல்வங்களின் விளக்கத்தை அறிவதற்கு உதவும் இனிதான செய்யுட்கள்.**

*முல்லையாவது இருத்தலும், இருத்தல் நிமித்தமுமாகிய அகவொழுக்க நெறியினை விளக்கும் பகுதியாகும். தலைவன் தலைவியர் இருவரும் ஒப்பற்ற இன்பநலத்திலே திளைத்து வருகின்ற காலத்திலே, தலைவன் தலைவியைப் பிரிந்து வேற்றுநாடு செல்லவேண்டிய சூழ்நிலையும் ஏற்படுகின்றது.*

*தன் பிரிவினை அவள் பொறுத்திருக்க ஆற்றாள் என்பதனை தலைவன், தனக்குரிய கடமையுணர்வுகளினாலே அவளைப் பிரிந்து செல்வதற்கும் துணிகின்றான். கார்ப்பருவத்தே தான் தவறாது திரும்பி வந்து விடுவதாக உறுதிகூறிப் பிரிந்தும் போகின்றான்.*

*அவன் பிரிவினாலே அவள் பெரிதும் உளம் வாடி நலிவடைந்தனள் என்றாலும், கார்காலத்தின் வரவு வரைக்கும் ஒருவாறாக எப்படியோ அமைந்திருந்தாள். ஆனால், கார்ப் பருவம் வரவும், அவனை வரக்காணாதபோது அவளுடைய உள்ளம் வேகின்றது. அந்த வேதனையின் அழலினை வெளிப்படுத்துவன இப்பகுதியிலே வருகின்ற செய்யுட்கள்.*

*இந்தச் செய்யுட்கள் எல்லாம், 'பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது' என்னும் ஒரு துறை பற்றியே வருவன. இதனையும் நாம் மனங்கொள்ளல் வேண்டும்.*

## 1. நீரோடு அலமரும் கண்

*'அன்பே! நின்னைப் பிரிந்து யான் எப்படி வாழப்போகின்றோன்? என் உயிர் உடலின் நில்லாது அழிந்து போய்விடுமே!' என்று தேம்பி நிற்கின்றாள், தலைவி.*

*'என் மனைவி நீ. எனக்கு வருகின்ற பெருமையிலே நினக்கும் பங்கு உண்டு. நின் கணவன் கடமை தவறியவன்;*

காமத்தால் அறிவிழந்து செயலினை மேற்கொள்ளாது போயினான்' என்னும் ஊரவரின் பழிப்புக்கு ஆளாகலாமோ? ஆகவே, எனக்கு விடைகொடு. போய் வெற்றியுடன் வாருங்கள் என்று நின் வாயைத் திறந்து வாழ்த்தி அனுப்பு' என்று, அவன் அவளை வேண்டுகின்றான்.

'என்னை ஏன் இப்படி வருத்துகின்றீர்கள்? என்ன செய்வதென்றே தோன்றவில்லையே? எப்படி உங்களைப் பிரிந்து என்னால் இருக்க முடியும்?' என்கிறாள் அவள்.

'நின்னைப்போல் எவ்வளவு பெண்கள், தம் கணவன்மாரைச் செயலினை முடித்துவர அனுப்பிவிட்டு, அந்தத் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டு பெருமை அடைகின்றனர். தமிழ் மரபினளான நீ, தகைமிக்க குடும்பத்துப் பிறந்த நீ, இப்படிக் கலங்கலாமா?' என்று அவன் அவளுக்குச் சமாதானம் கூறுகின்றான்.

இப்படிப் பிரிவதற்கு இயலாத மனத்துயரோடு அவளைத் தேற்றித் தெளிவித்துக் கார்காலம் தொடங்கியதும் தவறாமல் வந்து விடுவதாக உறுதிகூறி, அவன் சென்று விடுகின்றான்.

அவளும், எப்படியோ தன் உள்ளத்து ஆசைகளை எல்லாம் அடக்கிக்கொண்டு, அந்தப் பிரிவினைப் பொறுத்திருந்தாள். ஆனால், கார்காலத்தின் அறிகுறிகள் தோன்றக் கண்டதும் அவள் நெஞ்சம் கட்டவிழ்ந்து கரைகின்றது. அவள் துயரம் நொடிக்குநொடி மிகுந்து கொண்டே போகின்றது. அமைதி கொண்ட நிலையெல்லாம் குமுறும் நிலையாகிக் கொந்தளிக்கின்றது. அவள் உள்ளம் கொண்ட வேதனையால், உடல் நலமும் கெடுகின்றது.

தலைவியின் வேதனை மிகுதியைக் கண்ட தோழி, தானும் மிகவும் மனங்கலங்கித் துடிக்கின்றாள். தலைவியை அணுகித் தேறுதல் கூறவும் முற்படுகின்றாள். அப்பொழுது தலைவி சொல்லுகின்றாள்:

'செம்மையான கதிர்களைக் கொண்டவன் கதிரவன். அவன் சினங்கொண்டு உலகினை எரித்தான். அந்தச் சினத்தை மறைத்துக் கொண்ட பொழுதுதான் மாலைப் பொழுது ஆகும்.

'அத்தகைய மாலைப்பொழுதிலே, பசுமையான கொடிகளையுடைய முல்லையானது பூத்து மணம் கமழ விளங்குகின்றது. வண்டுகள் அந்தப் பூக்களை நாடிச் சென்று ஒலி செய்கின்றன.

'இங்ஙனமாகக் கார்காலத்துடனே சுழன்று தோன்றும் வானத்தைக் காண்கின்றேன். காணும் பொழுதிலெல்லாம் என் கண்கள் நீரினோடுங்கூடத் தடுமாற்றமெய்தி வருந்தா நின்றாள்.

இங்ஙனம் தன் துயரின் மிகுதியைத் தோழியிடம் கூறுகின்றாள், தலைவி.

**செங்கதிர்ச் செல்வன் சினங்கரந்த போழ்தினால்**
**பைங்கொடி முல்லை மணங்கமழ-வண்டிமிரக்**
**காரோடு அலமருங் கார்வானம் காண்டொறும்**
**நீரோடு அலமருங் கண்.**

கார்காலம் முல்லைத் திணைக்குரிய பெரும்பொழுது என்பதனையும், மாலை சிறுபொழுது என்பதனையும், முல்லை பூ என்பதனையும் நினைவிற் கொள்ளல் வேண்டும்.

வேனிலானின் சினமும் மறைந்தபோது முல்லை பூத்து மணங் கமழ, அதனால் தலைவியின் பிரிவுத்துயரம் பெருகிற்று எனவும், வண்டினம் இமிரவும் அது மேலும் மிகலாயிற்று எனவும் கொள்க.

அலமரல்--தடுமாறி வருந்தல்.

'வேனிலும் வெப்பந் தீர்ந்துபோயின, இவ்வேளையிலே என்னுடைய காமவெம்மை தீர்தற்கு வழியில்லையே?' எனத் தலைவி ஏக்கமுற்றுப் புலம்பினாள் என்க.

## 2. என்னாதி என்பார் இலர்!

'ஏனடி வீணாக மனத்தை வருத்தி, நின்னை நீயே நலிவித்துக் கொள்கின்றாய். நின் காதலர் நின்னை மறப்பவர் அல்லர். சொன்ன சொல்லினைப் பிறழ்வாரும் அல்லர். விரைய வந்து சேர்வார். அதுவரையும் ஆற்றியிரு' என்று கூறித் தலைவியைத் தோழி தேற்றித் தெளிவிக்க முயல்கின்றாள்.

தலைவி மெலிந்த தன் தோள்களை நோக்குகின்றாள். கவலையற்று மெலிவுற்றிருக்கும் தோழியின் தோள்களையும்

பார்க்கின்றாள். அந்த வேறுபாட்டினை உணர்த்துவாள் போலத், 'தடம் மென் பணைத் தோளி!' என்று அழைக்கின்றாள்.

'பெரிதான, மென்மை வாய்ந்த, மூங்கிலையொத்த தோளினை உடையாய்! இதோ கானத்தைச் சற்றே பார். மடப்பம் வாய்ந்த நடையினை உடைய மயில் அகவுகின்றதையும் கேளாய்!

'அந்த அகவுதலுக்கு இரங்கிக் கடல் நீரை முகந்து கொண்டு, மின்னலுடனே வந்த, அழகிய கார் மேகங்களையும் காணாய்.

'என் நிலையையும் பார். என்னைவிட்டுச் சென்றவரும் வாரார் ஆயினர். என் புலம்பலுக்கு இரங்குவாராய் வந்து, எங்ஙனம் உள்ளாய் என்று கேட்பவரும் இல்லை. நான் எப்படி ஆற்றியிருப்பேன்?, தோழிக்குத் தன்னுடைய நிலைமையை இப்படிக் கூறுகின்றாள் தலைவி.

**தடமென் பணைத்தோளி! நீத்தாரோ வாரார்**
**மடநடை மஞ்ஞை அகவக்-கடன்முகந்து**
**மின்னோடு வந்த தெழில்வானம்; வந்தென்னை**
**என்னாதி என்பாரும் இல்.**

என் ஆதி--என்னதான் ஆகின்றனையோ?

யாருமற்ற தனியளாகி விட்டதாகக் கூறித் தன்னை நொந்து கொள்ளுகின்றாள் தலைவி. அவளுடைய மனநிலையின் சிறந்த வெளிப்பாடு இதுவாகும்.

## 3. கொல்லுநர் போல வரும்

தோழி மீண்டும் தலைவிக்குத் தேறுதல் உரைப்பதில் ஈடுபடுகின்றாள். தலைவியோ சற்றும் தெளிவு கொள்வதற்கின்றி மேலும் வெதும்புகின்றாள்.

'தோழி! இந்த மாலைக் காலத்தைப் பார்த்தாயோ? எவ்வளவு சிறுமைக் குணத்தினை உடையதாக இருக்கின்றது. முன்பெல்லாம் என்னையும் என் காதலரையும் இன்பவெள்ளத்திலே திளைக்கச் செய்த அதே மாலைக் காலந்தானேடி இது! இன்று, அவரைப் பிரிந்து தனிமை யுற்றிருக்கின்ற என்னிடம்தான் இதற்கு என்ன பகை? இவ்வளவு சிறுமைக் குணத்தைக் கொண்டதாக இருக்கிறதே?'

'குளிர்ந்த நறுமணத்தையுடைய வெண்காந்தள் துடுப்பினைப் போன்ற அரும்புகளை ஈன்றுள்ளன. கார் காலத்தை எதிரேற்று, வானத்தின் உயரத்தே விளங்கும் மேகங்கள் இடித்து முழக்குகின்றன.'

'இறுக அணைத்துத் தழுவுபவரான காதலர்களைப் பிரிந்திருக்கும் மகளிர்கள் துயருற்று நடுங்கச், சிறுமையுடைய மாலைக்காலமும் வராநின்றது. அது கொலையாளிகளைப் போலவன்றோ வருகின்றது! அதற்கு ஆற்றாத யான் ஏதடி செய்வென்? எங்ஙனம் உய்வேனடீ?'

தலைவி, இப்படி மாலைக் காலத்தின் வருகையைக் கண்டு புலம்புகின்றாள்.

**தண்ணறுங் கோடல் துடுப்பெடுப்பக் கார்எதிரி**
**விண்ணுயர் வானத்து உருமுரற்றத்-திண்ணிதிற்**
**புல்லுநர் இல்லார் நடுங்கச் சிறுமாலை**
**கொல்லுநர் போல் வரும்.**

'மாலை, கொலையாளிகளைப் போல வரும்' என்று உரைக்கும் தலைவியினது மன நிலையினை எண்ணிப் பார்க்க வேண்டும். அப்போதுதான். இந்தப் பாட்டின் பொருளினை நாம் நன்றாகப் புரிந்து கொள்ள முடியும்.

கோடல்--வெண் காந்தள்.

## 4. உயிர் துடிப்பது போலும்!

தோழி, தலைவியின் உண்மையான காதற் பெருக்கினையும், அதன் காரணமாக இப்போதுள்ள பிரிவுத் துயரத்தினைப் பொறுக்கவியலாது படுகின்ற வேதனையையும் நன்றாக அறிந்தவள். எதனைச் சொல்லியும் தலைவியின் உள்ளத்திலே அமைதி சேர்க்க இயலாதென்பதும் அவள் அறியாததன்று. எனினும், அதற்காகத் துடிக்கும் அவளது துயரத்தின் மிகுதியைக் கண்டு வாளாவிருந்து விடுதல் முடிகின்றதா? அதனால் தலைவியைத் தேற்றுகின்ற முறையோடு சில சொற்களைக் கூறுகின்றாள்.

'இதோ பார்! வானம் மழைபெய்யத் தொடங்குகின்றது. நின் தலைவரும் நின்னை நாடி வந்துவிடப் போகின்றார். அதுவரை ஆற்றியிருக்காமல் இப்படி வருந்தி வருந்தி நின்

நலத்தைக் கெடுத்துக் கொள்கின்றாயே? இது நினக்குப் பொருந்தாது' என்று கூறுகின்றாள்.

அதனைக் கேட்டதும், தலைவியின் வேதனை குறைந்து விடவில்லை. குமுறல்தான் மிகுதியாகிச் சுடர் விட்டு ஓங்குகின்றது.

“தோழி ஏதோ என்மீதுள்ள அன்பின் காரணமாக, நான் வருந்துவதைத் தாளாமல், நீ ஏதேதோ இப்படியெல்லாம் பேசுகின்றாய். ஆனால், என்னுடைய நிலைமையினை நீ நினைத்தாயில்லை.

“மேகங்கள் விரைந்து மழைத்துளிகளைச் சிந்துகின்றன. உள்ளிடத்தே இதழ்களையும், பூந்தாதுகளையும் உடைய மொட்டுக்கள் நிறைந்த கொன்றை மரங்கள் எரிவளர்த்தாற் போன்று மலர்ந்து காணப்படுகின்றன. பரந்து இடித்து உரைப்பதுபோல வானமும் முழங்குகின்றது. அதனை நோக்கி என் உயிரும் துடிப்பது போலப் படுகின்ற துயரத்தின் மிகுதியை எங்ஙனம் ஆற்றுவேன்?”

இவ்வாறு, வானையும், மலர்ந்த கொன்றையையும் காட்டிப் புலம்புகின்றாள் தலைவி.

**கதழுறை வானஞ்சிதற இதழகத்துத்**
**தாதிணர்க் கொன்றை எரிவளர்ப்பப் பாஅய்**
**இடிப்பது போலும் எழில்வானம் நோக்கித்**
**துடிப்பது போலும் உயிர்.**

‘என் உயிர் துடிக்கின்றபோது, யான் எப்படி அமைதியாக ஆற்றியிருக்க முடியும்?' என்று கேட்கின்றாள், தலைவி. அவளுக்கு எவர்தாம் ஆறுதல் உரைக்க முடியும்!

## 5. உருகுவது போலும்

சட்டியிலே வெண்ணெயை இட்டு அடுப்பிலேற்றி நெருப்பினை மூட்டுகின்றோம். கட்டியாக இருந்த வெண்ணெய் உருகத் தொடங்குகின்றது. அதன் உறுதி தளர்ந்து உருகி, அது நீர்த்த நெய்யாக மாறுகின்றது.

தலைவியின் உள்ளத்தே காமத்தீ கொழுந்துவிட்டு எரியத் தொடங்குகின்றது. அந்த வெம்மையினால் அவளுடைய உயிர்

உருகுவதுபோலத் துடித்துத் தளர்கின்றது. தனக்கு ஆறுதல் கூறியிருக்கும் தன் தோழியிடத்திலே, அந்த நிலைமையைக் கூறுகின்றாள் அவள்.

'தோழி! மயிலினங்கள் மழைத்துளிகளை விரும்பியவாய் அகவிக் கொண்டு, காடெங்கணும் தம்முடைய தோகையைப் பரப்பியவாய், ஆடத் தொடங்குகின்றன.

"அவை அங்ஙனம் களித்து ஆடும்படியாகச் சூல்கொண்டு விரிகுவதுபோன்று கார் மேகங்கள் அதிருகின்றன. அந்த அதிரலைக் கேட்கக் கேட்க என் ஆவியும் உருகுவது போலத் துடிக்கின்றது! அங்ஙனமாக நான் எப்படியடீ ஆற்றியிருப்பேன்?"

இப்படித் தன்னுடைய வருத்தத்து மிகுதியினை உரைக்கின்றாள் தலைவி. அவளுடைய இரங்கத்தக்க நிலைமையை நமக்கு ஓவியப்படுத்திக் காட்டுகின்றது மூவாதியரின் செய்யுள்.

ஆலி விருப்புற்று அகவிப் புறவெல்லாம்
பீலி பரப்பி மயிலாலச்--சூலி
விரிகுவது போலுமிக் காரதிர ஆவி
உருகுவது போலும் எனக்கு.

'ஆவி உருகுவது போலும் எனக்கு' என்ற சொற்களிலே, எவ்வளவோ துயரச்சுமையின் சாயல் வெளிப்படுகின்றது. இதனை நாமும் உணர்தல் வேண்டும்.

## 6. புயலும் வரும்

'இதோ பார்! நீ அவரை நினைந்து, அவர் வரவினை உட்கொண்டு இப்படித் துடிக்கின்றனை அவரும் நின்னைப் பிரிந்து இருப்பவர்தாமே? நின்னைப் போன்று நின் காதலரான அவரும் வருந்துவார் அல்லரோ? ஆகவே, வருத்தமுறும் அவர், காலத்தைத் தாழ்த்தவே மாட்டார்; விரைவிலேயே வந்து விடுவார்; அதுவரை ஆற்றியிரு' என்று தோழி உரைக்கின்றாள்.

தலைவியின் உள்ளம் தலைவனிடத்தே சென்று நிலைக்கின்றது. அவரும் தன்னைப் போலவே தனிமைக்கு ஆற்றாது வருந்துவாரர் என்பதனை அவளும் உணர்கின்றாள். அதனால் அவர் விரைவிலே திரும்பிவிடுவார் என்று கொள்வதற்குப் பதிலாக, அவளுடைய உள்ளத்திலே வேறொரு

நினைவுதான் எழுகின்றது. அதனைத் தோழியிடம் உரைக்கின்றாள்.

"தோழி!"

"அரிய கலைமான்களின் கூட்டங்கள் மகிழ்ச்சி பொங்கக் காட்டிடத்தே சுற்றித் திரிகின்றன".

"கொல்லைகளிலுள்ள, கொடிகள் பிணங்கிக் கிடக்கும் முல்லையும், தளிர்க்கத் தொடங்கியிருக்கிறது."

"கார் காலத்தின் வரவு மானுக்கும் முல்லைக்கும் மகிழ்வைத் தருகின்றது. ஆனால், என் போன்ற மங்கைக்கும் என்னை மணந்து பிரிந்து சென்றுள்ள மணவாளர்க்கும் துன்பத்தையே தருகின்றது.

"சிறுமையுடைய மாலையானது, நானும் என் காதலரும் வருத்தமுறும்படியாக, இடித்தலோடு கூடியதாகத், தானும் முகிலுமாக இணைந்து வராநிற்கும்; அப்போது யான் என்னடீ செய்வேன்?"

தலைவியின் வருத்தம், இவ்வாறு துயரச் சொற்களாக வெளிவருகின்றது.

**இனத்த அருங்கலை பொங்கப் புனத்த**
**கொடிமயங்கு முல்லை தளிர்ப்ப இடிமயங்கி**
**யானும் அவரும் வருந்தச் சிறுமாலை**
**தானும் புயலும் வரும்.**

'மாலை ஒன்று போதாதோ என்னை வருத்துவதற்கு? அது புயலோடும் சேர்ந்து வருவதேன்? என்னை முற்றவும் அழித்துவிடற்கே போலும்?' இப்படி நொந்து புலம்புகின்றாள் தலைவி.

## 7. வாழ்கிற்பார் இல்

'தோழி! நின் வருத்தத்தின் மிகுதியினை யானும் அறிகின்றேன். என்றாலும், காதற்கணவரைப் பிரிந்து ஆற்றியிருந்து, அவர் மீண்டு வந்தபின் சிறப்புறக் குடும்பத்தை நடத்தலாமென்று ஆற்றியிருக்கும் மகளிர், இவ்வுலகில் எவ்வளவோபேர் இருக்கின்றனர். அப்படியிருக்க, நீ, ஏதோ நினக்கு மட்டுமே புதிதாக இப்படி ஒன்று நேர்ந்துவிட்டது போல

மனத்திற் கொண்டு துடிக்கின்றது நியாயமா? அதனால் நின் உள்ளத்துக் குமுறலை மறந்திரு" இப்படிக் கூறித் தலைவிக்கு ஆறுதல் உண்டாக்க முயற்சிக்கின்றாள் தோழி.

தலைவியோ, "தன்னைப்போல எவருமே வருந்தினவரில்லை" என்று மீளவும் தன்னுடைய வேதனை மிகுதியைக் கூறிப் புலம்புதற்குத் தொடங்குகின்றாள்.

"தோழி! நம் அழகனைத்தும் வாட்டமுறுமாறு நம்மைத் தனியே விட்டுச் சென்றவர் நம் காதலர். அவர், நம்பால் வந்து சேர்வதற்கு முன்பாகவே, கரிய கொடியினையுடைய முல்லையானது. நம் பற்களைப் போன்ற முகைகளைத் தோற்றுவித்துள்ளது.

'அது மட்டுமன்று; கார் முகிலோடு ஒன்றுகூடி வந்து நம்மை வருத்துகின்ற மாலைக்கு, எம்மைப்போல அறியாமைப்பட்டு வலியிழந்து மெலிவாற்றியிருந்து உயிர் வாழ்பவர் யாருமே இல்லை.

துயரத்தினது மிகுதியால், தான் உயிர்விடாதிருக்கின்ற நிலையினைச் சொல்லி, இப்படிப் புலம்புகின்றாள் தலைவி.

**காரிகை வாடத் துறந்தாரும் வாராமுன்**
**கார்க்கொடி முல்லை எயிறீனக்-காரோடு**
**உடன்பட்டு வந்தலைக்கும் மாலைக்கோ எம்மின்**
**மடம்பட்டு வாழ்கிற்பார் இல்.**

'எம்மின் வாழ்கிற்பார் இல்' என்பது. கற்புச் செவ்வியரான பிற மாதர்களாயின், இங்ஙனம் வாழ்ந்திரார்' என்பதாம். அதனால், 'மாலைக்கு எம்மினும் மடம்பட்டு வாழ்கிற்பாரான வேறு துணையுடையார் இல்லை' எனப் புலம்பலின் சோககீதத்தை எழுப்புகிறாள் தலைவி.

## 8. வான் விற்கோலிற்று

தலைவியும் தோழியும் இப்படித் துயரவெள்ளத்திலே நீந்திக் கரைகாண இயலாதபடியாகத் தவித்துக் கொண்டிருந்தனர். மாலைக்காலமும் வந்து சூழத் தொடங்கிற்று. அப்போது, தெருவிலேயிருந்து இனிதான புல்லாங்குழலின் இசையொலி காற்றொடு மிதந்து வந்து கொண்டிருக்கின்றது.

துன்புற்று வருந்தியிருக்கும் தலைவியின் உள்ளத்தை இன்பவூற்றாகிய அந்த இசை வெள்ளத்தின்பால் ஈடுபடுத்தி, அதன் மூலம் சிறிதளவேனும் மாற்றுவதற்கு நினைக்கின்றாள் தோழி.

“தோழி! கொன்றைக் குழலினை ஊதிக்கொண்டு கோவலர்கள் வருகின்றனர். அந்த இசையினது இனிமையைக் கேட்டு முன்னெல்லாம் நாம் எவ்வளவு இன்புறுவோம்? அதனை. மறந்துவிட்டாயா? அதோ அந்த இசைநாதம் நின் துயருக்கு மருந்தாக வந்து கொண்டிருக்கிறது’ என்று கூறுகின்றாள்.

கொன்றைக் குழலின் இசை இனிதுதான். ஆனால் காதலன் அருகிலே இல்லையாகவே, அந்த இனிமையும் அவளுக்கு எரியாகத் தோன்றுகின்றது.

“தோழி, கோவலர்கள் கொன்றைக் குழலினை ஊதியவராகப் பின்னே நிரைத்து நிற்கக், கன்றை விரும்புகின்ற ஆநிரையாகிய கூட்டங்கள் ஊர்க்கண்ணே புகுந்து செல்லுகின்றன. அங்ஙனமாக, இன்று தன்னுடைய ஆட்சியை இவ்விடத்தே நிகழ்த்துதற்கு வேண்டி மாலைக் காலமும் வந்தது.

‘வானத்தே மேகங்களும் யாம் காணுமாறு இடிமுழக்கி யவையாய்த் தோன்றுகின்றன. மழையும் வில்லைக் கோலி வளைத்துப் பெய்யத் தொடங்கிற்று.

‘இந்நிலையில் வருவேம் என்றவர் வராததனால் யான் படும் வேதனைதானேடி மிகுதியாகின்றது’ என்கின்றாள் தலைவி.

**கொன்றைக் குழலூதிக் கோவலர் பின்னிரைத்து,**
**கன்றமர் ஆயம் புகுதர-இன்று**
**வழங்கிய வந்தன்று மாலையாங் காண**
**முழங்கிவிற் கோலிற்று வான்.**

‘யாம் காண’ என்ற சொற்களுள், இழைந்தோடுகின்ற துயரத்தின் செறிவினை நாம் உணர்தல் வேண்டும். ‘தான் இறந்து படாமல் இருந்து காணவும் நேருமாறு’ என்று அவள் சொல்லுகின்றாள்.

கொன்றைக் குழல்--கொன்றைப் பழத்தினைத் குடைந்து துளையிட்டுச் செய்த ஊதும் குழல்.

# 9. நில்லா வளை

தலைவியின் உள்ளத்தே நிலவிய கொடிதான துயரச் சுமையினைத் தோழியும் மிகமிக நன்றாக அறிந்து கொண்டாள். எனினும் அவள் எப்படியாவது தலைவன் வரும் வரைக்கும் அவளை ஆற்றியிருக்குமாறு செய்வதற்கே விரும்பினாள். அதனால், மீண்டும் தேறுதல் மொழிகள் சிலவற்றைச் சொல்வாளானாள்.

அப்பொழுது தலைவி, தான் கொண்ட துயரத்தினை வாய்விட்டு உரைக்கவும் இயலாதவளாகத், தன் கைகளைத் தோழியின் முன்பாக நீட்டுகின்றாள். தோழி திடுக்கிடுகின்றாள்.

'ஏனடி! நின் கைகளிற் கிடந்த வளையல்கள் எல்லாம் எங்கே?' என்று பதற்றத்துடன் கேட்கின்றாள். நீண்டதொரு பெருமூச்சுக்குப் பின்னர்த் தன் நிலைமையைச் சொல்லுகின்றாள், தலைவி.

"தோழி! வானம் மிக்க முழக்கத்துடனே மழை பெய்தலை மேற்கொண்டு கார் காலத்தையும் கொண்டு விட்டது. அதனைக் காணக்காணத் தனிமைத் துயரமும் என்னை அழுத்துகின்றது. என் கையிலிருந்த வளையல்களுள் ஒன்றேனும் எஞ்சி நில்லாவாய் எல்லாமே கழன்று வீழ்ந்தன.

"தவளைகளைப் போன்று ஒலிக்கின்ற மணிகள் அமைந்த கழுத்து மாலையினையுடைய, குதிரைகள் பூட்டப் பெற்ற தேரின் மேல் ஊர்ந்தவராக, நம் காதலர் இன்றும் நம் துயரத்தைப் பொறுத்துக் கொள்ளும்படியாக வராது விட்டுவிடுவாரோ?"

'அன்றாவது தலைவன் வரவேண்டும்' என விரும்புகின்றவள், 'இன்றும் வராது போய் விடுவாரோ?' எனத் தோழியிடத்தே கேட்கின்றாள். தலைவியின் துயரம் எவ்வளவு மிகுதியானது என்பதனைக் காட்டும் செய்யுள் இது.

**தேரைத் தழங்குகுரல் தார்மணி வாயதிர்ப்ப**
**ஆர்கலி வானம் பெயல்தொடங்கிக்-கார்கொள**
**இன்றாற்ற வாரா விடுவார்கொல் காதலர்**
**ஒன்றாலும் நில்லா வளை.**

'அவர் இன்று வருவாராயின் வளையும் கையிடத்தே நிற்பவாகும்' என்றனள். இதனால், தலைவி தலைவன்பாற் கொண்டிருந்த பெருங்காதலும், அவனைப் பிரிந்ததனால் வருந்தியிருந்த வருத்தநிலையும் நன்றாகப் புலனாகும்.

தழங்குதல்--ஒலித்தல்.

## 10. வற்றுவிட்டன்று நீர்!

வானத்தே கார்மேகங்கள் திரண்டெழுந்துள்ளன. அவை கடுமையாக இடித்து முழக்கத்தையும் எழுப்புகின்றன. அந்த முழக்கத்தோடு தொடர்ந்து மழைத்துளிகளையும் சொரிகின்றன. இரவு முழுவதும் இடைவிடாது மழை பெய்து கொண்டிருக்கிறது. மேகங்கள் காற்றாலே அலைக்கழிக்கப்படுதலும் இல்லை. அதனால், அவை அலைதலற்றவை யாயின. நிலையாக நின்று பெயலைச் சொரிந்து கொண்டும் இருந்தன.

மழை பொழியப் பொழிய, மணவாளனைப் பிரிந்திருந்த தனிமைத் துயரம் தலைவியை நலிவிக்கின்றது. அவள் உள்ளமும் குமுறுகின்றது. அந்தக் குமுறலால் அவள் கண்கள் நீரைப் பொழிகின்றன. கண்கள் வடிக்கின்ற நீர் அப்படியே வடிந்து அவளுடைய முலைகளின்மேல் இடையறாது வழிந்து கொண்டிருக்கின்றது. அவளுடைய நெஞ்சத்தினது கொதிப்பினை ஆற்றுவிக்கக் கண்கள் கருணை கொண்டனவோ? அல்லது, தாம் அவளுக்குக் காதலனைக் காட்டிய அந்த நிகழ்ச்சியை நினைந்து, அதுவே அவளுடைய துயரங்கட்கெல்லாம் அடிப்படை யாதலையும் உளங்கொண்டு, வருந்தி வருந்தித் தாமும் துயருற்றுக் கசிகின்றனவோ?

பொழுதும் விடிந்தது; தலைவியும் ஒருவாறு தன்னுடைய துயரத்தை மறந்திருக்க முயன்று கொண்டிருந்தாள். கதிரவன் மெல்ல வானத்தே எழுந்தவன், பகற்பொழுதினை முடித்துக் கொண்டு, மேற்குத் திசையிலே மறைவதற்குத் தொடங்கிக் கொண்டிருந்தான். வானம் சிவந்தது. மாலையின் வரவை அறிவிப்பனபோலக் காட்டிடத்தே வெண்முல்லைகளும் செம்முல்லைகளும் மலர்ந்தன. முல்லை மணம் காற்றோடு கலந்து வந்து தலைவியின்பால் மீண்டும் தனிமைத் துயரைப் பெருக்குகின்றது. அவள் வருகின்ற இரவினை எண்ணித்

தன்னை வாடவிட்டு வராதிருக்கும் தலைவனின் செயலை எண்ணிச் சோர்கின்றாள்.

அந்தச் சமயத்திலே அவளுடைய ஆருயிர்த் தோழியும் அங்கே வருகின்றாள். அவளைக் கண்டதும் தலைவியின் அடங்கிக் கிடந்த சோகமெல்லாம் அணைகடந்த வெள்ளத்தைப் போலப் பொங்கிப் பெருகி வெளிப்பட்டு வருகின்றது. தலைவி தோழியிடம் தன்னுடைய நிலைமையை உரைக்கின்றாள். அவள் சொற்களிலே இழைந்தோடி வருகின்ற துன்பவெள்ளம் நம்மையும் துன்புற வைக்கின்றது.

'ஏனடி! நின் வருத்தத்திற்கும் அளவில்லையோ? இப்படி அழுதழுது கரைந்தால் நின் உடல் எதற்கடி ஆகும்? மார்பெல்லாம் நீரால் நனைந்து விட்டதே? நீர்க்கோப்பு வேறா வரவேண்டும்?' இப்படித் தலைவியைக் கடிந்து கொள்ளுகின்றாள் தோழி, உரிமையுடன்.

"தோழி நேற்று இரவெல்லாம் அசைதலற்று வானமும் மழைபெய்தலை விடாநின்றது. மையுண்ணும் என் கண்களும் முலைகள் மீது நீர் சொரிதலை விடாவாய் இருந்தன.

"இந்த மாலை வேளையிலே, கற்கள் எழுந்து காணும் படியான காட்டுப் பகுதியின்கண்ணே, புதர்களிடத்தே, அழகுடன்கூடி முல்லையும் செம்முல்லையும் மலர்ந்துள்ளன, என் வாழ்வுதான் மலரவில்லை.

இப்படிக் கூறுகின்றாள் தலைவி. அவள் துயரம் பிறரால் உணரமுடியாத பெருந்துயரம்!

**கல்லோர் புறவிற் கவினிப் புதன்மிசை**
**முல்லை தளவொடு போதவிழ-எல்லி**
**அலைவற்று விட்டன்று வானமும் உண்கண்**
**முலைவற்று விட்டன்று நீர்.**

"குன்றங்கள்பால் மழை இரவெல்லாம் பொழிய, அவையெல்லாம் மலர்களான் நிறைந்து அழகுற்றுத் தோன்றுகின்றன. என் முலைக்குன்றுகளின் மேலும் இரவெல்லாம் கண்ணீர் மழை பொழிந்தும், என் நெஞ்சத்தின் வெம்மையும் தணியவில்லை; என் வாழ்வும் மலரவில்லை. இப்படிக் கூறுகின்றாளோ தலைவி!

## 11. நின்றது நீர்

"ஏனடி! இதுவோ மனத்திற்கு மகிழ்வூட்டுகின்ற மாலைக்காலம். இந்த வேளையிலே நின் துயரையெல்லாம் சற்றே மறந்துவிட்டு, அவர் விரைவிலே வந்துவிடுவார் என்ற நம்பிக்கையிலே மனத்தைச் செலுத்தி, அவர் வந்தால் அவருடன் கூடிப் பெறப்போகும் இன்பத்திலே உள்ளத்தைக் களிகொள்ளச் செய்து, சிறிது ஆற்றியிருக்கலாகாதோ?" என்று கூறித் தோழி தலைவியை தெளிவிக்க முயலுகின்றாள்.

அவள் கொண்டுள்ள துயரம் பிறரால் தெளிவித்து மாற்றக் கூடியதா என்ன? தெளிவிக்கத் தெளிவிக்க அது வளர்ந்து பெருகுகின்றது. தோழியின் சமாதான உரைகள் விரகத் தீயை விசிறி கொண்டு விசிறி விசிறி மூட்டி விடுவனவாகவே அமைகின்றன.

"தோழி! மழை பொழிகின்றது. அதனால், வாகை மரங்கள் பூத்து மணம் பரப்புகின்றன. காட்டிடம் எல்லாம் வண்டினங்கள் ஆரவாரிப்புடனே ஒலித்துக் கொண்டு திரிகின்றன. அவற்றைக் காணாய்.

"நற்குணங்களே இல்லாமல், சிறுமை கொண்டு என்னை வருத்துகின்ற மாலைக் காலத்தையும் பாராய். எனக்கு மாறுபட்டு அது என்னை வருந்தி நிற்பதாக, என் கண்களிற் கண்ணீரும் நிலையாக நின்றதேடீ! யான் எப்படியடி ஆற்றியிருப்பேன்" என்கின்றாள் தலைவி.

**கார்ப்புடைப் பாண்டில் கமழப் புறவெல்லாம்**
**ஆர்ப்போடு இனவண்டு இமிர்ந்தாட-நீர்த்தன்றி**
**ஒன்றாது அலைக்கும் சிறுமாலை மாறுழந்து**
**நன்றாக நின்றது நீர்.**

தலைவனின் வாராமையோடு துயருறுகின்றவள். அவனைப் பற்றி எதுவும் கூறி நொந்து கொள்ளவில்லை. மாறாகக் காரினது வரவையும், மாலையினது சிறுமையையும் நினைந்துதான் புலம்புகின்றாள். தலைவியின் கற்பு மேம்பாடும், தலைவன்பாற் கொண்டுள்ள காதல் மிகுதியும் இதனால் தெளிவாகும்.

# 12. படுமழை கொல்

தோழியர் இருவரும் இப்படித் தம்முள் பேசித் துன்பத்தை ஆற்றுவதற்கு முயன்று கொண்டிருந்த வேளையிலே, ஆயன் ஒருவன் தெருவூடு ஆநிரைகளை ஓட்டிக் கொண்டு வந்து கொண்டிருக்கின்றான். மாலை வேளையின் மகிழ்வோடு அவனுடைய உள்ளம் களிதுள்ள, அவன் வந்து கொண்டிருந்த அந்தக் காட்சியை, அவர்கள் இருவரும் காணுகின்றனர்.

குருந்த மலரினாலே தொடுக்கப்பட்ட அசைகின்ற பெரிய தழைமாலையினைச் சூடியவனாக அவன் வருகின்றன். அந்தப் புதுமலர்களிலே தேனுண்ணும் விருப்போடு வண்டினங்கள் அதனைச் சூழ்ந்தவையாக ஆரவாரித்துக் கொண்டு வருகின்றன. தன் பின்னால், ஆநிரைகள் வீடுகளை நோக்கிக் குதூகலத்தோடு வந்து கொண்டிருக்க, நிமிர்ந்த நடையோடு கொன்றையந் தீங்குழலினை வாய்வைத்து ஊதி இன்னிசை எழுப்பியவனாக அவன் வருகிறான்.

அவனைத் தோழிக்குக் காட்டித் தலைவி கூறுகின்றாள். 'தெரிந்த அணிகளைக் கொண்டவளே! அந்த ஆயனது வருகையைக் காணடீ! இந்த நேரத்திலே, அவன் பின்னோடு நின்று பொழிகின்ற பெருமழை போலும், என்னோடு பகைத்து இந்தத் துன்பத்தை விளைக்கும் வகையினைச் செய்வது?' என்று சொல்லிச் சோர்கின்றாள்.

தோழிக்கு விடைசொல்ல நாவெழவில்லை. தலைவியையும் இடையனையும் வானத்தையும் நோக்கி நோக்கி அவளும் தளர்கின்றாள்.

**குருந்தலை வான்படலை சூடிச் சுரும்பார்ப்ப**
**ஆயன் புகுதரும் போழ்தினால் ஆயிழாய்!**
**பின்னொடு நின்று பெயரும் படுமழைகொல்**
**என்னொடு பட்ட வகை.**

ஆயன் வருகின்ற அருமையான அந்தக் காட்சியைக் காட்டுகின்ற சொற்கள் எவ்வளவு பொருள்பொதிந்த சொற்களாக அமைந்துள்ளன என்பதனைக் காணுங்கள். அவன் குருந்த மலர் மாலையினைத் தன் கழுத்திலே சூடிக் கொண்டவனாகக் களிப்புடன் வருகின்றான். அந்த மாலை

அவன் அடியெடுத்து நடந்துவருகின்ற அசைவினாலே தானும் அசைந்தாடிக் கொண்டிருக்கின்றது.

கானத்திலே புதுப்பெயலால் மரங்கள் புதுப்பூக்களை முகிழ்த்துப் பொலிவோடு விளங்குகின்றன. குருந்தின் புதுப்பூக்களைக் கொய்து தொடுத்து அவன் அணிந்து வருகின்றான்: சில பூக்களாலே அமைந்த சிறு மாலையும் அன்று; மிகவும் பெரிய மாலை அது.

மாலையின்கண் விளங்கும் பூக்களிலே தேன் நிரம்பி வழிந்து கொண்டும் இருக்கின்றது. தேனுண்ண விரும்பிய வண்டினங்கள் ஆரவாரத்துடன் மொய்த்துக் கொண்டிருக்கின்றன. அவன் மனம் தன் வருகையை நோக்கிக் காத்திருக்கும் ஆயமகள்பாற் செல்லுகின்றது. அவளுடன் அவன் துய்க்கப் போகும் இன்ப நினைவுகளிலே ஈடுபடுகின்றது. அவன் நடையிலும் புதியதொரு மிடுக்குத் தென்படுகின்றது.

இவ்வாறு, மாலை நேரத்தின் வருகையினாலே, இன்ப மயக்கத்தோடு வந்து கொண்டிருக்கின்ற ஆயனின் வருகைத்தோற்றம் தலைவிக்கு ஆறுதலைத் தருவதற்கு உதவாமற் போனதில் வியத்தற்கு எதுவுமில்லை. அவ்வாறு மாலை தோறும் தன் நாயகன் தன்னை நாடி வருவனாயின் எவ்வளவு இனிதாயிருக்கும் என்றுதான் நினைத்து ஏங்குகின்றாள். அவளுடைய ஏக்கம் துக்கமாக வளருவதற்கு, ஆயனைத் தொடர்ந்து வருகின்ற மழை உதவுகின்றது.

மழைக் காலத்தைக் குறித்து, 'இதன்கண் தவறாது வருவேன்' என்ற தலைவன், வராது பொய்த்த செயலை நினைந்து வாட்டம் பெரிதாகி வருத்த, அவள் சுடுமூச்சினளாகிச் சோர்கின்றாள்.

தலைவியது கற்பின் மேம்பாட்டு நிலையினைக் கவினுறக் காட்டும் சிறந்த செய்யுட்களுள் இதுவும் ஒன்றாகும்.

# 3. பாலை வளம்

**பாலைத் திணையோடு ஒட்டியவாகப் பழந்தமிழ் இளைஞரிடையேயும் கன்னியரிடையேயும் எழுகின்ற உள்ளப் போராட்டங்களை உரைக்கும் பகுதி இது.**

*அன்பின் ஐந்திணை என வழங்கும் ஒழுக்கத்துள், பாலையாகிய ஒழுக்கம் மிகவும் சிறப்புடையது ஆகும். காதலர்களுடைய உள்ளத்திலே நிலவுகின்ற ஆர்வப் பெருக்கினை, அவர்கள் கூடியிருக்கும்போது காண்பதினும், பிரிந்திருக்கும்போது காண்பதுதான், அவர்களைப் பற்றிச் சரியாக மதிப்பீடு செய்வதற்கு உதவுவதாக இருக்கும்.*

*பிரிவினாலே தலைவியின் உள்ளத்தே நிறைகின்ற பெருந்துயரமும், அதனால் அவள் உடல் மெலிதலும், உள்ளம் சோர்தலும் எல்லாம், நமக்கு அவளது காதற் பெருக்கத்தையும் கற்புத் திண்மையையும் தெளிவுறக் காட்டுவனவாகும்.*

*வளமற்றதும், வறட்சி மிக்கதும், வெம்மையின் கொடுமையால் வெந்து கொண்டிருப்பதும் பாலை நிலத்திற்கு உரித்தான பண்புகள். அதனைக் கடந்தே வேற்றுநாடு போகின்றவன் தலைவனாதலாலும், அவனைப் பிரிந்த அவள், அவன் அதனை எப்படிக் கடந்து போவானோ என்றே நினைத்து நலிதலாலும், இந்த ஒழுக்கம் இப்பெயரினைப் பெற்றது போலும்.*

*வளமற்ற பகுதியாதலால், இதன்கண் வாழ்வோர் பிற நிலத்தவரைப் போன்று விளைத்துண்டும் வேட்டையாடிக் கிடைப்பவற்றைத் தின்றும் வாழ்பவராக அமையாது, வழியிடை வருவாரான பிற நிலத்தவரைக் கொன்று கொள்ளையிட்டும், அடுத்திருக்கும் பிற நிலப்பகுதிகளிற் புகுந்து கொள்ளையிட்டும் வாழ்கின்ற தன்மையினராகவே இருந்தனர். இதனால், இவர்களிடையே, பிறரை விருந்தூட்டிப் பேணுகின்ற தன்மை ஏற்படாது. அவரைக் கவர்ந்து பயன்கொள்ளவும், அவரைக் கொன்று கொள்ளையிடவும் கூடிய மனநிலையே உருவாகி விளங்கியது. இத்துடன், பாலையென்பதும் முல்லை குறிஞ்சி என்பன வேனிலின் கொடுமையால் தம் நிலைதிரிந்து கிடக்கும் பகுதியே ஆதலால், கொடு விலங்குகளும் அப்பகுதிகளில்*

திரிவனவாக இருந்தன. இதனால் இந்த வழியோடு சென்று பொருளீட்டி மீள்வதென்பது, பெரிதும் இடர்ப்பாடான முயற்சியாகவே விளங்கியது. இந்தச் சூழ்நிலையும் தலைவியரின் பிரிவுத்துயரோடு சேர்ந்து கொள்ள அவர்களுடைய வருத்தம் அளவின்றி மிகுதியாகின்றது.

இங்கே ஒன்றை நாம் மனத்திற் கொள்ளல் வேண்டும். பாலை நிலத்து மக்களை **மறவர்** என்று குறிப்பதனால், மறவர் எல்லாருமே பண்டை நாளில் பாலைவாழ் பகுதியினரைப் போன்றே, இரக்கமற்ற கொடுந்தகையினராக இருந்தனர் எனக் கொண்டுவிடுதல் கூடாது. போர்வீரராகிய மறமாண்பினை உடைய பிற நிலத்தவரும் மறவராகவே இருந்தனர். அவர்களுடைய பண்பு மிகமிகச் சால்பு உடையதாகவும் இருந்திருக்கிறது. ஆகவே, இல்லாமையே பாலைநிலத்தவரின் கொடுமையான மனப்போக்கிற்குக் காரணமாதலை உணர்தல் வேண்டும்.

இனிப் பிரிவு என்பது, காலினும் கலத்தினும் என இரண்டாக அமையும் என்பதனையும், காலிற் பிரிவு தரை வழிச் செலவையும், கலத்திற் பிரிவு கடல் வழிச் செலவையும் குறிக்கும் என்பதனையும் அறிதல் வேண்டும்.

## 1. சுரம் நிரைத்து

தலைமகன், தலைவியைப் பிரிந்து பொருள் தேடி வருதலின் பொருட்டாகச் செல்லுதற்கு விரும்பியவனாக, அதற்கான திட்டங்களை அவளறியாதேயே மேற்கொள்ளுகின்றான். ஆனால், இதனைக் குறிப்பினாலே உணர்கின்றாள் தலைவியின் தோழி, தலைவனின் ஆர்வம் தலைவியை விட்டுப் பொருளின்பாலாக முடுகிச் செல்லுதலை அறிந்து, அவள் மனம் பெரிதும் வேதனைப்படுகின்றது. அவ்வாறு நிகழாமல், அவன் செலவினைத் தடுக்கவேண்டும் எனவும், அவனது ஆர்வத்தை மீண்டும் தலைவியின்பாலாகத் திருப்பவேண்டும் எனவும் அவள் கருதுகின்றாள். அந்தக் கருத்துடனே தலைவியிடத்து வந்து, தலைவனது விருப்பத்தைப் பற்றிக் கூறி அவளை எச்சரிப்பதிலும் ஈடுபடுகின்றாள்.

இப்படிச் சொல்லும் தோழி, நேரடியாகச் செய்தியைச் சொல்லவும் தொடங்கினாளில்லை. மிகவும் நயமாகவும், பக்குவமாகவும், மறைமுகமாகவே குறிப்பாக உணர்த்துகின்றாள்.

'தோழி! நம் தலைவர் மிகமிகப் பெருந்தன்மையாளர். அத்துடன் சிறந்த தகுதியினையும் உடையவர் அவர். அவருடைய ஊக்கத்திற்குப் பொருத்தமாகவே இப்பொழுது அரும்பொருள் தேடிவருதலில் அளவற்ற விருப்பம் உடையவராக இருக்கின்றனர்.'

'இறந்தோரது பீடும் பெயருமாகியன எழுதப்பட்டு விளங்குவன நடுகற்கள். இதனை நீயும் அறிவாய். இவை வரிசையாக நடப்படுவதற்குக் காரணமாகிய சிறப்புடன், அம்பினைத் தொடுக்கின்ற செயலினையும் செய்பவர்கள் பாலைப்பகுதியின் வீர மறவர்கள். அவர்கள் தமக்கும் மாறுபட்டவர்களை வருத்துவதற்கு இடமாகிய பாலை வழியினைப் பற்றியும் நீ கேட்டிருப்பாய்.

'நின் காதலரது பெருவிருப்பம் எல்லாம், இப்பொழுது அத்தகைய பாலை வழியிலே பொருள் தேடிவரச் செல்லுதலிலேயே இருக்கிறது' என்கிறாள்.

தோழியின் பேச்சு, தலைவனின் பிரிவினைப் பற்றிக் கூறுவதையும், அதனால் தான் வருத்தம் உறாதபடிக்கு மறைமுகமாகச் சொல்லப்படுவதையும், தலைவி உணராமல் இல்லை. அவளுடைய சுடுமூச்சு அவள் அதை உணர்ந்ததும் அடைந்த சோகத்தை வெளிப்படுத்திற்று.

**எழுத்துடைக் கன்னிரைக்க வாயில் விழுத்தொடை**
**அம்மா றலைக்குஞ் சுரநிரைத் தம்மா**
**பெருந்தகு தாளாண்மைக் கேற்க வரும்பொருள்**
**ஆகுமவர் காதல் அவா.**

வரும்பொருளிலே செல்லுகின்ற தலைவனது அவாவினைப் பிழையுடையதென்று எவராலும் கூறமுடியாது. இதனைத் தோழியும் உணராமலில்லை. அதனால்தான், அது தலைவனின் பெருந்தகு தாளாண்மைக்கு ஏற்கவே அமைவது என்கின்றாள்.

சுரத்தின் கொடுவெம்மையை 'எழுத்துடைக் கன்னிரைத்த வாயில் விழுத்தொடை அம்மாறு அலைக்குஞ் சுரம்' எனக் கூறினள். அதனைக் கடந்து போதற்குத் தலைவன் முற்படுதல் அவனுக்கே மிகவும் ஆபத்தானது என்பதனையும், அதனால் அதனைக் கைவிடுமாறு அவனைத் தூண்டுதலே சிறப்பானது என்பதனையும், தோழி குறிப்பாகத் தலைவிக்கு இப்படி உணர்த்துகின்றாள்.

## 2. பாரார் கொல்!

தோழி சொல்லியவற்றைக் கேட்டதும், தலைவியின் உள்ளத்திலே, பலப்பல சிந்தனைகள் அலையலையாக எழுகின்றன. அவற்றையெல்லாம் ஒருவாறு அடக்கிக் கொண்டவளாக அவள், தலைவனின் செலவு அவனுக்கும் ஆபத்து விளைக்கக் கூடியதாயிற்றே என, அதைக் குறித்துத் தான் பெரிதும் கவலைப்படத் தொடங்குகின்றாள். இந்தக் கவலையோடு, தோழியின் பேச்சிற்கு எதிராகத் தன்னுடைய கருத்தினையும் சொல்லுகின்றாள்.

தோழி, 'கண்ணோட்டம்' என்பதாகிய ஒன்று மிகவும் மென்தன்மையினைக் கொண்டிருப்பதாகும். நம் தலைவரோ, இப்பொழுது, நம்மேல் அத்தகைய அருள் நோக்கத்தினை இல்லாதாராகவே போய்விட்டனர்!

'பொருளினைத் தேடிவருதலிலே தம் மனத்தைப் போகவிட்டவர் அவர் என்கின்றாய். முன்னர், நம்மை என்றும் பிரியாதிருப்பதாக நமக்கு உறுதி கூறியவரும் அவரே அன்றோ! இப்போது, பிரிய நினைப்பவரும் அவரேதாம்! ஆயின், நிலையற்ற உள்ளத்தவரான அவரது கருத்தினை, நீயும் இப்போது உணர்ந்து சொன்னாய்.

'வில்லின் ஆற்றலினாலே ஆறலைத்து உண்ணுகின்ற ஒழுக்கத்தை உடையவர்கள் மறவர்கள். அவர்கள் விரைந்து வழிச்செல்வாரை வருத்திக் கொள்ளையடிப்பார்கள் என்பதனையும் கேட்டிருக்கின்றோம். கற்கள் சூழ்ந்துள்ள சிறு தூறுகள் நிறைந்தது பாலை நிலத்து வழி என்றும் அறிந்தோர் சொல்வார்கள். அதனால், கொள்ளையிடும் அவர்கள், பிறர் அறியாதேயே மறைந்திருந்து தம் தொழிலினைத் தவறாது செய்து, அதனிடத்துத் தாமே வெற்றி கொள்வதும் இயல்பாகும். இத்தகைய கொடுமையினை உடைய வழியென்பதைக் கூட் அவர் நினைத்துப் பார்க்க மாட்டாரோ? யான் இனி யாது செய்வேன் தோழி?'

இவ்வாறு சொல்லிச் சோர்வு கொள்ளுகின்றாள் தலைவி. அவளுடைய ஏக்கச் சுமையினைப் பாடலிலேயும் தெளிவாகப் பார்க்கின்றோம்.

**வில்லுழுது உண்பார் கடுகி யதரலைக்கும்**
**கல்சூழ் பதுக்கையா ரத்தத்திற் பாரார்கொல்**
**மெல்லியல் கண்ணோட்டமின்றிப் பொருட்கிவர்ந்து**
**நில்லாத உள்ளத் தவர்.**

*தலைமகன், தன்னைப் பிரிந்து செல்வதற்கு மனம் இசையாத தலைவி தன்பால் வந்து பிரிவினை உணர்த்திய தோழிக்கு, இப்படித் தன் மனநிலையைக் கூறுகின்றாள். தன்னைப் பிரிக்கின்றான் என்பதிலும், அவன் செல்லும் வழியது ஏதத்தையே நினைந்து பெரிதும் கவலைப் படுகின்ற தலைவியின் உள்ளச் செவ்வியினை, நாமும் உணர்ந்து போற்றுதல் வேண்டும்.*

## 3. வாழ்தியோ உயிரே!

*தலைவன், தன்னுடைய முடிபின்படியே தலைவியைப் பிரிந்து பொருள்தேடி வருதலின் பொருட்டாகச் சென்று விடுகின்றான். அவனுடைய அந்தச் செயலை நினைக்க நினைக்க தலைவியால் தாங்கிக் கொள்ளவே முடியாத பெருந்துயரம் உண்டாகின்றது. அவளுடைய இன்ப வாழ்வைப் பற்றி அவள் கட்டியிருந்த கோட்டைகள் பலப் பல. அவையெல்லாம் படபட எனச் சரிந்துவிட்டன போலவே அவளுக்கு அப்போது தோன்றுகின்றது.*

*பொருள்மேற் சென்ற தலைவன், பொருளைத் தேடிக் கொண்டதும் மீளவும் வந்து தன்னோடு கூடியிருப்பான் என்ற நம்பிக்கையோ, அவனோடு மீளவும் தன் வாழ்வு மலரும் என்ற நம்பிக்கையோ அவள் ப ால் நிலைபெறவே இல்லை. அத்துடன் அவளுடைய வாழ்வின் மீதும் அவளுக்கு ஒருவித வெறுப்பு ஏற்பட்டுவிடுகின்றது.*

*தன்னைத் தனியே வாடியிருக்கும்படியாக விட்டு விட்டுத், தான் பொருள்தேடி வருதலின் பொருட்டாகத் தலைவன் போயுள்ளானே! அதுதான் பாதுகாப்பாகத் திரும்பி வருதற்குரிய வழியினை உடையதாகவாவது இருக்கிறதா என்றால் அதுவுமில்லையே! அவனைப் பிரிந்திருப்பதனால் வந்துறுகின்ற காமவெம்மை ஒருபுறம் தன்னை வாட்டி வதைக்க, மற்றொரு புறம் அவன் சென்ற வழியினது கொடுமையைக் குறித்த எண்ணங்கள் தன்னைக் கலங்கித் துடிக்கச் செய்ய, அவள் உள்ளம் பெரிதும் வேதனைப்படத் தொடங்கியது.*

தீராத அவ்ளுடைய இந்த வேதனை, வாழ்க்கையை வெறுத்துவிடுகின்ற அந்த அளவுக்கும் அவளைக் கொண்டு போய்விடுகின்றது. அவள் நெஞ்சம் நைந்து புலம்புகின்றாள். முடிவில், தன் உயிரை விளித்து, அவள் தனக்குத் தானே பேசிக் கொள்ளுதலையும் மேற்கொள்ளுகின்றாள். அந்தப் பேச்சு இது:

**போழ்வாய் இரும்புலி குஞ்சரங் கோள்பிழைத்துப்**
**பாழ்நீர்ப் பொதியில் புகாப்பார்க்கும் ஆரிடைச்**
**சூழாப் பொருணசைக்கட் சென்றோர்அருள்நினைந்து**
**வாழ்தியோ மற்றோ உயிர்?**

"எனது உயிரே!

"பிளந்த வாயினை உடையது புலி. அது யானையைத் தனக்கு இரையாக்கிக் கொள்ள நினைத்து, அதன் மேற் பாய்ந்தது. அந்த முயற்சியிலே அது வெற்றிபெற வில்லை. அதனால் அது பெரிதும் சோர்வுற்றது. மறவரது கொள்ளையிடலால் பாழ்பட்டுக் கிடந்த ஊரினது மன்றத்தின் கண்ணே புகுந்து, உணவிற்கு வகை கிடையாதா என்று பார்க்கவும் தொடங்கிற்று. அப்படிப்பட்ட கொடுமையினை உடையது, நம் தலைவர் சென்றுள்ள வழி" என்பார்கள்.

"அத்தகைய இயல்புடைய பாலைவழியூடே, தாமும் போதலைத் துணிந்து, தம்முடைய பொருள் விருப்பினாலே சென்றிருப்பவர் நம் காதலர். அவர் திரும்பி வந்து அருளுதலை நினைந்து, நீயும் இவ்வுடலின் கண் பொருந்தி வாழ்கின்றாயோ?"

'அவர் வருவது எளிதன்று; ஆதலின், என் உயிரே, நீ இன்னே இறந்துபடுக' என்பது கருத்து. உயிரும் கசக்கின்ற சோகநிலை இது.

## 4. காணப் புணர்ப்பது

மேற்கண்டவாறு தனக்குத்தானே தன்னுடைய உயிரினை வெறுத்துப் புலம்பிக் கொண்டிருந்த தலைவியைக் கண்டதும், அவளுடைய ஆருயிர்த் தோழி பெரிதும் மனவருத்தம் அடைகின்றாள்.

'இவள் இப்படிப்பட்டவள் என்பதனை அறிந்தும், அவர் இவளைத் தனித்திருந்து புலம்புதற்கு விட்டுவிட்டுப் போயினரே?

எனத், தலைவியின் காதலனைத் தன் உள்ளத்துள்ளே நொந்து கொள்ளவும் செய்கின்றாள்.

எனினும், தலைவியைத் தெளிவித்து ஆற்றியிருக்குமாறு சொல்லி, அவளுடைய நலிவினை மாற்றவும் நினைக்கின்றாள்.

'தோழி! அவர் போயினது என்பது ஏதோ நிகழ்ந்து விட்டது. இனி, அதனை நினைந்து நீ வருந்துவது, நின் உடலையும் உயிரையும் நீயே வருத்திக் கொள்வதுதானே அல்லாமற் பிறிதேதும் நன்மை தருவதாக இல்லை. அவர் இடையிலே மனம் மாறியவராகத் திரும்பிவந்து விடுவார் என்பதும் நிகழாது. ஆகவே,'சென்றவர் தம்முடைய செயலை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு, நல்லபடியாகத் திரும்புதலையே நீ விரும்புவாயாக' என்று தலைவிக்கு ஆறுதலாகத் தோழி சொல்கின்றாள்.

தோழியின் இந்த ஆறுதல் உரைகள், தலைவியிடத்தே மேலும் வருத்தத்தை மிகுவிப்பவாக ஆயினவேயன்றி, தீர்ப்பனவாக அமையவில்லை. அவள்,தோழியின் ஆறுதலுரையை ஏற்று அதன்படி அமைந்திருக்க இயலாத தன்னுடைய நெஞ்சினது தன்மையினைத் தோழிக்கு எடுத்துக் கூறுகின்றாள்.

'ஆய்ந்தெடுத்து அணிந்திருக்கும் அணிகளைப் பூண்டிருப்பவளே!

'என் மனமானது, இப்போது நாணத்தைத் துறந்து விட்டது. தலைவருடன் சென்று, உயிரோடு அவரைக் காண்ப தையே விரும்புவதாக இருக்கின்றது. ஆனால், அவரோ, நீரற்றதும் கடத்தற்கரியதுமான சுரத்தின் வழியாகச் செல்கின்றார். அங்கே, காட்டுப் பசுக்களின் கூட்டமானது நீரினை வேட்டுத் திரிந்து கொண்டிருக்கும். அவ்வழியே செல்லும் இவர்தாம், அதனைக் கடந்தும் செல்பவர் ஆவாரோ? இதனை நினைத்துத்தான் என் நெஞ்சம் இப்போதும் துடிக்கின்றது.'

தலைவியின் மனநிலையை விளக்கும் இந்தப் பொருள் பொதிந்த பேச்சு, மூவாதியரையும் கவருகின்றது. அவர் அதனை நாமும் உணரும்படிக்கு, நமக்கும் எடுத்துரைக்கின்றார். பொருட் குறைவினையாவது பொருத்துக் கொள்ளலாம்; ஆனால் அதனைத் தேடுவதற்கு ஆபத்தான முயற்சிகளிலே இறங்கும் கணவனது முயற்சிகளை ஒரு மனைவியால் பொறுத்திருக்க

இயலுமா? இயலாது என்பதனைத்தான் இச் செய்யுளால் நமக்குக் கூறுகின்றார் அவர்.

**நீரில் அருஞ்சுரத்து ஆமான் இனம்வழங்கும்**
**ஆரிடை யத்தம் இறப்பர்கொல் ஆயிழாய்!**
**நாணினை நீக்கி உயிரோடு உடன்சென்று**
**காணப் புணர்ப்பதுகொல் நெஞ்சு?**

இதனைக் கேட்டதும் தோழியின் உள்ளமும் வேதனையடையத் தொடங்குகின்றது. இந்த நிலையிலே துயருறும் தலைவியைத் தெளிவிக்க, மேலும் எதனை உரைப்பது என்ற சிந்தனையிலே, அவள் அதன்பின் ஆழ்ந்து விடுகின்றாள்.

ஆமான்--காட்டுப்பசு. புணர்ப்பது--விரும்புவது

## 5. வலன் உயர்ந்து தோன்றும்

ஒரு தலைவனும் தலைவியும் களவு உறவிலே கூடித் திளைத்து வருபவராக இருக்கிறனர். அது முற்றவும் நீடிக்காது என்பதனை உணர்ந்த தலைவன், தலைவியை வரைந்து மணவாட்டியாகக் கொள்ளுதலிலே மனஞ் செலுத்தத் தொடங்கினன். இந்த நினைவினாலே உந்தப்பட்ட அவ்வன், அதற்கான பொருளைத் தேடி வருதலை மனத்துட் கொண்டவனாகத், தலைவியைப் பிரிந்து வெளி நாட்டிற்குப் போயிருந்தனன்.

'வரைவிடை வைத்துப் பிரிந்தனன்' என்றபோது வரைவு தனக்கு நிலையான இன்பத்தைத் தருவது என்பதனை அறிந்திருந்தாலும், தலைவியின் உள்ளம் அவற்றின்பால் எல்லாம் செல்லவில்லை. அவள் உள்ளமெல்லாம் தலைவனது செலவினை ஒட்டியே சுழன்று கொண்டு இருந்தது. தலைவியின் இந்த நிலைமையைக் கண்டு அவளது ஆருயிர்த்தோழி மனங் கலங்குகின்றாள். அப்போது, தலைவி அவளுக்குச் சொல்லுகின்றாள்,

'புள்ளிகள் ஒளியோடு விளங்கும் காட்டுக் கோழிச் சேவலானது வரிகளையுடைய மரற்செடியினைத் தன் அலகினாற் குத்திப் போடுதலினாலே, வழியிடை எல்லாம் தோன்றாதபடி தூர்ந்துபோய்க் கிடக்கின்ற ஒரு நிலையைக் கொண்டிருப்பது காடு. அதன் வழியாகக் கடந்து சென்றவர் அவர். அவரை நினைந்து நாமும் துடித்திருந்தோம்.'

'ஊரிடத்தே பிறரைப் பழித்துப் பேசுதலிலே ஈடுபடுகின்ற பெண்களுக்குக் குறைவே இல்லை. அவர்கள் நம் களவினை அறிந்துவிட்டனர் என்றால், பழிச்சொற்களை அயராது மிகவும் எடுத்துப் பேசுவார்கள்.'

'மலையிடத்தே நாட்டப் பெற்றிருக்கும் கொடியினைப் பார். எவ்வளவு தொலைவுக்கு அதன் தோற்றம் பரவி நிற்கிறது. அதைப்போன்று வெற்றியுடன் நாற்றிசையும் பரவக் கூடியதன்றோ அந்தப் பழிச்சொற்களும்! இனி, யான் யாது செய்வேனோ?' என்கின்றாள்.

தலைவியது இந்த நிலைவிளக்கம் தோழியைப் பெரிதும் வருத்துகின்றது. அவள் உள்ளமும் வேதனை வெள்ளத்திலே சிக்குண்டு தத்தளிக்கத் தொடங்குகின்றது.

**பொறிகிளர் சேவல் வருமரற் குத்த**
**நெறிதூர் அருஞ்சுரம்நாம் உன்னி-அறிவிட்டு**
**அலர்மொழி சென்ற கொடியக நாட்ட**
**வலனுயர்ந்து தோன்று மலை.**

'சேவல்' என்றது காட்டுக் கோழியின் சேவலை, 'அது குத்திக் கிளைத்துப் போடுதல் காரணமாக வழி தூர்ந்து கிடக்கும் கடத்தற்கரிய சுரம்' என்பது, நெறியினது கொடுமையைக் கூறியதாகும்.

நல்ல செய்திகள் மெல்லவே பரவக்கூடியன. ஆனால் பழிச்சொற்களோ மிக விரைவில் நாற்றிசையும் பரவி விடும். இந்த உண்மையையும் நயமாகக் கூறுகின்றது செய்யுள். அதற்கு அஞ்சிய தலைவியையும் நாம் காண்கின்றோம்.

## 6. ஈரமற்ற நெஞ்சினர்!

தலைவன் ஒருவன் தன் தலைவியைப் பிரிந்து வேற்று நாடுகளுக்குச் சென்று பொருளீட்டி வருதலை நினைக்கின்றான். தன்பால் தலைவி கொண்டிருக்கின்ற பேரன்பினை அவன் அறிவானாதலால், அவனுடைய உள்ளம் பெரிதும் சஞ்சலப்படத் தொடங்குகின்றது. ஆதலால், தானே தன்னுடைய எண்ணத்தைத் தலைவியிடத்தே சொல்லக்கூடிய துணிவும் அவனிடம் எழவில்லை. மாறாகத், தான் சொன்னால் அவள் நிலை என்னாகுமோ என்ற கவலையே அவன் மனத்தில்

படருகின்றது. என்ன செய்வதென்று மயங்கிய அவன் உள்ளத்திலே, தலைவியினுடைய தோழியின் நினைவு எழுகின்றது.

தோழி, பேச்சிலே மிகவும் சாமர்த்தியமாக நடந்து கொள்ளும் திறனைக் கொண்டவள். இதனை அவன் நன்றாகவே அறிந்தவன். ஆகவே, தலைவிக்குச் செய்தியை நயமாக எடுத்துக்கூறி, அவள் இசைவினைப் பெற்றுத் தருமாறு, அவன், தோழியை வேண்டிக் கொள்ளுகின்றான்.

தலைவனது எண்ணத்தை அறிந்த தோழி, முதலில் ஆத்திரங் கொண்டனளானாலும், பின்னர், அவன் பொருள் தேடிவரப்போவது நியாயமானதே என்றும் உணர்கின்றாள். அதனால், தலைவிபாற் சென்று, தலைவனது நிலையைக் கூறி, அவளை அமைதியுற்றிருக்கச் செய்தற்கும் தொடங்குகின்றாள்.

'தோழி! நின் தலைவர் நின்னைப் பிரிவதற்கு மனமில்லாது இருக்கின்றார். என்றாலும், பொருள் தேடிவரப் போகாதிருப்பின், அது, தனக்கும் நினக்கும் இழிவுடையதாகவே ஆகிவிடலாம் என்றும் அஞ்சுகின்றார்.

'மேலும், பொருள் இல்லாது வாழ்வு செழுமை உறுவதில்லை. இந்த உண்மையினையும் நீ அறிவாயன்றோ! ஆகவே, ஆண்மையாளராகிய அவர், அறிவோடு மேற்கொள்ளு கின்ற இந்தச் செயலுக்கு இசைவுதந்து ஊக்கியிருப்பதுதான் நமக்கு அழகாகும். அதனால், அவரைப் பிரிந்து நாம் துயருறுதல் நேரலாம். அதனையும், அடுத்து வருகின்ற புகழமைந்த வாழ்வினை மனங்கொண்டு ஆற்றியிருத்தலே வேண்டும். அதுவே, நாம் செய்ய வேண்டுவது' என்கின்றாள்.

இப்படிப் பக்குவமாகவே தலைவியின் மனத்திலே படுமாறு தோழி நயம்படச் செய்தியைக் கூறினாலும் தலைவியின் உள்ளம் அதனால் மிகவும் புண்பட்டு வருந்துதலையே கொள்ளுகின்றது. காதற்செறிவினாலே கவியப் பெற்றிருக்கின்ற அவளுடைய உள்ளத்திலே, அந்த இன்ப நினைவும், அதனை நிலையாகப் பெறுதற்குத் தலைவன் தன்னருகேயே எப்போது இருக்க வேண்டும் என்ற ஆர்வமுந்தான் மேலோங்கி நின்றதே அல்லாமல், உலகியல் நினைவுகள் எதுவுமே எள்ளளவும் எழவில்லை. அவள் உள்ளக் குமுறலை அவள் வாய்மொழியாகவே நாமும் காண்கின்றோம்.

"தோழி!

நம் தலைவர் நம்பால் இரக்கம் என்பதில்லாத நெஞ்சினை உடையவராக ஆகிவிட்டார்.

'பீர்க்கங் கொடிகள் மேலேறிப் படர்ந்துள்ள கூரைகளையுடைய பாழ்பட்டுக் கிடக்கும் பாலைநிலத்துக் குடிசைகளிலே, கூர்மையான நகங்களையுடைய கரடியினது பெரிய கூட்டங்கள் எல்லாம் தங்கி உறக்கங் கொண்டிருக்கும் தன்மையது காட்டுநெறி' என்பார்கள்.

உண்ணுதற்கு. நீரும் இல்லாதபடி வறட்சியுற்றுக் கிடக்கின்ற அத்தகைய பாலை நிலத்தினது கொடுமையினைத் தம்நெஞ்சத்தே நினைத்துப் பார்த்து, அவ்வழிச் செல்லுதலும் வேண்டாதவொன்று என்பதனை அவர் அறியாரோ?'

அவர் செல்வதைப் பற்றித் தான் எந்தக் கருத்தையும் தலைவி கூறுதற்குத் துணிந்தனள் இல்லை. ஆனால், தலைவன் செல்லுகின்ற வழியினது ஏதத்தைக் குறித்துத்தான் அவள் பெரிதும் கவலைப்படுகின்றாள். 'பாழ் அடைந்த குடிசைகளிற்கூட இவரால் தங்குவதற்கு முடியாதே? என்ன செய்வாரோ?' என்றுதான் அவள் கவலைப்படுகின்றாள்.

**பீர்இவர் கூரை மறுமனைச் சேர்ந்தல்கிக்**
**கூர்உகிர் எண்கின் இருங்கிளை கண்படுக்கும்**
**நீரில் அருஞ்சுரம் உன்னி யறியார்கொல்**
**ஈரமில் நெஞ்சின் அவர்.**

'பீர் இவர் கூரை மறுமனை' என்றலால், அப் பகுதிக் கண் குடியிருந்தாருங்கூடக் கோடையின் வெம்மைக்கு ஆற்றாது தம் குடியிருப்பைக் காலிசெய்து போய் விட்டனர் என்பது விளங்கும். விளங்கவே, அவ்வழிச் செல்வார் உறக்கூடிய கொடுந்துன்பமும் உணரப்படும். இப்படித் தலைவனின் நினைவாகவே வாழ்கின்ற உள்ளச் செவ்வியினராகத் தலைவியர் திகழ்கின்றதனையும் இச் செய்யுளால் நாம் அறியலாம்.

## 7. தெருள் இலார்

தலைவன் கடந்து செல்கின்ற கானத்தின் நினைவினைத் தலைவியால் மறக்கவே முடியவில்லை. அதனையே உளங்கொண்டு பன்னிப் பன்னிப் புலம்புகின்றாள் அவள்.

'ஏனடி! அவர் சென்றுவிட்டார் என்பது நடந்து விட்டது. இனி, அவர் செல்லும் வழியினது ஏதத்தையே நினைத்துப் புலம்பிச் சோர்வினைக் கொள்வதனால் பயன் யாது? செல்லும் அவர், எவ்வித இடையூறும் அற்றவராகி இனிதே கடந்து போவாராக என்று விரும்புவதுதான் முறை. ஆகவே, அதன்பால் நின் நினைவினைச் செலுத்தி அமைக' என்று, தலைவிக்குத் தேறுதல் கூறித் தெளிவிக்க முயல்கின்றாள் தோழி.

'தோழி! அவர் இப்போதெல்லாம் நன்மை தீமைகளைப் பகுத்தறிந்து ஒரு முடிவுக்கு வருவதற்குரிய தெளிவினையே இல்லாதவராகப் போய்விட்டார்; அதுதான் என் மனம் பெரிதும் வருந்துகின்றது' என்கின்றாள்.

'அவர் தெளிவற்றவர் என்று எதற்காகக் கூறுகின்றாய்? நாட்டிலுள்ளாரான ஆடவர் பலரும் மேற்கொள்ளும் செயலைத்தானே அவரும் செய்கின்றார். அவரை ஏனடி பழிக்கின்றாய்?' என்கிறாள் தோழி.

'இதோ என் நிலைமையைப் பாரடி! ஊரிலுள்ள பலரும் என்னைக் கைவிட்டுச் சென்ற அவரது கொடுஞ்செயலைக் குறித்துப் பழிப்பதையும் அறிவாய் அல்லவோ! இவை எல்லாம் என்னோடு அமைவனவாக என நீக்கி விட்டு, இவற்றைப் பற்றி எவ்விதக் கவலையும் இல்லாதே, அவர் போயினது முறையோ? அதுதான் அறிவிலே தெளிவுடையார் செய்வதோ?' தலைவியின் பேச்சிலே ஏக்கமும் பிரிவின் வெம்மையும் இழைந்து வெளிவரக்கண்ட தோழி, எதுவும் சொல்வதற்கு இயலாதவளாக அமைகின்றாள். தலைவியே மீண்டும் பேசுகின்றாள்.

'பிரப்பம் புதர்கள் மிகுந்தது காட்டு வழி. அவ்விடத்தே அணிற்பிள்ளைகள் ஒலித்துக் கொண்டிருக்கும் கொல்லைகளாற் சூழப்பெற்ற ஊர்கள் இருக்கும், அவ்விடத்தே பொருந்தியுள்ள சேவலானது காடைப் பறவையுடனே சண்டையிட்டபடியே இருக்கும் எனவும் சொல்வார்கள்.

'அத்தகைய கானத்தின் வழியாகப் படர்ந்து செல்லும் பேய்த்தேரின் துணையோடு இவரும் செல்லுபவர் ஆவாரோ? என்று சொல்லி, மேலும் கவலைக் கடலுள் ஆழ்கின்றாள் தலைவி.

**சூரற் புறவின் அணில்பிளிற்றும் சூழ்படப்பை**
**ஊர்கெழு சேவல் இதலோடு-போர்திளைக்கும்**
**தேர்ஓடு கானந் தெருளிலார் செல்வார்கொல்**
**ஊர்இடு கவ்வை யொழித்து?**

*செய்யுளின் அமைதி, தலைவியின் உள்ளத்தின்கண் நிரம்பிநிற்கும் ஏக்கமிகுதியை மிகவும் தெளிவாகவே நமக்கு உணர்த்துகின்றது.*

*சூரல்-பிரம்பு, புறவு-காடு, இதல்-காடை, தேர்-பேய்த்தேர், தெருள்-தெளிவு, படப்பை-கொல்லை; தோட்டம், கவ்வை-பழியால் எழுகின்ற ஆரவாரம்.*

## 8. கள்ளர் வழங்கும் சுரம்

*தலைவியின் மனநிலையைக் கண்ட தோழியின் உள்ளம் பெரிதும் துயர்க்கடலுள் ஆழ்கின்றது. சொல்வதறியாதும் செய்வதறியாதும் அவள் சோர்கின்றாள். முடிவில், அவள் உள்ளம் தலைவியின் ஆற்றாமை மிகுதியை நினைந்து வருந்துகின்றது.*

*'அவர் பிரிவினை எப்படித்தான் நீ பொறுத்துக் கொண்டு அவர் மீண்டும் வரும்வரை ஆற்றியிருக்கப் போகின்றாயோ? அதுதான் எனக்கு இப்பொழுது பெருங் கவலையாக இருக்கிறது' என்கிறாள் தோழி.*

*தோழி அப்படிக் கேட்டதும், தலைவியின் பண்பு மேலோங்குகின்றது. தன் ஆற்றாமையையும் மறைந்தவளாகத், தன்னால் அந்தப் பிரிவையும் ஆற்றியிருத்தற்கு இயலும் என்று கூறுவதற்கு முற்படுகின்றாள்.*

*'தோழி!*

*'நம் காதலரின் உள்ளமானது போவதற்குக் குறித்த வழியினது தன்மையினைச் சென்றறிந்தார் சொல்ல யாமும் கேட்டுள்ளோம் அல்லவோ?*

*'முட்களையுடைய மூங்கிற் புதர்கள் சூழவும் பின்னிக் கிடக்கும் பகுதி அது என்பார்களே? அவ்விடத்தே புள்ளிகளையுடைய காட்டுப் பூனையானது, தன் குட்டிக்கு உணவைத் தேடித் திரிந்து கொண்டிருக்கும்' எனவும் உரைப்பார்களே!*

'இவற்றுடன்' ஆறலை கள்வர்கள் திரிந்து கொண்டிருக்கும் கொடிதான பாலைநிலம் அதுவெனவும் கூறுவார்களே!

'இதனால் அவர் செல்ல நினைத்தாலும், அவ்வழியினை அணுகியதும், தம் எண்ணத்தை மாற்றிக் கொண்டு, மீளவும் நம்பால் திரும்பி வந்து விடுவார். அந்த எண்ணத்தால் நானும் கவலையினைச் சிறிது மறந்திருக்கின்றேன். நீ நினைப்பது போல் எனக்கொரு இடர்ப்பாடும் வந்துவிடாது' என்கின்றாள் தலைவி.

தலைவியின் இந்த உரை, தோழியின் கவலையைக் குறைக்கின்றது. எனினும் அவள், தன்னைக் கவலைப் படாதிருக்கச் செய்வதற்கே, தலைவி தன் வருத்தத்தை மறைத்துக் கூறுகின்றாள் என்பதனையும் உணர்கின்றாள். உணர்ந்து, தன் மனத்துள்ளே மயக்கங் கொள்ளவும் தொடங்குகின்றாள்.

**முள்ளுடை மூங்கில் பிணங்கிய சூழ்படப்பை**
**புள்ளி வெருகுதன் குட்டிக் கிரைபார்க்கும்**
**கள்ளர் வழங்குஞ் சுரமென்பர் காதலர்**
**உள்ளம் படர்ந்த நெறி.**

'முள்ளுடைய மூங்கில் பிணங்கிய சூழ்படப்பை' எனவே, அது எளிதாகக் கடந்து செல்லுதற்கு இயலாத வழியென்பதனையும் கூறினாள். 'புள்ளி வெருகுதன் குட்டிக்கு இரைபார்க்கும் கள்ளர் வழங்கும் சுரம்' என, அவ்வெருகினைப்போல வழிச்செல்வோரை எதிர்பார்த்திருக்கும் கள்வர் திரிகின்ற கொடுமையினைக் கூறினாள். இதனால், தலைவர் மீளவும் திரும்பி விடுதல் கூடுமென்பது தலைவியின் கருத்தாகும்.

## 9. கண்ணுள் நீர் நில்லா

தலைவன் ஒருவனின் உள்ளம், பொருள்தேடி வருதலின் பொருட்டாக வெளிநாடு போய்வருதலிலே ஈடுபடுகின்றது. நாளுக்குநாள் இந்த எண்ணம் வலுப்பெறுகிறது. அவன் உள்ளம், தலைவி அதனைக் கேட்பின் கொள்ளும் துயரினை நினையாமலும் இல்லை. தான் பிரிந்து நோயினால் அவள் பெரிதான துன்பத்தினளாகி உள்ளமும் உடலும் சோர்ந்துபோகத் தளர்ச்சி மிகுந்தவளாகி விடுதலை, அவன் அறிவான். இதனால், தலைவியிடம் தானே சொல்லுதற்குரிய துணிவும் அவன்பால் பிறக்கவில்லை. அவன் சொல்லவும் மாட்டாது, மறைக்கவும் இயலாமற் கலங்கியிருந்தான்.

'தலைவிக்கு மிகவும் வேண்டியவள் அவளுடைய தோழி ஒருத்தியே. அவள்பால் மிகவும் அன்புடையவளும், அவளது நல்வாழ்விலே அக்கறையுடையவளும் அவள். மேலும்,உலகியலினை நன்கறிந்த அறிவுத் திட்பத்தினையும் அவள் கொண்டவள், அவள்மூலம் தன் செலவினை உரைத்துத் தலைவியை இசைவிக்கலாம்' என எண்ணுகின்றான் தலைவன்.

தலைவியின் உள்ளம், தன்மேற் கொண்டிருக்கின்ற அளவிறந்த காதற் பெரும்பாசத்தினாலே உண்மையினை உணராது பேதுற்றிருப்பது; அதனால் அது, தன் பிரிவின் கொடுமையைத்தான் நினைத்து ஏங்குமேயன்றி, ஆண் மகனாகிய தான் செய்தற்கான கடமைகளையும், அக்கடமைகளைச் செய்வதன்மூலம் வந்து பெருகும் வாழ்க்கை வளங்களையும் நினையாத தன்மையதாகும். தோழியின் மனநிலை அப்படிப் பட்டதன்று. நெடுங்காலமாகத் தொடர்ந்து இன்ப நலத்துடன் திகழுகின்ற தலைவியினது இல்லற நல்வாழ்வினையே விரும்புகின்றவள் அவள். அதனால், அதற்கு வேண்டிய பொருளினைத் தலைவன் தேடிவருதல் வேண்டு மென்பதனையும் உணர்வாள். அதற்கு அவன் செல்லுங் காலத்துத் தலைவி அவன் பிரிவினைப் பொறுத்து ஆற்றியிருத்தல் வேண்டுமென்பதனையும் அவள் மறவாள்.

இந்த நினைவுகளால் தலைவனிடம், தோழியொருத்தியே தன் கவலையைப் போக்கக் கூடியவள் என்ற நம்பிக்கை பிறக்கின்றது. அவன், அவளை நாடிச் சென்று, அவளிடம் தன்னுடைய விருப்பத்தினையும் உரைக்கின்றான்.

அவள், அதனைக் கேட்டதும், அவன் பிரிவினாலே தலைவிக்கு நேரும் இன்னல்களைப் பற்றியே முதலில் நினைக்கின்றாள். ஆகவே, அதனை உரைத்து அவனைப் போகலாகாது எனவும் தடுக்கின்றாள். தோழியின் இந்த உரையினைப் பொருளாகக் கொண்ட செய்யுள் இது.

'தலைவனே!'

'ஓமை மரங்கள் பொறிப்பொறியாக விளங்கும் மேற்புறத்தைக் கொண்டன. அவற்றின் நீழல், செறிவோடு விளங்காமல் இலைகள் உதிர்ந்து போயினதாற், புள்ளி பட்ட நீழலாகவே கோடையில் விளங்கும். அத்தகைய புள்ளிபட்ட நீழலிலே செவ்வரியினையுடைய நெற்றியினைக் கொண்ட

களிற்றியானை, தன் பிடியினோடுங் கூடியதாகக் கிடந்து உறங்கிக் கொண்டிருக்கும். அத்தகைய தன்மையினைக் கொண்டது கானம்.

'மேலும், வெம்மையின் கொடுமையானது எரிகின்ற நெருப்பினைப் போல் விளங்கி மயக்கத்தை உண்டாக்கும் தன்மையதாகவும் அக் கானம் விளங்கும் என்பார்கள்.'

அத்தகைய கானத்தின் வழியாக நீ செல்லப் போகின்றதான செய்தியைத் தலைவியிடம் சென்று சொல்லுமாறு எனக்குக் கூறுகின்றனை.

அதனை நான் உரைத்தால், செவ்வரி கருவரிகள் கலந்து தோன்றும் மையுண்ணும் தலைவியது கண்களுள், நீரானது அடங்கி நில்லாதாகி வெளிப்போந்து கொட்டுதலையும் தொடங்குமே!

அங்ஙனமாக, எங்ஙனம் யான் சென்று சொல்லுவேன்? அதனால், நின் செலவினைக் கைவிட்டு அமைதலே நினக்குச் செய்தற்கு உரியதாகும்' என்கின்றாள்.

தோழியின் நயமான இந்தச் சொற்களைச் செய்யுள் அருமையாக எடுத்துக் காட்டுகின்றது.

**பொரிபுற வோமைப் புகர்படு நீழல்**
**வரிநுதல் யானை பிடியோடு தூங்கும்**
**எரிமயங்கு கானஞ் செலவுரைப்ப நில்லா**
**வரிமயங்கு உண்கண்ணுள் நீர்.**

'செலவினை உரைப்பவே கண்கள் நீரைச் சொரிதலைத் தொடங்குமாயின், செலவு நிகழின் அவள் நிலைதான் யாதாகுமோ? ஆதலின், செல்லுதலைத் தவிர்க' என்றும் வலியுறுத்துகின்றாள் தோழி.

## 10. இறந்தார் கொல்

'தான் பிரிந்து போதலால், தலைவி பெரிதும் துயரினுக்கு உள்ளாவள்' என்பதனைத் தோழி கூறியதும், அதனைத் தானும் அறிந்தானாகிய தலைவன், தன்னுடைய கடமையின் பொறுப்பினை மேலும் அவளுக்கு எடுத்தியம்பி, எப்படியும் தலைவியை ஆற்றியிருக்கச் செய்தல் வேண்டுமெனத் தோழியை இரந்து நிற்கின்றான்.

அவனது நிலையினை உணர்ந்து அவளும், ஒருவாறு மனம் தேறியவளாக, அவனுடைய கருத்திற்கு இசைகின்றாள். தலைவியிடம் சென்று, செய்தியைப் பக்குவமாகச் சொல்லுதலையும் செய்கின்றாள்.

தோழியின் சொற்களைக் கேட்டதும், தலைவியின் உள்ளம் பெரிதும் பதறுகின்றது. தான் அதற்கு உடன்படாத தன்மையினை அவள் உரைக்கின்றாள்.

'தோழி! பிற விலங்குகளைத் தனக்கு உணவாகப் பற்றிக் கொள்ளுதலிலே வல்லதும், வளைந்த வரிகளை உடையதும், நல்ல வெற்றிச் சிறப்பினை உடையதும், விலங்கினத்தைச் சேர்ந்ததுமான புலியினது கூட்டங்கள் கூடித் திரிகின்ற இயல்பினையுடையது காடு' என்பார்கள்.

'பூக்கள் வீழ்ந்து அமைந்த புதர்களையுடையதும் அக் கானம்' என்பார்கள்.

'நம் தலைவர் தலைமைப் பாட்டினைக் கொண்டவர்; வலிமையான் மிக்கவர்; முயற்சியினிடத்தே மிகுதியாகக் கொண்ட ஆசையின் காரணமாக எனக்கு நன்மை தருவது எது வென்பதனை உணராதவராகி, என்னை விட்டுப் பிரிந்தும் போயினரோ?'

'அவர் போகார்; போயினால், எனக்குத் தீதாகவே முடியும்' என்பதனையும் தலைவி குறிப்பாகக் கூறுகின்றனள்.

**கோள்வல் கொடுவரி நல்வய மாக்குழுமும்**
**தாள்வீ பதுக்கைய கானம் இறந்தார் கொல்**
**ஆள்வினையின் ஆற்ற அகன்றவர் நன்றுணரா**
**மீளிகொள் மொய்ம்பின் அவர்?**

'என்னோடு இன்புற்றிருக்கின்ற செயலினை மறந்து ஆள்வினையின் அவாவினாலே கொடுமையுடைய கானத்திடத்தும் சென்றாரோ?' எனத் தலைவி, தோழிக்கு உடன் படாத, தன்னுடைய உள்ளத்தைப் புலப்படுத்துகின்றாள்.

'தாள்வீ பதுக்கைய கானம்' என்பதனோடு, சிலம்பினுள் வரும், 'மண்பக வீழ்ந்த கிழங்ககழ் குழியைச் சண்பகம் நிறைந்த தாதுசோர் பொங்கர், பொய்யறைப் படுத்துப் போற்றா மாக்கட்குக், கையறு துன்பம் காட்டினும் காட்டும்' (சிலம்பு 10: 68-71) என்பதனையும் கருதுக.

## 11. இறப்பர் கொல்

தலைவியின் பேச்சைக் கேட்டதும் தோழியின் உள்ளம் பெரிதும் கலங்குகின்றது. 'இறந்தார் கொல் என ஐயுற்றுப் புலம்பும் அவளது ஐயத்தைப் போக்குவாளாக. 'அவர் போகவில்லையடி; போவதற்கு விரும்புகின்றார் அவ்வளவுதான்' என்கின்றாள்.

'போவதற்கு விரும்பினார்' என்றதால், தலைவியின் உள்ளம் அமைதி பெற்றுவிடவில்லை. அவள், தலைவன் பால் அந்த எண்ணம் தோன்றியதனை நினைந்தும் பெரிதும் வாட்டமுற்றுப் புலம்புகின்றாள்.

தலைவியின் அந்த நிலையினைக் காட்டுவது இந்தச் செய்யுள்.

'தோழி!'

'வளைந்த கோடுகளை உடையது புலி, அது பாய்ந்து கொல்லுதலினாலே தன் துணையினைப் பறிகொடுத்தது ஒரு களிறு. அந்தக் கொடுமையினைக் கண்டதும் அதற்கு அச்சமும் ஏற்பட்டது. மாவிலங்கு மரங்கள் வெயிற் கொடுமையால் வற்றிப் போயினவாய் நிற்கின்ற, பாறைகளுக்கு இடையே அமைந்த வழியிடத்தே சென்று, அந்த வழியை அடைத்துக் கொண்டதாகத், தன் துணையைக் கொன்ற புலியினது வரவினை எதிர்பார்த்துச் சினத்தோடு அது நின்றது.'

'இப்படிக் களிறு வழியடைத்துச் சினத்தோடு நிற்கின்ற தன்மையினையுடைய, பாலை நிலத்து நீண்ட பாறைகளைக் கொண்ட வழியிடத்தே, நம்மைப் பிரிந்து நம் காதலர் கடந்து செல்பவரும் ஆவாரோ?'

தலைவி இவ்வாறு உரைக்கின்றனள். 'அவர் போகார்' என வுரைத்து, அவரது போக்கிற்கு உடன்படாத தன் நிலையை விளக்கும் தலைவியின் கருத்தினைத் தோழியும் கேட்டு அறிகின்றனள். அவள் உள்ளமும் அதனை ஏற்றதாக, அவளும் தலைவியின் கருத்திற்கு ஆதரவாக அமைதலையும் செய்பவளாகின்றாள்.

**கொடுவரி பாயத் துணையிழந்து அஞ்சிக்**
**கடுவுணங்கு பாறைக் கடவு தெவுட்டும்**

**நெடுவரை யத்தம் இறப்பர்கொல் கோண்மாப்**
**படுபகை பார்க்குஞ் சுரம்.**

'துணையிழந்த காரணத்தால் கொடுஞ்சினமுற்றுப் பகையினை எதிர்பார்த்திருக்கும் களிற்றது பாசமிகுதியை உரைத்தவள், அதனால் அவ்வழிச் செல்லல் தலைவனுக்கு ஊறு நேர்வது எனத் தான் அஞ்சுவதையும், தன்னைப் பிரிவின் வெம்மையாகிய பகையிடத்துப்பட்டு உயிரிழக்காதபடி தலைவன் பேணுதல் வேண்டுமென்று விரும்புவதனையும், நயமாக உரைக்கின்றனள்.

## 12. கன்னியர் போலும்

தலைவி, பிரிவினை நினைந்து வருந்தினாளாகப் பற்பல நொந்து கூறியும், கண்ணீர் சோரக் கவினழிந்தும், தன் செலவினைத் தடுக்க முயன்றாலும், தலைவன்,தன் ஆண்மை மிகுதியாகச் செலுத்தத் தன் போக்கினை மேற்கொண்டான். கார்காலத்தின் தொடக்கத்தே தான் தவறாது திரும்பி வந்துவிடுவதாகவும் கூறிச் சென்றான்.

அவனது பிரிவினாலே வந்துற்ற தனிமைத் துயரினைப் பொறுக்கலாற்றாது புலம்பினும், அவன் மீண்டுவருகின்ற நாளினை எதிர்பார்த்தவளாக வாட்டமுற்று இருக்கின்றாள் தலைவி. அவன் வருவதாகக் குறித்த காலம் நெருங்க நெருங்க அவளது ஆற்றாமையும் மிகுதியாகின்றது.

தலைவியது மிகுதிப்பட்டு வருத்துகின்ற தனிமைத் துயரினைக் கண்டு தானும் மனம் கலங்கியவளாகிய தோழி, அவளுக்குப் பலவும் கூறித் தேறுதல் உரைத்திருக்கின்றாள். ஒரு நாள் இரவுப் போதிலே, மன்றத்து முதுமரத்திலிருந்து ஆந்தை அலறுகின்ற குரல் அடுத்தடுத்துக் கேட்கின்றது. அதனை நன்னிமித்தமாகக் கொண்டு, தலைவன் விரைவில் திரும்பிவருவான்' என்று கூறித் தேற்றுகின்றாள் தோழி.

'தலைவி! மன்றத்திடத்தே இருக்கும் பழைய மரத்தினின்றும் ஆந்தையானது குரலெடுத்து ஒலிமுழக்குவதனைக் கேளாய்! நமக்கு அடுத்தடுத்துத் தும்மல் தோன்றுவதனையும் காணாய்! ஒள்ளிய அதன் குறிப்பினையும் ஓராய்!

'மலையிடத்தை நெருங்கிச் சென்று, பாலை நிலத்து ஊர்கள் பலவற்றையும் கடந்து, பொருள்தேடி வருதலின்

பொருட்டாகச் சென்றவர் நம் தலைவர். களவுக் காலத்தே இரவுக் குறியிடத்து ஏதங்கள் பலவற்றையும் கடந்து வந்து நம்மை இன்புறுத்திய அவர் அவ்வாறே இன்றிரவும் வந்துவிடுவார் போலும்! அதனால், நீ ஆற்றியிருப்பாயாக' என்கின்றாள்.

**மன்ற முதுமரத்து ஆந்தை குரலியம்பக்**
**குன்றகம் நண்ணிக் குறும்பிறந்து சென்றவர்**
**கள்ளிய தன்மையர் போலும் அடுத்தடுத்து**
**ஒள்ளிய தும்மல் வரும்.**

'தும்மலும், ஆந்தையின் குரலும் எதிர்பார்ப்பவர் விரைவிலே வந்துவிடுவர் என்பதற்கான அறிகுறிகள்' என்ற மரபினை இதனாற் காண்க. குறும்பு, பாலை நிலத்துச் சிற்றூர்.

## 13. பல்லி படும் !

இப்படிச் சொல்லிய தோழி, தலைவி ஆர்வமுடன் தலைவனின் வரவினைத் தான் எதிர்பார்த்தவளாகத் தன் கவலையை மறந்து, தன்னைப் பூசியும் புனைந்தும் ஒப்பனை செய்து, அவனைக் காணுதற்குத் தயாராவதிலே ஈடுபடுவாள் என்று கருதினாள். ஆனால், தலைவியோ அங்ஙனம் எதனையும் மேற்கொள்ளவில்லை. தன்பால் நம்பிக்கையே கால் கொள்ளாத நிலையில், 'தோழி! என் மேல் இரக்கங் கொள்ளுகின்ற தன்மை உடையவளான நீ, இப்படி எதை எதையோ சொல்லி என்னைத் தெளிவிக்க நினைக்கின்றாய். ஆனால், யானோ அத்தகைய நல்லூழ் இல்லாதவள்; இருந்தால், அவர் என்னைத் தனித்து வாடுமாறு கைவிட்டுப் போவதே நிகழ்ந்திருக்காதே?' என்கின்றாள்.

அப்பொழுது தோழி, மீண்டும் தோன்றுகின்ற நன்னிமித்தங்களைக் கூறுவாளாகத் தலைவியின் துயரினை மாற்றுவதற்கு முயல்கின்றாள்.

'தோழி! நம் அழகிய கண்கள் இடப்புறமாகத் துடிக்கின்றன. நம் கனவுகளும் நல்லனவாகத் தோன்றுகின்றன. நம் மென்மையான தோள்களும் உயரிய குன்றுகளைக் கடந்து சென்ற அவரை நினைப்பவும், பூரிப்பினைக் கொண்டு அழகு பெறுகின்றன. நாம் கொண்ட நோய் தீரும்படியாகப் பல்லியும் நம் பக்கமாக நன்னிமித்தம் சொல்லுகின்றது. இவை எல்லாம் கண்டும் நீ வாடுதல் முறையன்று. அவர் விரைவிலேயே வந்து விடுவார்' என்கின்றாள்.

**பூங்கண் இடமாடும் கனவும் திருந்தின**
**ஓங்கிய குன்றம் இறந்தாரை, யாம்நினைப்ப**
**வீங்கிய மென்தோள் கவினிப் பிணிதீரப்**
**பாங்கத்துப் பல்லி படும்.**

*தோழியின் உரைகள் தலைவியின் உள்ளத்தும் நம்பிக்கையைத் தோற்றுவிக்க அவளும், அதன்மேல் தன் கவலையினை மறந்து, தலைவனின் வரவினை எதிர் நோக்கிய இன்பக் கனவுகளிலே ஈடுபட்டனள். அந்த மாற்றத்தை அறிந்த தோழியும் கவலை நீங்கிக் களிப்புற்றனள்.*

*பாங்கம்--பக்கம்*

## 14. நடந்து செல்வாளோ?

*களவுறவிலே ஈடுபட்டுத் துய்த்துக் களித்த தலைவியொருத்தி, தன் காதலனின் நினைவாகவே இருக்கின்றாள். அவளுடைய அந்த மாற்றத்தை உணர்ந்து, அவளுடைய மணவினைக்கு ஏற்பாடு செய்வதிலே கருத்தைச் செலுத்துகின்றாள் தாய். தந்தையுடன் பேசி அதற்கான முடிபினைச் செய்யுமாறும் தூண்டுகின்றாள். அவளுக்கான நல்லிளைஞனை அவர்கள் குறிப்பிட்டு அவனுக்கு அவளை மணஞ்செய்விக்கவும் முடிவு செய்கின்றனர்.*

*இந்த நிலையிலே தலைவனும் தலைவியும் தவிக்கின்றனர். தலைவி கற்புடையவள்; அதனால் அவள், தன் காதலனுடன், தன் வீட்டைவிட்டு வெளியேறிச் செல்லுவதற்கும் நினைக்கின்றாள். ஒரு நாள் இரவிலே அவள் எண்ணம் செயலாக மலர்கின்றது. அவள் தன் காதலுக்கு உரியவனோடு கூடியவளாகச் சென்று விட்டாள்.*

*மறுநாட் பொழுது புலர்ந்ததும், தன் மகளைக் காணாத தாய், மனவேதனையாலே துடித்துப் புலம்புகின்றாள்.*

*'என் மகள் பேதைமை கொண்டவள். அவள், அரி அமைந்த தன் காற்சிலம்புகள் ஒலி முழங்கவும், மெல்லியவான விரல்கள் சிவப்பினை அடையவுமாகச், சிறு கற்கள் மேலெழுந்து தோன்றியவையாய்க் கிடக்கின்ற பாலைநில வழியினூடே நடந்தும் செல்வாளோ?*

*அல்லது, இவ்வழிச் செல்வதற்கு எம்மால் இயலுவதன்று எனக்கூறி ஏங்கி வாடி, ஒரு பக்கமாக இருந்தும் விடுவாளோ?*

கொல்லுங் களிற்றினைப் போன்ற தன் காதலனின் பின்னாகச் சென்றவள்தான் யாது செய்வாளோ?'

இவ்வாறு, தன் மகளை நினைந்து வருந்தி வாட்ட முற்றுச் சோர்கின்றாள், தலைவியின் தாய்.

தன் மகள் தன்னையும் மறைத்துத் தலைவனுடனே உடன் போக்கிற் சென்ற அந்தச் செயலுக்கு அவள்மீது சினங் கொள்ளாது. அவள் நல்மாகக் கடந்துசெல்ல வேண்டுமே என்று வழியை நினைந்து வருந்தும் தாய்ப்பாசத்தை இச்செய்யுள் அருமையாக எடுத்துரைக்கின்றது.

**ஒல்லோமென்று ஏங்கி உயங்கி இருப்பாளோ?**
**கல்லிவர் அத்தம் அரிபெய் சிலம்பொலிப்பக்**
**கொல்களிறு அன்னான்பின் செல்லுங்கொல்**
**என்பேதை**
**மெல்விரல் சேப்ப நடந்து.**

'அரி' என்பது சிலம்பின் உள்ளீடாகப் பெய்கின்ற பரல்களை, ஒல்லோம்-யாம் இயலோம், உயங்கி-வாடி, பாலையின் ஏதத்தை நினைந்து புலம்பியதனால், இதனையும் பாலையென்றே கொண்டனர்.

இந்தச் செய்யுள் பழைய காலத்திலே தமிழ்க் குடியினரிடை நிலவிய ஓர் ஒழுக்க மரபினை நமக்குக் காட்டுகின்றது. பொதுவாகக் குடும்பங்களிலே தம் மகளுக்குத் தாமே ஏற்றதொரு மணமகனைப் பார்த்து மணமுடித்து வைப்பதுதான், அன்றும் வழக்கமாக இருந்திருக்க வேண்டும். ஆனால், இயற்கையோடு கலந்து வாழ்வியல் அமைந்துநின்ற காரணத்தால், கன்னியரும் இளைஞரும் தம்முள் தனித்துக் காணுதற்கும், காதலுற்றுக் களவிற் கூடிக் களித்தற்கும் வாய்ப்புக்கள் இருந்தன என்றாலும் அந்த உறவு சான்றோரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாக விளங்கவில்லை. காதலர்கள் தமக்குள் கடிமணம் பூண்டதன் பின்னர்த்தான் அவர்களைச் சான்றோர், கணவன் மனைவியராக ஏற்றுக் கொண்டனர்.

இதனால், பொதுவாகத் தாய்மார், தம் மகள் களவுறவிலே ஈடுபடுவதனைத் தடுப்பதிலே தான் கவனஞ் செலுத்தி வந்தனர். தம்மகள் அவ்வாறு ஒழுகமாட்டாள் என்ற நம்பிக்கையுடன் விளங்கியவராகவே தாய்மார் விளங்கினர்

எனினும், இயற்கை சதிசெய்து விடுகின்ற போது, அவர்கள் மனம் கலங்குகின்றனர். அப்பொழுதும், அது தம் மகளின் பருவநினைவு என்றுதான் எண்ணித் தக்கதொரு மணவாளனைத் தேடுவதில் ஈடுபடுகின்றனர்.

களவுறவினைத் தாய் அறியின் தன்னைக் கடிந்து கொள்வாள் என்றறிந்தும், தலைவி தன்னை மயக்கிய காதல் வலையிலே, தன்னையும் அறியாதேயே சிக்கிக் கொண்டு விடுகிறாள். கற்புடைய அவள், தன் காதலனையன்றிப் பிறனுடன் மணந்து வாழ்தற்கு இசையாள். ஆகவே, அவனுடன் உடன்போக்கிற் செல்லுதலையும் மேற்கொள்ளுகின்றாள்.

தன் மகள் சென்ற பின்னர் தாயின் உள்ளத்திலே பாசப் பெருக்கந்தான் நிரம்பி வழிகின்றது. மகளைக் குறை கூறவோ, அல்லது அவளை அழைத்துப் போகும் இளைஞனைக் குறைகூறவோ அவள் கருதினாளில்லை. தன் மகள் காட்டு வழியை எப்படிக் கடப்பாளோ? என்ற கவலைதான் அவளை ஆட்கொள்ளுகின்றது.

தாய்மையின் இந்த அம்சத்தை, இச்செய்யுள் நமக்கு மிகத் தெளிவாக விளக்கி நிற்கின்றது. இதனை நாம் அறிந்து போற்றுதல் வேண்டும்.

# 4. மருத வளம்

**மருத நிலத்தவரின் மாண்புசால் இன்ப வுறவினை வகுத்துக் கூறுகின்ற சிறந்த பகுதி இது.**

மருத நில நாகரிகம், தமிழர் நாகரிகத்திலே ஒரு வகையில் செழுமையுடைய நாகரிகமாகப் பண்டைக் காலத்திலிருந்தே விளங்கி வருகின்றது. மருத நிலத்தவர்கள் வளமான வாழ்வினை உடையவர்களாக இருந்ததும், நிலம் செழுமை குன்றாது பெருவிளைவைத் தந்து அவர்களைச் செல்வர்களாக்கி உயர்த்தியதும் இதற்கொரு காரணமாக இருக்கலாம். வான் மழை தவறாது பொழிதலும், நீர்வளம் மல்கியிருத்தலும் இந்த மருதப் பகுதியின் செழுமைக்குரிய சிறப்பான காரணங்களாக இருந்தன. இவற்றுடன் பயிரிடுவதற்காக உழைக்க வேண்டிய பருவகாலம் தவிரப் பிற காலங்களில் உழைக்க வேண்டிய தேவையும் இந்த நிலத்தவர்களிற் பெரும்பாலோருக்கு இல்லாதிருந்ததனால், இவர்கள், அங்ஙனம் ஓய்வுற்றிருந்த காலங்களிலே, தங்களுடைய எண்ணங்களைக் கவின்கலைத் துறைகளினும், மற்றும் பற்பல சிந்தனைகளிலும் செலவிட்டு வருவாராயினர். இங்ஙனமாக உழைக்குங் காலம் கொஞ்சமாகவும் பெற்ற பயனை அநுபவிக்கும் காலம் மிகுதியாகவும் அமைந்ததனால் உழைப்பினும் அனுபவரசனையே இந்நில மக்களைக் கவியத் தொடங்கிற்று. இங்கும், பெருநிலப் பரப்பிற்குச் சொந்தக்காரராகத் தலைமைப் பொறுப்புக்களிலே இருந்தவர்கள், போக வாழ்வினராகவே பெரும்பாலும் மாறிவந்தனர்.

இங்ஙனமாகப் பிற நிலத்தவர்களைப் போன்று ஆண்டின் பெரும்பாகமும் உழைப்பிலேயே ஈடுபடாமல் இருந்ததன் பயனாக, இவர்களிடையே சமூகவியலும் பிறவும் ஒருவகையான பொதுநிலைத் தன்மையினைப் பெற்று வளரத் தொடங்கின. போகத்திற்கே முதலிடம் தருகின்ற உளப்பாங்கும் சிலரிடையே எழுந்தது.

என்றாலும், இல்லறம் பேணி, வரும் விருந்தை உபசரித்துப், பலருக்கும் உபகாரமாக விளங்குகின்ற மனிதப் பண்பின் வளர்ச்சியும் இந் நிலத்தவரிடமே எழுந்த

தென்பதனையும் நாம் அறிதல் வேண்டும். அறியவே, இவர்களின் சிறந்த அமைதியும் நமக்கு விளங்கும்.

மருதநிலத்தாரிடம் வீட்டின் தலைமை பொதுவாகப் பெண்களிடமே இருந்தது. தலைவனின் வெளிவாழ்க்கைத் தலைமை, வீட்டினுள் காலடிவைத்ததும் மறைந்துவிடும். இதனால் பெண்களுக்குக் குடும்பவாழ்விலே பொறுப்புக்களும் கடமைகளும் சற்று அ திகமாகவே இருந்தன. இதனால் அவர்கள்பால் சுதந்தரமாகச் சிந்திக்கின்ற மனோபாவமும்,. கணவனானாலும் தங்களை அலட்சியப் படுத்தினால் தாங்களும் அவனோடு பிணங்கி மாறுபட்டு ஊடுகின்ற துணிவும் இருந்தன.

கணவன்மாரின் பிரிவு, முன்னர்ப் பாலைவளம் என்னும் பகுதியிற் காணப்பட்டது போன்ற காரணங்களுக்காக ஏற்படாமல், தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தின் காரணமாக நிகழ்வதையும் இங்குக் கவனிக்க வேண்டும். என்ன இருந்தாலும், தன் கணவன் இன்னொருத்தியுடன் இன்பவாழ்க்கை நடத்துகின்றான் என்றால், எந்தப் பெண்தான் குமுறாமல் இருக்க முடியும்? அது தன்னுடைய பெண்மையையே அவமானப்படுத்துவதாக அவள் கருதுவது இயல்புதானே! இந்தத் திண்மை தமிழகப் பெண்மணிகளிடம் நிறைந்திருந்தது. இதனால் தான் தமிழர் வாழ்வில் அடுத்தடுத்து நேரிட்ட எத்தனை எத்தனையோ பூசல்களும் குழப்பங்களும், தமிழரின் மரபின் செவ்வியையும் மருதத்திணைச் செய்யுட்கள் நமக்குக் காட்டுவனவாகும்.

## 1. பட்டம் சிதைப்ப வரும்

ஓர் ஊரிலே ஒரு தலைமகன் இருந்தான். அவனுக்கு வழிவழியாக வந்த ஏராளமான நிலபுலன்கள் இருந்தன. அளவற்ற வளத்தின் காரணமாக அவன்பால் அதற்குரிய பெருமிதமும் கண்ணோட்டமும் அமைந்திருந்தன.

அவன் ஆற்றல் மிகுந்தவன். தன்னுடைய சொத்துக்களை நிர்வகிப்பதிலும் சரி, தன்னுடைய மன்னனது படையணிகளிலே தலைமைப்பாட்டுடன் செயல்புரிந்து சிறப்பெய்துவதிலும் சரி, அவன் போற்றுதலோடு விளங்கிய பெருமகனாகவே திகழ்ந்தான்.

அவன் மனத்தைக் கவர்ந்தாள் இளநங்கை ஒருத்தி. தகுதியாலும் குடிப்பிறப்பாலும் அவனுக்குச் சமமான அவள், அழகின் பெருக்கத்தினால் திருமகளைப் போன்றே விளங்கினாள். அவனைக் கண்டதுமுதல், அவளை அடைந்து வாழ்வதிலேயே அவன் உள்ளம் சென்றது. எப்படியோ, அவளும் இவனைக் கண்டதும், இவனே தன் மணவாளன் என்று கொண்டுவிடப், பெற்றோரும் உற்றாரும் அந்த உறவிற்கு இசைவளித்து நிற்க, அவர்களின் திருமணமும் சிறப்பாக நிறைவெய்தியது.

அவன் அவளை அன்பினைச் சொரிந்து ஆராதித்தான். கணநேரமும் பிரியாது அவளையே சுற்றிச் சுற்றி வந்தான். அவள் உள்ளமும் தன் கணவனின் அன்புள்ளத்தைக் கண்டு பூரித்தது. அவளும் அவனைத் தெய்வமாகவே போற்றினாள். அவர்களின் உறவும் இன்பத்தின் எக்களிப்போடு 'இவர்கள் தாம் உண்மையான காதன் மணமக்கள்' என்று கண்டவர் வாய்குளிரப் போற்றிப் பாராட்டும்படியாக நிகழ்ந்து வந்தது.

அவள் கருவுற்றாள். அவளுடைய மேனியிலே தாய்மையின் தனிப்பொலிவு ஒளிவீசியது. அவள் அதனாற் பெருமிதம் கொண்டாள். அவன் உள்ளமும், தனக்கொரு மகன் பிறக்கப் போகின்றான் என்ற மமதையினால் குதூகலிக்கத்தான் செய்தது. என்றாலும், அவளுடைய அன்பான அரவணைப்பிலே திளைத்துக் களித்த அவன், இச்சையை முழுவதும் அடக்குதற்கு முடியாமலும் வருந்தினான். அந்த வருத்தம் நாளடைவில் மிகுதியாக, அவன் உள்ளத்தே ஒரு சபலமும் எழலாயிற்று.

அந்த ஊரிலிருந்த ஓர் இளம் பரத்தையைக் கண்ட போது, அவனுள்ளம், தன்னுடைய ஏக்கச் சுமையை இறக்கிவைத்து, அவளுடன் இன்ப வாழ்வு நிகழ்த்துமாறு தூண்டுவதை அவன் உணர்ந்தான். சில நாட்கள், அவன் அந்த நினைவை ஒதுக்குவதற்கு முயன்றான். ஆனால், அவளுடைய நளினமும் பொலிவும் அவனைப் பித்தனாக்கி அலைக்கழிக்க, முடிவிலே அவன், அவள் வலையிலே சிக்கி, அவள் வீடே கதியாக இருப்பவனுமானான்.

தலைவியின் உள்ளம் இந்தச் செய்தியை அறிந்தால் வேதனைப்படும் என்பதையோ, ஊரவர் பழிப்பர் என்பதையோ பற்றியெல்லாம் அவன் கவலைப்படவில்லை. அவனது

இன்பநினைவு ஒன்றே மேலெழுந்து நின்று கவிந்திருந்ததால், அவன் மனம் தன் போற்றா ஒழுக்கத்திலே ஒரு புதிய நிறைவைப் பெற்றுத் திளைப்பதாயிற்று.

இந்த நிலையிலே, அவன் மனைவி ஆண்மகவை ஈன்றாள் என்ற செய்தி கிடைத்தது. அவன் உள்ளம், அப்போது, அச் செய்தியைக் கேட்டபோது, தன்னை மறந்து தன் மகன் என்ற நினைவிலேயே சுழலத் தொடங்கியது.

மகன் பிறந்த மகிழ்வினால் அவன் தன் இல்லத்திற்கு ஓடோடி வந்தான். மகனைப் பெற்றுத் தந்த தன் மனைவியை அன்புடன் போற்றினான். மகனின் வடிவழகிலே தன்னுடைய உள்ளம் இன்புற்றுக் களித்திருக்க, அவன் தன் காதற்பரத்தையையும் மறந்திருந்தான்.

பிறந்த மகனுக்குப் பெயரிடல் முகங்காணுதல் ஐம்படை பூட்டல் ஆகியன முறையாக நிகழ்த்தும் விழா நாள் அவன் வீட்டிலே ஆடம்பரமாக நிகழ்ந்து கொண்டிருந்தது. அவனும் உளமகிழ்வோடு, தன் மகனை அணைத்தெடுத்தவாறு, சூழநின்றார் வாழ்த்தி நிற்கத் தலைவியை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

மேற்பாகத்தே சிறிதான காயினைப் பொருந்தியதாக விளங்கும் வஞ்சிக் கொடியின் நினைவு, அவன் வரவினைக் காணுகின்றபோது, தலைவியின் தோழிக்கு ஏற்படுகின்றது. கணுக்கள் சிதறுவதால் தோன்றும் முத்தினைப் போன்ற தன் மகனை, மார்பிடத்தே நெருக்கிப் பிடித்தவனாகத் தலைவன் வருகின்றான். அவனுடைய அழகிய மேலாடை அதனாற் சிதைகின்றது. அவனோ, அதனைப் பொருட்படுத்தாது, தன் பேறான செல்வனைச் சுமக்கும் அந்தச் செவ்வியிலே திளைத்தபடி வருகின்றான்.

அந்தக் காட்சியைக் கண்டதும், தோழியின் மனம், பெரிதும் மகிழ்ச்சி கொள்ளுகின்றது. தலைவியை மறந்து, பரத்தையை விரும்பிக் கிடக்கும் தலைமகன், இனித் தன் மகனைப் பிரிய மணமின்றித் தலைவியையும் தண்ணளி செய்து இன்புறுத்துவான் என்று மகிழ்கின்றாள்.

தோழியின் இந்த மகிழ்வும், தலைவனின்பால் உண்டாகிய புதல்வற்பாசமும் மூவாதியரைப் பெரிதும்

இன்புறுத்துகின்றன. அவர் உள்ளத்தே தமிழ்த்தேன் சுரந்து பாய்கிறது. அந்த இனிய செய்யுளை நாமும் கற்று உணர்ந்து களித்தல் வேண்டும்.

**ஆற்றல் உடையன் அரும்பொறி நல்லூரன்**
**மேற்றுச் சிறுதாய காய்வஞ்சி-போற்றுருவிக்**
**கட்டக முத்திற் புதல்வனை மார்பின்மேற்**
**பட்டஞ் சிதைப்ப வரும்.**

பொறி-செல்வம், மேற்று-மேற்பக்கத்தே, கண்+ தக= கட்டக = கணுக்கள் வெடித்தலால், பட்டம் -மேலாடை.

குடும்ப வாழ்விலே புதல்வன் பிறத்தலினால் எவ்வளவு பிணிப்பு உருவாகின்றது என்பதையும், அதனால் ஏற்படும் தலைவன் தலைவியரின் மனமாற்றங்களையும் தெளிவாகக் காட்டுவது இச்செய்யுள். இதன் பொருளை உணர்ந்து களிப்பதோடு மட்டும் போதாது; இப்படி வருகின்ற தலைவனின் தோற்றத்தை மனக்கண் முன் நிறுத்திக் கண்டும் நாம் மகிழ்தல் வேண்டும்.

## 2. நோவது எவன்?

தலைமகன் ஒருவன் பரத்தையரோடு சேர்ந்து பொழில் விளையாட்டிலே திளைத்திருக்கின்றான். அவனை மலர் மாலையினாலே இறுகப் பிணித்து அவர்கள் கட்டியணைத்து ஆடித் திளைக்கின்றனர். இந்தச் செய்தி எப்படியோ தலைவிக்குத் தெரிந்து விடுகின்றது. அவள் உள்ளம் துடிக்கின்றது. தன் ஒருத்திக்கே சொந்தம் என்று இறுமாந் திருந்தவள், இப்பொழுது அவன் பரத்தையர் பலருக்கும் சொந்தமாகி, அவரது மோகத்தால் பேதைமை கொண்டு ஒழுகுவதனை அறிந்ததும் வேதனைப்பட்டாள்.

'எனக்குரியவன் அவன், அவனை அவர்கள் மாலையாற் பிணித்தனரே? அவனைக் காமுற்று அடைதலை விரும்பித் திரிகின்றனரே? அவர்களும் பெண்கள்தாமா? அவர்களுடைய ஒழுக்கத்தை என்னென்று கூறுவது? அவர்கள் வெறுக்கத் தக்கவர்கள், ஒறுக்கத்தக்கவர்கள்' என்றெல்லாம் சினத்தோடு பொருமினாள்.

இந்த எண்ணம் சிறிது நேரமே இருந்தது. அவர்கள் பரத்தையர். பொன்னையும், பொருளையும் விரும்பிப் பிறரை

மயக்கித் தம்பாற் கொண்டுவிட முயலும் இயல்பினர். அவர்கள்பால் தவறு ஏதுமில்லை. ஆனால், இவ்ன்? எனக்கே உரியவன். அவர்களோடு பொழில் விளையாடச் சென்று, அவர்கள் மாலையாற் பிணித்து மகிழ்ந்தாட, அந்த மயக்கத்திலே அறிவிழந்தான். அவர்கள்பால் காமுற்று அவர்களைக் கூடுதலைக் கருதி, அதே நினைவாக இருக்கின்றான். அவர்களை எப்படிக் குறைகூற முடியும்?

இவனது அறியாமையைக் கண்டுதானே, அவர்கள் இவனைத் தம் வலையிலே இட்டுக் கொள்ளச் சூழ்கின்றனர்? ஆகவே, இவனைத்தான் நோவது பொருத்தமே தவிர, அவர்களை நோவது எதற்காக?

இவ்வாறு தனக்குள் நினைவோட்டத்தை நிகழ்த்தி வருந்துகின்றாள் தலைவி தலைவியரின் மனப்பாங்கினை விளக்கும் சிறந்ததொரு ஓவியம் இது.

**அகன்பணை ஊரனைத் தாமம் பிணித்தது**
**இகன்மை கருதி யிருப்பன்-முகன் அமரா**
**ஏதின் மகளிரை நோவ கெவன்கொலோ**
**பேதமை கண்டொழுகு வார்?**

பணை--வயல்கள், தாமம்--மாலை, இகன்மை-மாறுபாடு, அமர்தல்--பொருந்துதல். 'ஏதின் மகளிர்' என்றது பரத்தையரை, தலைமகனது போற்றா ஒழுக்கினை நினைந்து புலந்து, தலைமகள் கூறியது இது. தலைமகளின் காதலுள்ளம், தலைமகனின் செயலால் வெந்தழிகின்ற வேதனைப் பெருக்கத்தினையும் நாம் இதனால் உணரலாம்.

## 3. கூத்தாடி உண்

தலைமகன் ஒருவன் பரத்தை ஒருத்தியை மிகவும் விரும்பி அவள் வீட்டிலேயே இருந்து வருபவனும் ஆகின்றான். தலைமகள், தலைமகனது செயலினை நினைந்து கொதித்தவளாகத், தான் பெற்ற மகனைக் கொஞ்சியும் பேணியும் அதனால் ஒருவாறு தன்னுடைய ஏக்கத்தை மறந்து விட முயன்று கொண்டிருக்கின்றாள்.

இந்நிலையிலே ஒருநாள், தலைவன், தன்னுடைய ஏவலனாகிய பாணனை அழைத்துப் 'பாண, யாம் இன்று

மாலையில் நம் இல்லத்திற்குச் செல்ல நினைக்கின்றோம். நீ சென்று எம் தலைவியிடம் எம் வருகையை அறிவித்து வருக' என்று ஏவுகின்றான்.

பாணனும் அந்த ஏவலை மேற்கொண்டவனாகத் தலைவனின் இல்லத்திற்கு வந்து சேர்கின்றான். அங்கே தயங்கித் தயங்கி நுழைந்த அவன், தன் அருமை மகனுக்கு அன்போடு பாலூட்டியவளாக வீற்றிருக்கும் தலைவியைக் கண்டு பணிந்து நிற்கின்றான்.

'வா பாணனே! என்ன செய்தி? நின் தலைவர் எங்கிருப்பாரென்பது உனக்குத் தெரியாது போலும்? இங்கேன் வந்து நிற்கின்றனை?' என்று எள்ளலாகவும் குத்தலாகவும் வினவுகின்றாள் தலைவி.

பாணன் அவற்றைக் கேட்டுச் சிறிதே அச்சமுற்றவன் போல் நின்றபின், தலைவியின் சினமொழிகள் நியாயமானவை என்பதனையும் உணர்ந்தானாக, மெல்லத் தான் சொல்ல வந்த செய்தியையும் உரைக்கத் தொடங்குகின்றான்.

'தாயே! தலைவர் இன்று மாலை நம் இல்லிற்கு வருகின்றாராம். தங்கள் பால் செய்தியறிவிக்கவே என்னை விடுத்தனர். தாங்கள் அவரை ஏற்றுக் கொள்ளல் வேண்டும். இடையில் நிகழ்ந்தன பலவற்றையும் மறந்து விடுங்கள். உங்கள்பால் அவர் கொண்டுள்ள காதல் உயர்ந்தது. அதனைப் புறக்கணிக்க வேண்டாம். அவர் மனம் உங்கள்பால் திரும்பு வதான இந்த நற்செய்தியைக் கொண்டுதான் யான் வந்துள்ளேன்' என்கின்றான். பாணன் இவற்றைச் சொல்வதற்குள், அவன் தயங்கிய தயக்கமும் மயங்கிய மயக்கமும் பெரிதாயிருந்தன.

தலைவனுக்காகச் சென்று, அந்தப் பரத்தையை இசைவித்துக் கூட்டியவனும் அவனேதான். அவனுடைய அந்தச் செயலைத் தலைவியும் அறிந்தவளாகவே, அவன் மனம் அவள் முன்பாக வந்து நிற்பதற்கே நாணமுற்றது. அவன் தலைகவிழ்ந்தவனாகத் தலைவியின் இசைவினை எதிர்நோக்கி நின்றான்.

'பாணனே!'

'நின் தலைவர் முன்போல என் கழுத்தைக் கட்டித் தழுவுவதற்கு வாய்ப்பில்லை. இடையே கொஞ்சமும் பொழுதில்லாதபடி, என் மகன் பாலுண்ணும்படியாக என்பால் இப்போது நீங்காது அமைந்திருக்கின்றான்'.

'மேலும், யாம் முன்போல இளமைப் பருவத்தினேமும் அல்லேம்,புதல்வனைப் பெற்றுப் பெரிதும் மூப்பினையும் அடைந்துவிட்டோம். அதனால் அவர் விரும்பி வருவதற்கான அழகுப் பொலிவு யாதுமே என்பால் இப்போது இல்லை.'

'நீ இவ்விடம் விட்டுப் போய்விடு.'

'வளருகின்ற இளமுலைகளை உடையவரான பரத்தையரின் சேரியிடத்தே சென்று சேர்வாயாக! யான் சொன்ன இவற்றை எல்லாம் அவரிடமும் சொல்வாயாக,'

'அங்ஙனம் சொல்வதற்கு நினக்குத் துணிவு இல்லையானால், அப்படியே எங்காவது போய்க் கள்ளையும் ஊனையும் விரும்பிப் பரத்தையரின் முன்பாகக் கூத்தாடி உண்பதென்றாலும், உண்டு போவாயாக.'

இப்படிச் சீற்றத்துடன் பேசுகின்றாள் தலைவி, அவன் தலைவனை அடுத்திருந்து, அவனுடைய இச்சைக்கு ஏற்பப் பரத்தையரை இசைவித்து, அதனாலே வாழ்பவன். ஆகவே, 'தலைவன்பாற் சென்று தான் உரைத்தபடி கூறினால் அவனைத் தலைவன் வெருட்டினாலும் வெருட்டி விடலாம். அங்ஙனம் வெருட்டினால், அவன் பிழைப்பதற்கு வழி கிடையாது. அதனால்தான் 'நீர் ஊன் அவாய்க் கூத்தாடி உண்ணினும் உண்க' என்று, சொற்களைப் பெய்கின்றாள் தலைவி.

**போத்தில் கழுத்தில் புதல்வன் உணச்சான்றான்**
**மூத்தேம் இனியாம் வருமுலையார் சேரியுள்**
**நீத்துநீர் ஊனவாய்ப் பாணநீ போய்மொழி**
**கூத்தாடி யுண்ணினும் உண்.**

போத்தில்-பொழுது இல்லை. சான்றான்-அமைந்தான். வரு முலையார்-வளர்கின்ற முலையாரான இளம் பரத்தையர், 'கூத்தாடி உண்' என்றது பாணனை இகழ்ந்து கூறியதாம்.

## 4. பெண்டிர்க்கு உரை

ஒரு தலைவனும் தலைவியும் இன்பமான இல்லற நல்வாழ்விலே கூடித்திளைத்து வாழ்ந்து வந்தனர். இளமைப் பொலிவும் வளமைச் செறிவும் அவர்களின் இல்லத்தின்கண் இன்பகீதத்தை நிறைத்துக் கொண்டிருந்தன. கவலையின் சாயலோ, துயரத்தின் நினைவோ அவ்விடத்தே எழுமென்று எவரும் எதிர்பார்க்கவில்லை. எதிர்பார்க்கவும் இயலாது.

இந்த நிலையிலேதான் தலைவி நிறை கர்ப்பிணியாகத் தாய்மைப் பொலிவுடன் தளர்கின்றாள். அவளோடு கணமும் பிரியாதிருந்து பெண்மையின்பத்தின் மிகுதியிலே மூழ்கித் திளைத்த தலைவனின் உள்ளத்திலே, அவளது தாய்மைப் பேற்றினைக் கண்டதும் மகிழ்ச்சி கரைகடந்து பெருகி நின்றாலும், அத்துடன் பெண்மை இன்பத்தை நுகரவியலாத காரணத்தாலே கவலையும் தோன்றலாயிற்று. அவள்பால் பேரன்பும் பெருங்காதலும் கொண்டவன் அவன் என்றாலும், அவனுடைய உள்ளம் இன்பவேட்கையின் காரணமாகத் தளர்ச்சியுற்றுப் பிற நாட்டங்களிற் செல்லுதலையும் தொடங்கியது. அவனுடைய இந்த மனப்போக்கு, ஒரு நாள் கட்டிளமையுடன் கவினாலும் நிரம்பியிருந்த பரத்தை ஒருத்தியைக் கண்டதும் கட்டவிழ்ந்து அவளை நோக்கிச் செல்லவும் தொடங்கிற்று.

தலைவனின் தகுதிப்பாடும் பிறவும் பரத்தையைக் கவர்ந்தன. இவனுடைய உறவினை அவள் ஆர்வமுடன் எதிரேற்று நின்றாள். இருவரும் கரைகடந்த இன்ப நுகர்விலே ஈடுபட்டனர். இதன் பயனாகத் தலைவன், தன் மனையை மறந்து, பரத்தையின் வீடே கதியாகக் கிடந்த ஒரு நிலைமையும் உண்டாவதாயிற்று.

தலைவியும், உரிய நாளிலே புதல்வனைப் பெற்று விட்டனள். அதனால், அவர்கள் வீட்டிலே மகிழ்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்துப் பரவியது. புதல்வனைப் பேணியும் ஊட்டியும் வருதலிலே சில காலம் தலைவியும் தன் வேதனையை மறந்திருந்தாள். எனினும், சில திங்கள் கழிந்ததும், அவள்பால் மீளவும் காமநினைவு கால் கொள்ளலாயிற்று. தலைவனின் பரத்தைமை உறவினை அறிந்த அவள் பதறினாள். தன்னை

வெறுத்த அவன்பால் சினங்கொண்டு ஊடியும், தன் தன்மையை நினைந்து வருந்தி வாடியும் நாட்களைக் கழித்து வந்தாள்.

தாய்மைப் பேற்றின் தளர்வு நீங்கி மீளவும் தலைவிபால் அழகுநலம் கொழுமையுற்று இலங்கக் கண்ட தலைவனின் மனம், மீளவும் அவளுடைய கூட்டத்தை நாடிச் சென்றது. தன்னுடைய பரத்தைமை ஒழுக்கத்தினாலே தலைவி தன்னோடு ஊடியிருக்கின்றாள் என்பதனை அறிந்த அவன், அவள் ஊடலைத் தெளிவித்துக் கூடுதலையும் விரும்பினான். தன் ஏவலனாகிய பாணனை அழைத்து 'பாண! யாம் எம் இல்லினை நாடிச் செல்லற்கு விழைகின்றோம். நீ சென்று எம் தலைவிபால் இதனை அறிவித்து வருக' எனக் கூறி ஏவுகின்றான்.

பாணனும், தலைவனின் ஏவலை ஏற்றுக் கொண்டவனாகத் தலைவியின் இல்லத்தை நோக்கிச் சென்று தலைவனின் விருப்பத்தைச் சொல்லித் தலைவிபால் வேண்டி நிற்கின்றான். அப்போது தலைவி பாணனுக்குக் கூறுகின்ற சொற்களுள், அவளுடைய உள்ளத்தைக் கவிந்திருந்த ஏக்கமும், அவள்பால் மிக்கெழுந்து நிரம்பி வழிந்த ஊடற்சினமும் வெளித் தோன்றுகின்றன.

**உழலை முருக்கிய செந்நோக்கு எருமை**
**பழனம் படிந்துசெய் மாந்தி--நிழல்வதியும்**
**தண்துறை ஊரன் மலரன்ன மாற்புறப்**
**பெண்டிர்க்கு உரைபாண! உய்த்து.**

'பாணனே! சிவந்த கண்களையுடைய எருமைக் கடாவினைக் கண்டிருப்பாய். அது கட்டுமீறிப் பயிர்வயல்களுள் புகுந்து அழிவு செய்யும் எனக் கருதி, அதற்கு உரியவர்கள், அதன் கழுத்திலே உழலை மரத்தைக் கட்டி விட்டிருப்பர். ஆனால், அதுவோ, அந்த உழலை மரத்தை நாசப்படுத்திவிட்டுத் தன் போக்கிலேயே செல்லும். வயற்புறங்களின்பாற் புகுந்து சென்று கழனிகளில் விளங்கும் பசிய பயிரினை மேய்ந்த பின்னாக, மருதமரத்து நிழலிலேயும் தங்கியிருக்கும்.

'இப்படிப்பட்ட தன்மையினையுடைய எருமைக்கடா வினைக் கொண்ட, குளிர்ந்த நீர்த்துறைகளைக் கொண்ட ஊருக்கு உரியவன் நம் தலைவன். ஆகவே, அவனும் என் வாழ்வை நாசப்படுத்திவிட்டுப் பரத்தையர்பாற் சிக்கிக் கிடந்து களிக்கின்றான்.'

'ஆகவே, மலர்போன்ற அவனது காதலினை என்பால் வந்து உரைத்தல் வேண்டா! ஊர்ப்புறத்தே உள்ளவரான அவன் பரத்தையர்கள்பாற் கொண்டு சென்று உரைத்து நிற்பாயாக' என்கின்றாள்.

மனையாளைக் கைவிட்டுக் காமத்தால் பரத்தையர் சேரியுட் புகுந்து இளம்பரத்தையின் நேசத்திலே மூழ்கிக் கிடக்கின்ற தலைவனை, .உழலை முருக்கிய செந்நோக்கு எருமைக்கு உவமை காட்டி கூறும் திறத்தினை, அறிந்து இன்புறுதல் வேண்டும்.

## 5. கண்டதும் மகிழ்ந்தாள்

தன் மகள், அவள் தன் காதலனுடனே மணந்து இல்லற வாழ்விலே திளைத்திருப்பதனைக் கண்டால், எந்தத் தாயின் உள்ளமும் இறும்பூது அடைதல் இயல்புதான். செவிலித்தாய், தலைவி புதல்வனைப் பெற்று இருப்பதறிந்து, மிகவும் களிப்புடன் மகளுக்கு உதவியாக வருகின்றாள். தலைவனும் தலைவியும் நடத்தி வருகின்ற இல்லறவியல்பினைக் கண்டதும் அவள் மனம் மகிழ்விலே திளைத்துக் கூத்தாடுகின்றது.

ஒருநாள், தலைவியைப் பெற்ற தாய் அங்கு வருகின்றாள். மகளுடைய நலத்தையும் மகள் வயிற்றுப் பேரனின் நலத்தையும் பார்த்துச் செல்லுவதற்கு வந்த அவள், தான் கண்டு மகிழ்ந்ததுடன் அமையாமல், செவிலியைத் தனியே அழைத்து, 'நம் மகளின் மணவாழ்வு எங்ஙனம் இயல்கின்றது' என்றும் கேட்கின்றாள். நேரடியாக அவளுக்கு எதுவும் கூறாமல், தான் அன்று மாலை நேரத்திலே கண்ட இனிய காட்சியினைக் கூறி அதனை விளக்குகின்றாள் செவிலி.

'தேன்மணம் நாறுகின்ற பொய்கைகளையுடைய மருதநிலத்தேயுள்ள, வயல்கள் சூழ்ந்த ஊருக்கு உரியவனான தலைவனை, அழகிய கண்களையுடைய புதல்வனானவன், தன் கால்களால் மிதித்துத் துவைத்துக் கொண்டிருந்தான்.'

தன் மகன் தந்தையை மிதித்துத் துவைக்கின்ற அந்தக் காட்சியினைத் தன்னை மறந்த இன்பபோதையுடனே கண்டு களித்த நம் மகள், தானும் சென்று தலைவனின் அருகே அமர்ந்தாள்.

'அப்பொழுது அவன், மகப்பெற்றமையால் தளர்ந்து வீழ்ந்துள்ள நம் மகளின் முலைகளைப் பாராட்டியவனாக, அம் முலைகளின் வளர்ந்து தோன்றும் கண்களை நெருடிக் கொண்டிருந்தான்' என்கின்றாள் செவிலி.

மகப்பெற்ற பின்பும்,தலைவனின் காதல் தன் மகள் பால் பெருகி நிற்பதறிந்த தாயும் பெரிதும் மகிழ்வுற்று, அவர்கள் இன்ப வாழ்வினைத் தன் மனமாற வாழ்த்துகின்றாள்.

**தேங்கமழ் பொய்கை அகல்வயல் ஊரனைப்**
**பூங்கட் புதல்வன் மிதித்துழக்க-வீங்குந்**
**தளர்முலை பாராட்டி என்னுடைய பாவை**
**வளர்முலைக் கண்ணுமுக்கு வார்.**

குடும்பத்தே அமைந்திலங்கும் காதற் பெரும் பாசத்தினை நயமுற விளக்கிக் காட்டுகின்ற, செறிவுடைய செய்யுள் இது.

## 6. செல்க பாண!

பாணன் சென்று தலைவிபால் உரைத்தனையும், அதனை மறுத்து அவள் சொல்லிய சொற்களையும் முன்னர்க் கண்டோம். அதே போன்று, மற்றொரு தலைவியும் பாணனுக்கு வாயின் மறுத்து உரைக்கின்ற இயல்பினை இந்தச் செய்யுளிற் காண்கின்றோம்.

"பாணனே!"

'பலவகையான ஆரவாரங்களாலும் மிகுந்து விளங்கும் மருத நிலத்துத் தலைவனாகிய எம் தலைமகனுக்கு எம்பால் ஆவதொன்றும் இருப்பதற்கு நியாயமில்லை.'

"அவன் எம்மை மறந்து போயினதன் பின்னர் எமக்குத் துணையாகச் சான்றோனாகிய எம் புதல்வனையே அடைக்கலமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்ற பேதைமை உடையவர் யாம். இனி, யாம் தலைவனுக்கு எதுவும் இன்புறுத்தற்காவன செய்தற்கு ஏற்றவரும் ஆகேம்.

"ஆதலினாலே, பூக்கள் நிறைந்ததும், சுருட்டி முடித்ததுமான கூந்தலையுடையவரும், திருமகளைப் போன்ற அழகியருமான பர்த்தையரது சேரியினுள்ளாக நீ செல்வாயாக! இங்கு வந்த காலத்தை வீணாக்காது, இனி இடைவிடாது அங்கேயே நீயும் செல்வாயாக!"

தலைவியின் சொற்களால், தலைவனின் பிரிவினாலே அவள் கொண்டிருந்த மனத்துயரைப் பாணன் உணர்கின்றான். எதுவும் பேச வாயெழாதவனாக அந்த நங்கையது தாய்மைப் பொலிவினையும் கற்புமேம்பாட்டையும் வியந்தவனாக நிற்கின்றான்.

**பேதை புகலை புதல்வன் துணைச்சான்றோன்**
**ஓதை மகிழ்மகிழ்நற் கியாஅம் எவன்செய்தும்**
**பூவார் குழற்கூந்தற் பொன் னன்னார்சேரியுள்**
**ஓவாது செல்பாண நீ!**

புதல்வன் தன்னைப் பிரியாதே இருக்கும் அந்தச் செவ்வியை 'அவனைச் சான்றோன்' எனக் குறிப்பதன் மூலம் தலைவி காட்டுகின்றாள். இதனால், தன்னை மறந்து தலைவன் சான்றாண்மையினைக் கைவிட்டான் என நொந்து கொண்டதும் புலனாகும்.

## 7. நினக்குக் குறையுண்டோ?

தலைவியது சொற்களாலே அவளது மனப்பாங்கைத் தெளிவாக அறிந்த பாணன், அவள்பால் எப்படியாவது தலைவனை மீளவும் சேர்த்து, அவர்களது இன்ப நல்வாழ்வினைப் புகழ்பூக்கச் செய்தல் வேண்டும் என்று கருதுகின்றான். அதனால், தலைவன் பால் ஏதும் தவறில்லை எனவும், அவன் தலைவி கருதுவதுபோன்ற எவ்வகைக் குறைபாடான ஒழுக்கமும் கொண்டவன் அல்லன் எனவும், தலைவிபால் ஆராத காதலுடையவன் எனவும் சொல்லுதலிலே ஈடுபடுகின்றான். அப்படிச் சொல்வதனால், அவள் உள்ளம் தலைவனை மீளவும் ஏற்றுக் கொள்வதிற் செல்லும் என்றே அவன் கருதினான். ஆனால், நிகழ்ந்ததோ வேறாயிருந்தது.

"என்பால் அன்புடைய பாணனே! சற்றே அமர்வாயாக. புதுவருவாயினைக் கொண்ட நல்ல மருதநிலத்து ஊருக்குத் தலைவனாகிய எம் தலைமகனின் மேன்மைகளை எல்லாம் எடுத்துச் சொல்வதனை மட்டும் விட்டு விடுவாயாக!

'பெரும் பாணனே! பிற பெண்களைத் காணுதற்கும் நாணங்கொள்வன் நம் தலைமகன் என்பாய். அவனுக்கு என்பாலுற்ற குறைகளெல்லாம் இருப்பனவாக.'

'ஆனால், நினக்கு ஏதாயினும் குறையுண்டோ? இருந்தால் அதனை இங்குக் கூறுக. தலைவனைப் பற்றி ஏதுவும் கூறுதல் வேண்டா.'

தலைவியின் பேச்சிலே வெளிவந்த சினத்தைப் பாணன் உணர்ந்தான். அவன் உள்ளம் தலைவிபால் இரக்கமுற்றுப் பெரிதும் வருத்தியது. இத்தகைய கற்புநல்லாளைக் கவலையுறுமாறு விட்டுச் சென்ற தலைவனின் போக்கினைக் கருதி, அவனே மனவருத்தம் கொண்டான்.

**யாணர்நல் லூரன் திறங்கிளப்பல் என்னுடைய**
**பாண! இருக்க அது;களை--நாணுடையான்**
**தன்னுற்ற எல்லாம் இருக்க; இரும்பாண!**
**நின்னுற்ற துண்டேல் உரை.**

'நினக்கு என்னால் செய்யக்கூடிய உதவி ஏதாவது இருந்தால், அதனைப்பற்றி பேசு; தலைவனைப் பற்றி எதுவுமே பேசுதல் வேண்டா' என்று கொதிப்புடன் கூறுகின்றாள் தலைவி. அந்தக் கொதிப்பிலே நெளிந்தோடுகின்ற மேம்பாடு பெரிது.

'நாண் உடையான்' எனத் தலைவனைக் குறித்தது, அவன், பரத்தைமை உறவுபற்றி ஊரிலெழுந்த பழி குறித்து நாணாது இருந்ததனைப் பழித்ததாம்.

'என்னுடைய பாண! இரும் பாண!' என்றது, பாணனை ஏளனமாகக் குறிப்பிட்டு விளித்ததாம்.

## 8. பொய்ச்சூள் அறியாதேன்

தலைமகளைப் பிரிந்து, தலைமகன், புதியளான பரத்தை ஒருத்தியின் மையலிலே சிக்குண்டு கிடக்கின்றான். அந்த அறக்கொடுமையினைப் பொறுக்கவியலாது துடிக்கின்ற தலைமகளைத் தோழி தேற்றிக் கொண்டிருக்கின்றாள். அப்பொழுது, தலைவன் தன்னைத் தலையளி செய்து கூடிய நாளிலே பேசிய பேச்சும், உரைத்த சூள் உரைகளும் உள்ளத்திலே அலையலையாக எழுந்து வருத்தத்தை மிகுவிக்கத், தலைமகள், தோழியிடத்திலே இப்படிக் கூறுகின்றாள்;

'ஒள்ளிய அணிகளைப் பூண்டிருப்பவளே!'

'மேனாளிலே என்னைத் தெளிவித்துப் 'பிரியேன்' என்று சூளுரைத்த தலைவனின் சொற்களை நான் உண்மையென்று

உளங்கொண்டேன் அன்றோ! அன்றி அவன் உரைத்த பணி மொழிகள் எல்லாம் பொய்ச்சூள் என அறியாதவளாகிய யான், அதனை எழுத்து வடிவிலேயாகிலும் பெற்றுக் கொண்டேனோ? இல்லையே!'

'ஒள்ளிய இதழ்களையுடைய தாமரைப்பூக்கள் இடையிட்டுக் கிடக்கின்ற நீர்வளமிக்க ஊருக்கு உரியவனாகிய அவனை, இப்போது என் உள்ளத்திலே இடையறாது நினைத்துக் கொண்டு அவன் என்னை நினையாதவன் ஆயினான் என்று யாரிடத்தே போய்ச் சொல்வேன்?

'என் நிலைதான் சீர்பெற்று நன்மை அடையுமோ?'

**ஒள்ளிதழ்த் தாமரைப் போதுறழும் ஊரனை**
**உள்ளங்கொண் டுள்ளானென்று யார்க்குரைக்கோ--**
**ஒள்ளிழாய்**
**அச்சுப் பணிமொழி யுண்டேனோ மேனாளோர்**
**பொய்ச்சூள் எனவறியா தேன்.**

இப்படித் துன்புறுங் காலத்துப் பழைய இன்ப நினைவுகளைப் பன்னிப்பன்னி எடுத்துரைத்துக் கலங்குகின்ற தலைவியது மனவருத்தத்தை எண்ணினால், தலைவனது பிரிவினாலே அவள் கொண்டிருக்கும் வேதனைப் பெருக்கமும் நமக்கு விளங்கும்.

## 9. என் மார்பு அறியும்

தலைவியின் வேதனையானது இப்படிப் பழைய காலத்து நிகழ்ச்சிகளை மட்டுமே உளங்கொண்டு சுழலவில்லை. அத்துடன், தலைவன் தன்னைக் கைவிட்டுப் பரத்தையரது மோகத்திலே உழலுகின்ற அந்தப் பொருந்தா ஒழுக்கத்தையும் எண்ணிக் கனன்று கொண்டிருக்கின்றது.

தன்னுடைய உண்மையான காதலன்பினைப் போற்றியிராது, தன்னை வாடி நலியும்படியாகக் கைவிட்டுப் பொய்யான அன்பினைக் காட்டிப் பொருளுக்காகவே முயங்குகின்ற பரத்தையரின் உறவிலே கட்டுண்டு கிடக்கும் தலைவனின் அறிவிழந்த செயலை நினைக்க அவளுடைய உள்ளக் கொதிப்பு மிகுதியாகிக் கொண்டும் போகின்றது. அதனைத் தோழியிடத்தே வாய்விட்டு உரைக்கின்றாள் அவள்.

"அழகாலே மாண்பினைக் கொண்ட அணிகளை உடையவளே!"

"தம்பாலராக விளங்கும் தலைவரைக் காணாவிடத்து, அப்பரத்தையர் 'பேதைமை உடையவர்' என்று பழித்துச் சினங்கொண்டிருப்பார்கள். ஒப்பற்ற தாமரைப் பூக்கள் இடையிட்டுக் கிடக்கும் படியான இடத்தையுடைய ஊருக்குரிய தலைவனை எதிரே கண்ட போதிலேயே வாயினை மூடிக்கொண்டு அன்பு காட்டி நிற்பார்கள்.

"அதனை நினைந்து என் நெஞ்சம் நோவதனை இன்று என் மார்புதான் அறியா நின்றது" என்கிறாள் தலைவி.

**பேதையர் என்று நமரைச் செறுபவோர்**
**போதுறழ் தாமரைக்கண் ஊரனை நேர்நோக்கி**
**வாய்மூடி யிட்டு மிருப்பவோ் மாணிழாய்!**
**நோவதென் மார்பறியும் இன்று.**

பொய்க்காதல் பூண்டு ஒழுகும் பரத்தையரிடத்தே மயலுற்றுக் கிடக்கும் தலைவனது அறியாமையினையும் மெய்க்காதல் கொண்ட தன்னை மறந்து போயின கொடுமை நிலையினையும் நினைந்த தலைவி இங்ஙனம் கூறுகின்றாள். உயரிய நயம் நிறைந்த செய்யுள் இதுவாகும்.

## 10. நீரும் ஏங்காதீர்

தலைவியை மறந்து பரத்தையரின் மோகத்திலே உழன்ற தலைவன், ஒருத்திபால் மட்டுமே கட்டுண்டு கிடந்து விட்டானும் அல்லன். தன்னைக் கவர்ந்தவளுடன் சிலகாலம் இன்புற்றிருந்து, பின் அழகியாளான வேறொருத்தியைக் கண்டதும் அவள்பாற் சென்றான்.

தலைவனால் கைவிடப் பெற்ற அவள், தலைவனின் அந்தக் கொடுமையினை ஆற்றாது புலம்பி நலிகின்றனள். இப்படி நலிபவர்களும் சிலராயினர்.

ஒரு நாள், இவர்கள் தலைவியிடத்தே வந்து, தலைவன் தமக்குச் செய்த கொடுமையினைக் கூறி வருந்துகின்றனர். தன்னிடமிருந்து தலைவனை அவர்கள் பிரித்த போது, அவர்கள்பாற் சினங்கொண்டு பழித்த தலைவியின் உள்ளம், இப்போது அவர்கள் தன்னைப் போலவே கைவிடப்பெற்ற

நிலத்தவன் நம் தலைவன். அவனை, என்னைப் போன்று நீங்களும், இனிக் காதலினாலே உங்கள் வேட்கை முற்றவும் நீங்கும்படியாகத் தழுவியிராதீர்கள்.'

'அறியாமை வயப்பட்டு, எண்ணற்ற ஆசை மொழிகள் பலவற்றையும் கூறி, ஏங்கி வருந்தாதும் இருப்பீர்களாக

'இங்ஙனம் இருப்பீராயின், அவன் விரைவிலே நம்பால் திரும்பி வருவான்' என்பது இதன் குறிப்பாகும்.

இங்ஙனம் துயரால், ஒன்றுபடும் பெண்மைச் செறிவினைக் கண்ட மூவாதியரின் உள்ளம் பெரிதும் வியப்பிலே ஆழ்கின்றது. தலைவியின் அந்த மனநிலையை அவள் சொற்களேபோலப் பாட்டுள் பொதிந்து வைத்துப் பாராட்டுகின்றார்.

**காதலின் தீரக் கழிய முயங்கன்மின்**
**ஓதம் துவன்றும் ஒலிபுனல் ஊரனைப்**
**பேதைபட் டேங்கன்மின் நீயிரும் எண்ணிலா**
**ஆசை யொழிய வுரைத்து.**

ஒருவருக்கொருவர் கொண்டிருந்த பகைமையை மறந்து, இப்படிப் பொதுவான துயரத்தாலே ஒருவருக்கொருவர் பரிவுகாட்டும் பெண்மைப் பண்பினை நாமும் அறிந்து வியப்புறல் வேண்டும்.

## 11. நின் மேலது பழிபாடு

தலைவியைப் பிரிந்து தன்னுடைய மயக்கத்தினாலே பரத்தையரது உறவினை நாடித்திரிந்த தலைவன், சிறிது காலத்திற்கு பின்னர், தன்மனம் மீளவும் தலைவியின் உறவினை நாடுதலால், அவளை நாடி வருகின்றான்.

அவளோ, அவனது செய்கையினாலே மனம் பேதுற்றுக் கலங்கியிருந்தவள் அதனால், அவனது கருத்துக்கு இசையாது, ஊடிச்சினந்து ஒதுங்குகின்றாள். அவளுடைய ஊடலும், சினமும் அவன்பாற் பெரிதும் காதலை மிகுதிப்படுத்த, அவன் அவளிடம் பணிமொழி பலவும் கூறியவனாகத், தன்னை ஏற்றுக் கொள்ள வேண்டுகின்றான். முடிவில், தலைவியின் தோழிபாற் சென்று, தலைவியது நிலையைக்கூறி, அவளைத் தலைவியின் சினத்தை மாற்றியுதவுமாறும் கேட்டுங் கொள்கின்றான்.

தலைவியின் நம்பிக்கைக்குப் பாத்திரமான தோழியும் முதலில், தலைவனை அவனது ஒழுக்ககேட்டைக் குறிப்பிட்டுத் தானும் சினந்து வெறுத்துப் பேசுகின்றாள்; என்றாலும், தலைவியும் தலைவனும் இணைந்தே வாழ்வதற்குரிய இல்லற வாழ்வு சிறப்பெய்துதலைக் கருதினாளாக, அவனுக்காகத் தலைவிபால் தூதுரைக்கவும் இசைகின்றாள்.

இசைந்து வருபவள், தலைவிபால், நயமாகக் தவைனை ஏற்றுக்கொள்ளுமாறு உரைக்கவும், நடந்ததை மறந்து விடுமாறு கேட்கவும் தொடங்குகின்றாள்.

"ஆண் பெண் உறவின் தன்மையானது, ஆழ்ந்த ஆராய்ச்சியிற் சிறந்த பெரியவர்கள் உலகிற்கு வகுத்துத் தந்துள்ள அன்போடுகூடி விளங்குவதாகும் என்று எண்ணாதவரான பரத்தையர்களுக்குக் காட்டி வந்த கண்ணோட்டத்தினை இன்றோடு முடித்துக் கொள்வோம்' எனக் கருதி நின்பால் வழிபாடு செய்தும் வேண்டி நிற்கின்றான்.''

"வளமான வயல்களையுடைய ஊரனான தலைவனை நீ இனியும் ஒதுக்குவாயானால், இனி அவனுக்கு வந்துறும் குற்றப் பாடுகள் எல்லாம் நின் மேலதாகவே கொண்டு உரைக்கப்படும். ஆதலால், அவனை நீயும் ஏற்றுக் கொள்வாயாக."

'நீ ஏற்காது கைவிட்டால், அவன் மீளவும் பரத்தையர் சேரியிற் சுற்றலாம். அதனால் வந்துறும் இழிவும் நின்னையே வந்து சாரும்' என்று எச்சரித்து, அதன் மூலம் குடிப்பழிக்கு அஞ்சியேனும் அவனை ஏற்றுக்கொள்ளுதலை வேண்டுகின்றாள் தோழி.

**உண்ணாட்டஞ் சான்றவர் தந்த நசையிற்றென்று**
**எண்ணார்க்குக் கண்ணோட்டம் தீர்க்குதுமென்று- எண்ணி**
**வழிபாடு கொள்ளும் வளவயல் ஊரன்**
**பழிபாடு நின்மே லது.**

'வழிபாடு கொள்ளும் வனவயல் ஊரன்' என்று அவன் தன்னுடைய பெருநிலையை மறந்து பணிந்து வேண்டிநின்ற எளிமையினை நினைவுறுத்துகின்றாள். 'பழிபாடு நின் மேலது' என்று, அவனோடு ஊடிச் சினந்து கொள்ளும் ஒழுக்கத்தை நீட்டியாது, அவனை ஏற்றுக் கொள்ளுதலை வேண்டுகின்றாள்.

'வழிபாடு கொள்ளும் வனவயல் ஊரன்' என்று அவன் தன்னுடைய பெருநிலையை மறந்து பணிந்து வேண்டிநின்ற எளிமையினை நினைவுறுத்துகின்றாள். 'பழிபாடு நின் மேலது' என்று, அவனோடு ஊடிச் சினந்து கொள்ளும் ஒழுக்கத்தை நீட்டியாது, அவனை ஏற்றுக் கொள்ளுதலை வேண்டுகின்றாள்.

## 12. ஊர தகுவதோ?

தலைவிபால் வந்து இப்படிப் பலபடக்கூறி வேண்டி நிற்கும் தோழி தலைவன் மேற்கொண்ட பழியுடைச் செயலான பரத்தைமை உறவினை மறந்துவிட்டவளும் அல்லள். அவன்பாற் சென்று, நயமாக, அவனது போற்றா ஒழுக்கினைக் கண்டித்தலையும் மேற்கொள்ளுகின்றாள்.

'தடாகத்திடத்தே உண்டு அதனிடத்தாகவே வாழ்கின்ற இயல்பினையுடைய வராஅல் மீன்களின் கூட்டமானது அவ்விடத்தேயே திரிந்து கொண்டும் இருப்பனவாம். அத்தகைய தண்மையான இடங்களையுடைய ஊருக்கு உரியவனே!'

'ஒள்ளிய தொடியினளான நின் தலைவியினது நிலையினைப் பார்ப்பாயாக.'

'இவள் மனையைவிட்டு நீங்கி, பரத்தையர் வாழும் அந்தச் சேரிநோக்கிச் செல்வதனைப் பெரியதொரு செயலாக மேற்கொள்ளுதல், நினக்குத் தகுதியாகுமோ? அது நினக்கு இழிவேயாதலால், அதனைக் கைவிடுக' என்றாள் தோழி

**உண்டுறைப் பொய்கை வராஅல் இனம்பிரியும்**
**தண்டுறை யூர தகுவதோ-ஒண்டொடியைப்**
**பாராய் மனைதுறந் தச்சேரிச் செல்வதனை**
**ஊராண்மை யாக்கிக் கொளல்.**

'வராஅல் இனத்தைப்போல, நீயும் இம்மனையைப் பிரியாது இவளுடன் கூடியிருத்தல் தான் நினக்குப் புகழ் தருவது; அதுவே ஊராண்மைச் செயல்' என அறிவுறுத்துவது இது.

## 13. சிறுவன் உடையேன்

தலைவன் ஒருவன், தன்னுடைய மனைக்கிழத்தியை மறந்து, தன் உள்ளங் கவர்ந்தாளான பரத்தை ஒருத்தியது மயலிலே

ஆழ்ந்து கிடக்கின்றான். தலைவியும் தன்னுடைய மகனின்பால் மனத்தைச் செலுத்தியவளாகப் பிரிவினாலே தான் கொண்ட பெரிதான வேதனையையும் உள்ளத்தே அடக்கிக் கொண்டு ஒழுகிவருகின்றாள்.

இந்த நிலையிலே, தலைவனின் மனம், மீளவும் தலைவியை நாடத் தொடங்குதலினாலே, அவன் தன்னுடைய வருகையை அறிவித்து . வருமாறு கூறிப் பாணனைத் தலைவிபால் ஏவுகின்றான். பாணன் வந்து, தலைவனின் கருத்தினைத் தெரிவித்து நிற்கத் தலைவி அதனாற் பொங்கிய தன் துயரத்தினை யெல்லாம் மறைத்தவளாக, விரக்தியுடன் தலைவனை ஏற்க மறுத்துக் கூறுகின்றாள்.

'பாண் மகனே! நாடோறும் குற்றமற்ற பொன்வளை களையுடைய தன் கைகளை வீசியும் விரித்தும் விளையாடுகின்ற என் புதல்வனாகிய சிறுவனை எனக்குத் துணையாக யான் கொண்டுள்ளேன். என்னளவில் இதுவே எனக்குப் போதுமானது. இனித் தலைவன்பால் என் மனம் ஈடுபடுவது என்பதோ நிகழுமாறில்லை. ஆதலினாலே--

'பொய்கைகளையுடைய ஊரனாகிய தலைவனின் திறன்களை எல்லாம் எடுத்துக் கூறிக் கொண்டு நீ இங்கு நிற்றல் வேண்டாம்.'

'தலைவன் என்னைப் பிரிய நேரிட்டது'. என்னுடைய துயரமாகவே ஆகியிருந்தது என்றாலும், அதனை யான் ஏற்றிருப்பேன்; நீ எழுந்து செல்வாயாக' என்று உரைத்தனள்.

பாணனும், அதன்மேல் எதுவும் சொல் நிற்றற்கு வாயெழாதவனாகத் தலைவியின் உள்ளத்தே நிரம்பி நிற்கும் தனிமைத் துயரினை உணர்ந்தவனாக, அவளுடைய பெண்மைச் செவ்வியைப் போற்றியவனாக, 'புதல்வன் துணையுள்ளேன்' என்ற உரிமைப் பேற்றை நினைந்து வியந்தவனாக, வெளியேறிச் செல்லுகின்றான்.

**பொய்கைநல் ஊரன் திறங்கிளத்தல் என்னுடைய**
**எவ்வம் எனினும் எழுந்தீக--வைகன்**
**மறுவில் பொலந்தொடி வீசும் அலற்றுஞ்**
**சிறுவன் உடையேன் துணை.**

'தலைவியது மனையற மாண்பினது செவ்வியை விளக்கும் சிறந்த செய்யுள் இது. மகனையும் மறந்து போன தலைவனின் குடும்பப்பற்றை இகழ்ந்து உரைத்து நொந்து கொண்டதும் இதுவாகும்.'

## 14. அனைத்தும் உளேன்

தலைமைகன் பரத்தையை விரும்பியவனாகத் தலைவியைப் பிரிந்து, பரத்தையர் சேரியில் தங்கிவிடுபவன் ஆகின்றான். தலைவனின் பிரிவினாலே தலைவி அடைந்த வருத்தமோ மிகவும் பெரிதாயிருந்தது. தன்னை மறந்த வேதனையுடன், தனக்கு உரியவனான தலைவன் பரத்தை ஒருத்திபால் இன்புற்று ஒழுகிவருகின்ற அந்த நிலையினை அவளாற் சகிக்கவே முடியவில்லை. அதனை நினைக்க நினைக்க அவளது துயரமும் கவலையும் பொங்கிப் பெருகிமிகுந்தன.

தலைவியின் உடலும் அதனால் மெலிந்தது. அவள் உள்ளத்தின் கரைகடந்த காதற்பாசம் எல்லாம், கரை கடந்த கவலைத் துயரமாகி வருத்தத் தொடங்கியது. அவளுடைய நிலையைக் கண்டாள் அவளுடைய ஆருயிர்த் தோழி. அவளுடைய உள்ளமும் அத்னால் துயரப்படலாயிற்று. 'எப்படியும் தலைவனையும் தலைவியையும் மீளவும் ஒன்றுபடுத்தி, அவர்களது இன்ப நல்வாழ்வினை மலரச் செய்வதற்கு' நினைக்கின்றாள் அவள். அதனால் தலைவிபாற் சென்று, தலைவனின் வரவினை விரும்பியவளாக இப்படிக் கூறுகின்றாள்,

"தோழி வளஞ்சிறந்த வயல்களைக் கொண்ட ஊருக்கு உரியவன் நம் தலைவன். மாயமொழிகளைக் கூறி அவன் மாதர்களை மயக்குதலையும் செய்திருப்பவன்."

'அத்தகைய மாயவுரைகளால் அறிவிழந்த மாதர்கள் தங்களது சக்கரம் போன்ற மோதிரமணிந்த கைகளால் அவனை வளைத்துத் தழுவியும் கிடப்பார்கள்.'

'அங்ஙனம் அவரால் வளைத்துக் கொள்ளப் படுதலினின்று தப்பி, இடையிட்டு என்றாவது அவன் நம்பால் வருவான் ஆகில், நின்வாழ்நாட்களுள் அவனை இனிமேல் என்றும் பிரிய நினையாதபடியாக, யான் சேர்த்து விடுவேன். அதனைச் செய்வேனானால், அனைத்துச் செல்வங்களையும்

பெற்றுள்ளது போன்ற மனநிறைவை அது எனக்குத் தருவதாயிருக்கும்.'

தோழியின் உள்ளார்ந்த விருப்பம் இது. இது, அவள் நினைவெல்லாம் தலைவனின் செயலினின்று அவனை விலக்கித் தலைவிபாற் கொண்டு சேர்ப்பதிலேயே இருக்கிறது என்பதைக் காட்டும்.

**வளவயல் ஊரன் மருளுரைக்கு மாதர்**
**வளைஇய சக்கரத் தாழி--கொளைபிழையா**
**வென்றிடை யிட்டு வருமெனின் வாழ்நாட்கள்**
**ஒன்றி அனைத்தும் உளேன்.**

தோழியின் விருப்பத்தைத் தலைவி கேட்கின்றாள். அவளது உறுதியான துணையால் தன் துயரத்தையும் சற்றே மறந்திருக்கின்றாள்.

இங்ஙனம், மருதவளம் எங்கும் தமிழ் வளமாகவே நிரம்பி நிற்கின்றதனை நாமும் நுட்பமாக அறிந்து இன்புறல் வேண்டும்.

# 5. நெய்தல் வளம்

**கடலும் கடல்சார்ந்த இடமும் ஆகிய நெய்தற் பகுதியிலே வாழ்ந்த நேரிழையோடு, துறைவன் ஒருவன் ஒழுகிவந்த ஒழுக்கத்தை உரைக்கும் பகுதி இது.**

*ஐந்திணை ஒழுக்கத்தைத் தழுவி எழுந்த தமிழ்ச் செய்யுட்களுள், நெய்தல் செய்யுட்கள் உள்ளத்தைத் தொடுவனவாகவே பெரும்பாலும் விளங்கும். இதற்குக் காரணம், இரங்கலும் இரங்கல் நிமித்தமுமாக அமைகின்ற அதன் இயல்பே என்று கூறலாம். அவ்வகையிலே செறிவுடைமையோடு அமைந்தவை மூவாதியரின் இந்தச் செய்யுட்கள்.*

## 1. உயிருக்கு ஊதியம்

*நெய்தல் நிலப்பாங்கிலே, கடற்கரைச் சோலையிலே தம்முட் சந்தித்துக் களவிலே திளைத்து உறவாடி வந்தனர் தலைவனும் தலைவியுமாகிய இருவர். அவர்களுடைய களவுறவின் போக்கினைக் கண்ட தலைவியின் தோழிக்கு, அந்த உறவு மனவமைதியைத் தரவில்லை. தலைவனின் நேர்மையிலே அவளுக்கு நம்பிக்கை பிறக்கவும் இல்லை. எனினும், தலைவியின் உள்ளம் அவன்பாற்சென்றதனை அறிந்த அவள், தலைவியின் நலத்தைக் கருதி, அவளுக்குத் துணையாகச் செல்வதனையும் மேற்கொண்டு வருவாளாயினாள்.*

*இந்த நிலையிலே, ஒருநாள், தலைவியும் தோழியும் தலைவனைச் சந்திப்பதற்காகக் குறித்த இடத்திலே முன்னதாகவே வந்து அவன் வருகையை எதிர்பார்த்தவராகக் காத்திருக்கின்றனர். அவன் வருவதும் களவிலே திளைத்துத் திரும்புவதுமாகிய செயலினை ஏற்காத தோழி, அந்தச் சூழ்நிலையைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ளுகின்றனள்.*

*'தோழி! நாம் வந்து எவ்வளவு நேரம் ஆயிற்று? அவனை வரக்காணோம் என்பதனைக் கண்டாயல்லவா? அவன்*

வரமாட்டான் என்று யான் சொன்னது மெய்யாகி விட்டது. அவன் நின்னை மறந்துவிட்டான். வேறொருத்தி எவளாவது கிடைத்திருப்பாள். அவன் நேர்மையாளன் ஆகான். அவன் வஞ்சகன். அவனை மறந்துவிடு' என்கின்றாள்.

'தோழி! அவனை வஞ்சகன் என்று பழித்துரைத்தலைச் செய்யாதே. அவன் வஞ்சகனாயின் என் உள்ளத்திலே அவன் இடம் பெற்றிருக்கவே மாட்டான். குறித்த நேரத்தை மறந்திருப்பான். வேறு எதுவும் செய்திரான்' என்கின்றாள் தலைவி.

'குறித்த நேரத்தை மறந்து விடுவதென்றால்? நின்னைப் பற்றிக் கருதாத அவனது மனப்போக்கினை என்னென்று உரைப்பது? நின் வருத்தத்தை உணராத பேதைமை உடையவனா அவன்?' என்று தோழி சற்றுக் கடுமையாகவே கேட்கின்றாள்.

'அப்படிதான் இருக்கட்டுமே; அவன் வஞ்சகன் என்றில்லாமல், பேதையனாக அமைவது கூட நல்லது தானே' என்கின்றாள் தலைவி.

தலைவியின் காதற்பாசத்தை உணர்கின்ற தோழி, மீளவும் பேச்செழாது நின்று விடுகின்றாள். தலைவியின் உள்ளத்தைக் காட்டுவது இச்செய்யுள்.

**ஒழுகு திரைக்கரை வான்குருகின் தூவி**<br>
**உழிதரும் ஊதை எடுக்குந் துறைவனைப்**<br>
**பேதையான் என்றுணரும் நெஞ்சும் இனிது உண்மை**<br>
**ஊதியம் அன்றோ உயிர்க்கு?**

'நீர் ஒழுக்கத்தையுடைய அலைகளைக் கொண்ட கடற்கரையினிடத்தே, பெரிய கடற்பறவைகளின் இறகுகளினின்றும் சுழன்று வெளிப்படுகின்ற காற்றானது எடுப்பாக வீசிக்கொண்டிருக்கும். அத்தகைய ஊரினன் நம் தலைவன். அவனை 'வஞ்சகன்' என்று உணரின் நம் நெஞ்சம் எத்துணை வேதனைக்கு உள்ளாகும்? அதனைக் காட்டினும், அவனைப் பேதைமையாளன் என்று உணரும் போது என் நெஞ்சமும் இனிதாக இருக்கிறதே!'

'ஒன்றன் உண்மையை உணர்ந்து கொள்வது என்பது எப்போதும் உயிருக்கு ஊதியம் தருவதல்லவா!'

இவ்வாறு கூறிச் சமாதானம் அடைகின்றாள் தலைவி.

ஊதைக் காற்றுப்போல அவன் பிரிவும் தன்னை வருத்துவதாயிற்று என்பதனைக் கூறுவாள், 'ஊதை எடுக்கும் துறைவனை' என்றாள். அதுவும் தன் செயலால் தலைவிக்கு வந்துறுகின்ற துயரத்தை நினையாது வீசுகின்றதுபோலவே தலைவனின் செயலும் இருத்தலால், அவனைப் 'பேதையான்' என்றாள். தன்னை வெறுத்துக் கைவிட்டானாக வஞ்சகம் செய்தான் என்பதினும், பிரிவினால் நாம் உறும் துயரினை அறிந்துணர இயலாத பேதையான் என்று அறிதல் நன்று என்பாள். 'பேதையான் என்று உணரும் நெஞ்சும் இனிது' என்றனள். உண்மை உயிருக்கு ஊதியமாவது, அது உயிரைத் தளராதபடி காத்தலால்.

தலைவியின் இந்த மறுமொழி, தன்னுடைய சிறப்பை உணர்த்துதலால், தலைவன் மேலும் மிக்கெழுந்து பெருகும் காதலினை உடையவன் ஆவான் என்பது இதன் பயன் ஆகும்.

## 2. நின்னல்லது இல்

களவிலே கலந்து வாழ்கின்ற வாழ்க்கையிலே இனிமையுள்ளதென்பது உண்மையானாலும், அதனால் நேர்கின்ற தொல்லைகளும், வருவதான இடர்ப்பாடுகளும் தலைவியின் உள்ளத்தைத் திருமணநினைவிலே செலுத்துகின்றன.

குறிப்பாகவும், நேராகவும், அவள் பன்முறை தன் கருத்தினைத் தலைவனுக்கு உணர்த்திய போதும், அவன் விரைந்து அவளை மணந்து கொள்ளுதலிலே மனஞ்செலுத்தாதவனாக இருந்தனன். அதனால் அவன்பாற் சற்றே ஊடலும் அத் தலைவிபால் எழுகின்றது.

ஒருநாள், தோழியும் தலைவியுமாகச் சோலைப் புறத்திலே சென்றுகொண்டிருந்தனர். தலைவன் அவர்கட்கு எதிரிலே வருகின்றான். அன்று தன் நிலையை விளக்கமாகத் தெளிவு படுத்தி விட வேண்டும் எனக் கருதுகின்றாள் தலைவி.

தலைவன் பால் நேராகச் செய்தியைச் சொல்லவும் அவள் உள்ளம் துணியவில்லை. அது, அவனைக் குறை கூறுவதாகு

மென்ற கவலை அவளைத் தடுக்கின்றது. சொல்லாமல் இருந்தாலும், அவன் வரைதலிலே மனஞ் செல்லாதவனாக இருக்கின்றான். இந்த நிலையிலே, தன் தோழிபால் தன் நிலையைச் சொல்லி வருந்துவாள் போலப் பேசுகின்றாள் தலைவி.

"தோழி! என்னுடைய வாழ்வுதான் என்னாகுமோ? அறியேனடி? தலைவராகிய அவரிடத்தும் நம்மை வரைந்து மணந்து கொள்ளல் வேண்டுமென்கின்ற நன்மைப்பாடு இல்லை. நம் அன்னையிடத்தும், களவு வெளிப்பட்டதனாலே முன்போல் நாம் அவரைச் சந்தித்து இன்புறுதற்கு வாய்ப்பளிக்கின்ற நன்மைப்பாடு இல்லாமற் போயிற்று!"

"பொன்போன்ற மலர்களைப் பூத்துள்ள புன்னை மரங்கள் நிரம்பிய அழகிய கடற்கானற் சோலைகளை உடையவன் நம் சேர்ப்பன். அவனுக்கு, நம்மை வரையாது வாடுதற்கு விட்டிருத்தல் தான் தகுதியுடைது ஆகுமோ? ஆகாதன்றோ?

'அதனால், 'நின்னையன்றி வேறு துணை இல்லை' என்று நீ என் நிலையைத் தலைவருக்குச் சொல்வாயாக."

தலைவி உரைத்தது கேட்ட தலைவன், அவளைத் தெளிவித்து, விரைவில் வரைந்து மணந்துகொள்வதற்கு உறுதி பூண்டு செல்வான் என்பது இதன் முடிபாகும்.

**என்னைகொல் தோழி? அவர்கண்ணும் நன்கில்லை**
**அன்னை முகனும் அதுவாகும்--பொன்னலர்**
**புன்னையம் பூங்கானற் சேர்ப்பனைத் தக்கதோ**
**நின்னல்ல தில்லென் றுரை.**

'பொன்மலர் புன்னையம் பூங்கானற் சேர்ப்பன்' தன் வாழ்வு மலர்தற்கும் உதவவேண்டும் என்கின்ற குறிப்பினை அறிந்து இன்புறுக.

## 3. நாணுவரென்று பெயர்ந்தாள்

களவு வாழ்விலே, தலைவன் தலைவியர் இரவு வேளையிலே சந்தித்து இன்புற்று வருகின்ற காலம்; தலைவியின் இல்லத்தவரின் காவலும் கடுமையாகின்றது. தலைவன் வரும் வழியின் ஏதமும் மிகுதியாகின்றது.

ஒரு நாள் இரவிலே, தலைவி பறவையொலி கேட்டுத் தலைவனின் தேர் வந்ததெனக் கருதி வந்தவள், தலைவனைக் காணாமையாலும், அரவத்தால் பாக்கத்தவர் தன் உறவினை அறிதற்கு நேரின் அலரெழுதலை நினைத்ததனாலும், மீளவும் தன் இல்லத்திற்கே திரும்பிச் சென்று விடுகின்றாள்.

அவளுடன் வந்த தோழிமட்டும், ஒருக்கால் தலைவன் அங்கே வந்தால் செய்தியைத் தெரிவித்துத் தெளிவு செய்யும் பொருட்டாக அவ்விடத்தேயே இருக்கின்றாள். தலைவி சென்றதன் பின்னர், சற்று நேரத்தில் தலைவனும் வந்து விடுகின்றான். அவன் ஒருசார் ஒதுங்கியிருக்கத், தோழி அவனைக் கண்டு, தலைவி வந்து ஏமாந்து மீண்டு போயின நிலைமையை உரைக்கின்றாள்.

'வளைந்த காதணிகளை உடையவள் தலைமகள், அவள் கடற்கானற் சோலையிலே எழுந்த பறவைவகளின் ஒலியினைக் கேட்டாள். கேட்டவள், அதனை நின் தேர்வரவினை அறிவிக்கும் குதிரைக்ளின் மணியொலி என்றே கருதினாள்'.

'அலைகளாலும் காற்றாலும் இடப்பெற்ற மணல் மேடுகளை உடைய்து அகற்சி பொருந்திய இந்தக் கடற்கரைச் சோலை. இதற்குரிய தலைமகனான நின்னது விரைந்து செல்லும் குதிரையின் மணியொலியே கானற் சோலையில் எழுந்த அரவம் என்று கருதிய அவளும், நின்னைக் காணும் ஆசையினாலே இங்குவந்து, நின்னைக் காணாமல் தன் பிழையாகக் கருதிய தன்மைக்கு வருந்தியவளாகினாள்'.

'சிறு குடியிருப்பினராகிய பரதவர்கள், ஏற்பட்ட அந்த ஒலியானது தம் மகளது காதலனின் தேர்வரவின் ஒலியே என்று அவளைப் போன்றே கருதினராயின், தம் மகளின் ஒழுக்கங் குறித்து நாணங் கொள்வரன்றோ! இதனை நினைந்ததும், அவள் விரைந்து, தன் வீட்டிற்கு ஏகினாள்.'

'தலைவனே! உங்கள் இரவுக்குறியின் சந்திப்பு இவ்வாறாயிற்று. நின்னைப் பிரிந்து அவள் வாழ்தல் இலள். இல்லிலிருந்து வாடி நலிந்திருக்கும் அவளது மனத்துயரை அகற்றுவாயாக! அவளை முறையாக வரைந்து மணந்து இல்லறம் பேணுவாயாக' என்று சொல்கின்றாள் தோழி

**இடுமணல் எக்கர் அகன்கானற் சேர்ப்பன்**
**கடுமான் மணியரவம் என்று--கொடுங்குழை**

**புள்ளரவங் கேட்டுப் பெயர்ந்தாள் சிறுகுடியர்**
**உள்ளரவம் நாணுவர் என்று.**

*'சிறுகுடியர் உள்ளரவம் நாணுவர் என்றே பெயர்ந்தாள்; இல்லெனிற் பெயர்கின்ற தன்மையள் அல்லள்' என்று கூறும் தோழி, அதனால் தலைவியது இற்செறிப்பின் கடுமையினையும் தலைவனுக்கு உணர்த்துகின்றனள்.*

*'தேரொலி குறித்த இடத்திற்கு வந்ததும் நின்றுவிடும்; புள்ளொலி அப்படி நிற்பதில்லை; அதனால் வீட்டவர் துயிலெழுந்து, தம் மகளைக் காணாது கவலையுறுவர், தேடியும் நாணமுற்றும் நலிவர். இதனால் அவள் பெரிதும் துன்புறுவாள். ஆகவே, அவளை விரையவந்து மணந்து கொள்வாயாக' என நயமுடன் அறிவுறுத்துகின்றாள் தோழி.*

## 4. கடல் துஞ்சாதது

*தலைவன் தலைவியரிடையே களவுறவு மலிந்திருந்த காலம் மாறிவிட்டது. தலைவியின் வீட்டார் அவளது உறவிலே ஐயுற்றவராகி, அவளை வீட்டைவிட்டு வெளியே செல்லலாகா தெனத் தடுத்துக் காவலும் இட்டுவிட்டனர். இரவுப் பொழுதிலே, அனைவரும் துயின்றபின்னர், யாரும் அறியாமற் சென்று, கானற்சோலையிலே காதலனுடன் கலந்துகூடி வந்ததுங்கூட இப்பொழுது நின்று விட்டது. தலைவியின் வேதனை பெருகி அவளை மிகவும் நலிவடையச் செய்ய, அவள் தன் ஒழுக்கத்தை வாய் விட்டுச் சொல்லவியலாதும், தன் மேனிக்கண் நிகழும் மாற்றங்களை மறைக்க வியலாதும் இடர்ப்படுகின்றாள்.*

*ஒருநாள் இரவிலே கண்ணுறக்கமும் கொள்ள மாட்டாதவளாக, அவள், தன்னுடைய காதலனை நினைந்து புலம்பிக் கொண்டிருக்கின்றாள். அவளுடைய ஆருயிர்த் தோழி அவளது களவுறவினை அறிந்தவளாதலோடு, அவளுக்குப் பலகாலும் உசாவுதுணையாகவும் விளங்கியவள். தலைவியின் கரை கடந்த துயரத்தைக் கண்டு கலக்கமுற்றவளாக, அவளும், அவளருகே வேதனையுடன் வெதும்பிக் கொண்டிருக்கின்றாள்.*

*நள்ளிரவு நேரத்தின் செறிந்த இருளும் அமைதியும் பாக்கத்திடமெங்கணும் நிலவியிருக்கின்றன. ஊரும் உறக்கத்திலே ஆழ்ந்ததாக அனைத்தையும் மறந்து அயர்ந்து*

கிடக்கின்றது. இரவுக்குத் துணையிருப்பது போலத் தலைவியும் தோழியும் ஒருவர் துயரத்தை ஒருவர் ஆற்ற முயன்றாராக அமர்ந்திருக்கின்றனர். அப்பொழுது கடலலைகள் கரைமேல் வந்து மோதுவதனால் எழுந்த ஆரவாரம், இரவின் அமைதியை ஊடறுத்துவந்து, அவர்கள் காதுகளிலும் விழுந்து கொண்டிருக்கிறது. அப்போது தலைவி கூறுகின்றாள்.

'தோழி!'

'நீலமணியைப் போன்ற நிறத்தையுடைய நெய்தற் பூக்கள் மலர்ந்திருக்கும் பெரிய உப்பங் கழிகளையுடைய கடல்நாட்டுத் தலைமகன், நம் தலைவன் அவன், நம்முடைய அழகாகிய நலத்தினை உண்டுவிட்டு, நம்மை விட்டுப் பிரிந்தும் போயினான். அதனால், நாம் துஞ்சாதே கிடந்து துயருற்றுப் புலம்புகின்றோம்.'

'செறிந்த மணல்மேடுகளில் அலைகள் மோதி நடக்கும்படியாகத் துணியப்பட்ட கடலும், துஞ்சாது இப்படி ஆரவாரித்துப் புலம்புவது ஏன்?'

'நம் சேர்ப்பன் அதன் அழகு நலத்தையும் உண்டபின், அதனையும் கைவிட்டுப் பிரிந்து போயினானோ? அதனாற்றான் அதுவும் துஞ்சாதிருக்கிறதோ?'

தலைவியது ஏக்கச் சுமையின் அழுத்தம் இப்படி வெளி வருகின்றது.

**மனநிற நெய்தல் இருங்கழிச் சேர்ப்பன்**
**அணிநலம் உண்டகன்றான் என்றுகொல் எம்போல்**
**திணிமணல் எக்கர்மேல் ஓதம் பெயரத்**
**துணிமுந்நீர் துஞ்சா தது.**

'மணிநிற நெய்தல் இருங்கழிச் சேர்ப்பன்' என்பதை நன்றாகச் சிந்தித்தல் வேண்டும். 'கண்போல் விளங்கும் அதனையுடைய சேர்ப்பன், தன் கண்களின் கலங்கிய நிலையினை நினைத்தானில்லையே' என்று வருந்தியது இது.

## 5. உணர்வு இலாதேன்

தலைமகன் வெகு நாட்களாகவே தலைவியை வந்து சந்தியாமல் இருந்துவிட்டான். அதற்குத் தடுக்க முடியாத

அவனுடைய தொழிற்பாங்கே காரணமாக இருந்தது. நாவாய் கொண்டு தன்னொத்தவர் பலருடன் வேற்று நாட்டிற்குச் சென்றிருந்தவன் அவன். தன் ஊர்க்கு கருதியவனாக அவர்கள் வழக்கமாகக் கூடியிருக்கும் தாழைகள் சூழ்ந்த கானற் சோலையிடத்தை நாடிச் செல்கின்றான்.

பெரிதாகிய இடையீட்டினாலே துன்பத்தைச் சுமந்து சுமந்து, ஒருவித விரக்தி நிலையினை அடைந்துவிட்டிருந்தாள் தலைவி. அவனுடைய செலவினைப் பற்றி அறியாளாகவே, நாள்தோறும் தாங்கள் கூடும் குறியிடத்திற்குச் செல்வதும் அவனைக் காணாது வருந்தி இல்லிற்கு மீள்வதும் அவளுடைய வழக்கமாயிருந்தது.

மேலும், அவர்களது உறவு களவின்கண் நிகழ்ந்ததாதலின், அவளால் தன் வேதனை மிகுதியை வெளிக்காட்டிப் புலம்புதற்கும் இயலவில்லை. உள்ளே அடக்கவும் அடங்காது, வெளியே விடவும் இயலாத நிலையில், காமவேட்கை கனன்று கனன்று அவளை வதைத்தது.

அன்றும் கானற்சோலைக்கு வந்தவள், நின்ற தலைவனைக் கண்டாள். கண்டதும், அவள் உள்ளத்தே காமநினைவு தலையெடுக்கவில்லை. தன்னைப்பிரிந்து போன அவனது கொடுஞ்செயலே முன்னின்றது. அதனால், கண்டும் கானாதவளைப் போலத் திரும்பிவிட்டாள்.

இல்லிடத்தே வந்ததும், அவளுடைய மனம் அவளை வதைக்கத் தொடங்கியது. ஆசையெழுந்து அலைக்கழிக்க முற்பட்டது. தன்செயலை நினைந்து வருந்தவும் தொடங்கினாள். தானே புலம்புதலையும் மேற்கொண்டாள்.

அவளுடைய அளவிறந்த மனநிலையினைக் காட்டும் அரியதொரு செய்யுளாக இது அமைந்துள்ளது. அவளுடைய பெரிதான காமக்கனலையும், அதனையும் மேற்கொண்டு நின்ற குடிமையின் சிறப்பினையும் நாம் இதன்கண் காணுகின்றோம்.

**கண்திரள் முத்தம் பயக்கும் இருமுந்நீர்ப்**
**பண்டங்கொள் நாவாய் வழங்குந் துறைவனை**
**முண்டகக் கானலுட் கண்டேன் எனத்தெளிந்தேன்**
**நின்ற உணர்விலா தேன்.**

"மூங்கிற் கணுக்களினின்றும் திரட்சிகொண்ட முத்துக்கள் கிடைக்கும் என்பார்கள். அதனைப்போன்று முத்துக்களைத் தருவது பெரிதான கடலும் ஆகும். முத்துக்களைத் தருகின்ற பெருங்கடலிடத்தே பொருள்களைக் கொள்வதற்காக வேண்டி நாவாய்கள் வந்து போய்க்கொண்டிருக்கும் அத்தகைய வளமான துறைக்கு உரியவன் நம் தலைவன்."

"அவனை, நான், தாழைகளாற் சூழப்பெற்று விளங்குகின்ற கானற் சோலையினுள்ளாக, இன்று வரக் கண்டேன். கண்ட அப்போது 'அவனின்றி யான் அமையேன்' எனத் தெளிந்திலேன், அதனால், அவனைப் பார்த்தும் பாராதது போலவே வீட்டிற்குத் திரும்பினேன்."

"நிலைபெற்ற உணர்வு இல்லாதவள் யான், அப்போது அங்ஙனம் நடந்துகொண்டவள், இப்பொழுதோ அவனின்றி யான் வாழுமாறில்லை என்பதனைத் தெளிவாக அறிகின்றேன். இனி, யான் யாது செய்வேனோ?"

இவ்வாறு, தான் செயலழிந்த நிலையினை எண்ணியெண்ணித் தலைவி புலம்புகின்றாள். 'பண்டங்கொள் நாவாய் வழங்கும் துறைவனை' என்பது, அவைபோல வருவதும் இன்பத்தைக் கொள்வதும் அகன்று போவதுமாக அவன் விளங்கியதனை உணர்த்துதல் காண்க. 'முண்டகக் கானல்' என்றது, அவர்கள் வழக்கமாகச் சந்தித்துக் களவிலே கூடி மகிழ்ந்திருந்த குறியிடம்.

## 6. அயல்நெறி செல்லுங்கொல்?

தலைவியின் களவுறவினாலே அவளுடைய உடலினும் செயலினும் ஏற்பட்ட புதிய மாற்றங்களைக் காணுகின்ற செவிலித் தாய்க்குத் தன் மகள் மீது ஐயம் ஏற்பட்டு விடுகின்றது. அதனால் அவள் வீட்டை விட்டு எங்கணும் வெளியே செல்லற்கியலாதபடி கட்டுக்காவலுக்கு ஏற்பாடு செய்து விடுகின்றாள்.

அதன்பின், அவள் மனம், தலைவியின் பருவமுகிழ்ப்பினை நினைந்து அவளுக்கு விரைவிலே தக்கான் ஒருவனைத் தேடி மணமுடித்து வைப்பதற்கான முயற்சிகளிலே ஈடுபடுகின்றது. நயமாகத் தன் கருத்தினைத் தலைவியின் தாய் தந்தைக்கும்

உரைக்கின்றாள். அவர்களும் தம் மகளுக்கு ஏற்றவன் ஒருவனை ஆராய்ந்து அவனுக்கே அவளை மனமுடிப்பதென்ற முடிபினைச் செய்கின்றனர்.

தலைவியோ, அதனைக் கேட்டதும் உளம் நடுங்கத் துயரத்தால் சோர்கின்றாள். கற்பு நெறியினைத் திண்மையாகப் பேணும் இயல்பினள் அவள். அதனால் தன் களவுக் காதலனையன்றிப் பிறனை மனப்பதற்கு இசையவே மாட்டாள். ஆனால், பெற்றோர் முடிபினை நேரடியாகவே எதிர்ப்பதும் இயலாது. ஆகவே, அவள் செவிலித்தாயிடம் தன்னுடைய காதல் உறவினைக் கூறி அறத்தொடு நிற்கின்றாள். முதலிற் சினந்தாலும், மகளின் நல்வாழ்விலே கருத்துக் கொண்ட செவிலி, அவ்வாறே அவளை அவள் காதலனுக்கு மனமுடித்து விடுவதாகக் கூறிப் பெற்றோர் ஏற்பாடு செய்ய நினைத்த மணமகனை வேண்டாமென விலக்கித் தடுத்து விடுகின்றாள்.

'நின் களவு உறவினை என்னால் ஏற்க முடியாது என்றாலும், நீ அவனையே மணப்பது தான் அறம் என்பதனை அறிகின்றேன். ஆகவே, நின் காதலனை, விரைவிலே வந்து பெண் கேட்பதற்கான செயலைச் செய்வதற்குச் சொல்வாயாக. அவன் வந்ததும், பிறவற்றை யானே முன்னின்று முடித்துவிடுகின்றேன்' என்றும் கூறுகின்றாள்.

வளர்ப்புத் தாயின் அன்பிற்கு எல்லையே கிடையாது. அதனை அறிந்த தலைவி, பெரிதும் அகமகிழ்வுடன் தன் தோழி மூலமாகக் காதலனுக்குச் செய்தி சொல்லி விடுகின்றாள்.

விரைவிலே ஏற்பாடுகளைச் செய்வதாகக் கூறிய தலைவன், கூறியபடி எதனையும் செய்தானில்லை. அதனால், தலைவியின் கலக்கத்தைக் காட்டிலும் செவிலியின் கலக்கமே மிகுதியாகின்றது.

தன் மகளான தலைவியின் தோழியை அருகே அழைத்து, 'தலைவியின் காதலனை அறிவாயே, அவன் எப்படிப்பட்டவன்? சொன்னதை விரையச் செய்பவனாகத் தெரியவில்லையே?' என்று, கவலையுடன் கேட்கின்றாள்.

செவிலித்தாயின் கவலையை உணர்ந்த தோழி, 'தலைவன் ஒருபோதும் தலைவியைக் கை விட மாட்டான்' என்று மிகவும் நயமாகக் கூறி, அவளது கவலையைப் போக்குகின்றாள்.

**அடும்பிவர் எக்கர் அலவன் வழங்கும்**
**கொடுங்கழிச் சேர்ப்பன் அருளான் எனத்தெளிந்து**
**கள்ள மனத்தான் அயனெறிச் செல்லுங்கொல்**
**நல்வளை சோர நடந்து?**

'அடும்பினது கொடிகள் படர்ந்தேறி விளங்கும் மணல் மேட்டிடத்தே நண்டினம் நடமாடியிருக்கும் வளைந்து செல்லும் உப்பங்கழிகள் எங்கணும் விளங்கும். அத்தகைய வளநாட்டின் தலைவன் அவன்.

'அவன் தலைவிக்கு ஒருபோதும் அருளாது இருக்க மாட்டான்.

அவன் அருளான் எனத் தெளிவுகொண்டு கேட்கின்றனை. அவன் அங்ஙனம் செய்யாத தகுதியினை உடையவன்.'

'நல்ல வளையல்களை அணிந்துள்ள இவள் சோர்வு அடையும்படியாக, அவன் கள்ளமனத்தனாகி, வேற்று நெறியினை நாடிச் செல்வானோ? ' என்று சொல்கின்றாள் தோழி.

இந்தச் சொற்களுள் பொதிந்துள்ள உறுதிப் பாட்டினை அறிந்து நாம் வியக்கின்றோம். 'அவன் அயல் நெறிச் செல்லுங்கொல்' எனக் கேட்கும் சொற்கள், செல்லான் என்ற உறுதியையும் நமக்குக் கூறுவதாகும்.

'தலைவி அறத்தொடு நிற்றலைப் போலவே, தலைவனும் உறுதியுடன் இருப்பானோ' என்ற ஐயம் செவிலித் தாய்க்கு ஏற்படுகின்றது நியாயமே. தன் மகளின் காதலன் அவள்பால் நிலையான அன்புடன், அவளை நெடிது பேணி நிற்கின்ற தகைமை உடையவனாதலை அவள் தெளிந்துகொள்ளல் வேண்டுமன்றோ. அவளது அந்த ஆர்வத்தையும், அது உறுதியென அவனது பெருந் தகைமையைக் காட்டித் தோழி கூறுவதையும் அறிந்து நாம் இன்புறல் வேண்டும்.

## 7. தேர்மேல் வரும்

தலைவனும் தலைவியும் களவுறவிலே ஈடுபட்டு அதன் கண்ணேயே முற்றவும் ஆழ்ந்து செல்லுகின்ற மனத்தினராகி ஒழுகிவருகின்றனர். களவுறவு கடிமணவுறவாக மலர்தல் வேண்டுமென விரும்பிய தோழி, பலகாலும் நேரடியாகவும்

மறைமுகமாகவும் அவர்களுக்குத் தன் கருத்தினை அறிவுத்துகின்றாள். எனினும் அறிவிழந்து ஒழுகிவருகின்ற அவர்களது நினைவெல்லாம் ஒருவரையொருவர் அடைந்து இன்புறுதலான அந்த ஒன்றனிடத்தேயே சென்றதனால், அவர்கள் உலகியலைப்பற்றிக் கருதாதேயே தம்போக்கில் ஒழுகி வருகின்றனர்.

இந்த நிலையிலே, ஒருநாள் இரவு தலைவியோடு தானும் தலைவனின் வருகைக்காகக் குறித்த இடத்தில் வந்து காத்திருந்த வேளையிலே, தலைவன் வந்து வேலிப்புறமாக நிற்பதனை உணர்ந்த தோழி, தலைவிக்குச் சொல்லுவாள் போல, அவனும் கேட்டு வரைதலை மேற்கொள்ளத் தூண்டும் நோக்கத்துடன், சில சொற்களை உரைக்கின்றாள்.

'ஆராய்ந்து அணியப்பட்டு விளங்கும் அணிகளை உடையவளே!'

'கண்களின் தன்மையைக் கொண்ட நெய்தற் பூக்கள் மலர்ந்து மணங்கமழ்ந்து கொண்டிருக்கின்ற, வளைந்து செல்லும்படியான கழிக்கால்களை உடைய, குளிர்ச்சியும் அழகும் வாய்ந்த கடற்றுறைக்கு உரியவனான நம் தலைவன், தனது பழைய தன்மையினை உடையவன் அல்லனாயினான்.'

'நம் அழகனைத்தும் அவனுடைய கையுள் அகப்பட்டுக் கொண்டதனை, அவன், தன்னுடைய ஆண்மைச் செயலினாலே அடைந்து கொண்டதெனக் கருதினான். சுருதிச் செருக்கியவனாகப் பண்ணுதல் அமைந்த தேர்மேல் ஊர்ந்தவனாகவும் நம்பால் வருகின்றான். ஆனால், நின்னை வரைந்து மணந்து கொள்ளுதல்தான் ஆண்மைச் செயல் என்பதனை அவன் உணர்ந்தானில்லையே!' என்கின்றாள் தோழி.

தலைவியின் உள்ளமும் மணந்து வாழும் இல்வாழ்விலேயே ஈடுபட, அதனைக் கேட்கும் தலைவனும், தன்னுடைய செயலுக்கு நாணியவனாக, விரைவிலே அவளை விரைந்து வந்து மணந்து கொள்ளுதற்கு முற்படுவான் என்பது இதனால் விளைவதாம்.

**கண்ணுறு நெய்தல் கமழுங் கொடுங்கழித்**
**தண்ணந் துறைவனோ தன்னிலன்; ஆயிழா!**

**வண்ணகைப் பட்டதனை ஆண்மை எனக்கருதிப்**
**பண்ணமைத் தேர்மேல் வரும்.**

'தன்னிலன்' ஆயது, முன்போலத் தலைவிபால் அவளது நல்வாழ்வைக் கருதித் துணையாக அமையும் தகுதியிலன் ஆயினான் என்பதனால், அஃதாவது, அவன் தன்னுடைய இன்பத்தை நாடுபவனாகக் களவிலேயே அவளைத் துய்த்துப் பெறுதலை விரும்பியவனாக வருகின்றானே அல்லாமல், பொறுப்புடைய இல்லற வாழ்வினை ஏற்றற்குத் துணிந்திலன் எனப் பழித்து உரைக்கின்றனள் தோழி.

"கழிக்கால்களிலே நெய்தற்பூக்கள் மலர்ந்துள்ளன; அவற்றின் தண்ணென்ற மணமும் எங்கணும் கமழ்கின்றது; வளைந்து வளைந்து செல்லும் கடற்கால்வாய்களின் எம்மருங்கும் இந்த நெய்தல் மலர்களின் பெருக்கம் தோன்றாமல் இல்லை; இவற்றையுடைய குளிர்ந்த நீர்த் துறைக்கு உரியவன்தான் தலைவன்; அவற்றைக் காண்பவன் தான் அவன்; எனினும் அவற்றைப் பார்க்கும் அவனுக்குத் தலைவியின் கண்களைப் போல விளங்கும் அவற்றைக் கண்டதும் தலைவியின் நினைவு எழவில்லை. தலைவியைக் கலங்காது பேண வேண்டும் என்கிற முயற்சிப்பாடும் தோன்றவில்லை; அதனால், அவன் அருளற்றவன்" இப்படிச் சுட்டிக் குறை சொல்ல நினைக்கின்ற தோழி, நேரடியாகக் கூறாமல், 'கண்ணுறு நெய்தல் கமழும் கொடுங்கழித் தண்ணந் துறைவன்' என்கின்றாள். இந்த உரைச் செவ்வியது நயப்பாட்டினை நாமும் உணர்தல் வேண்டும்.

'முன்பெல்லாம் அவளை நாடிநாடி ஓடிவந்தவன் அவன்.; அவளது அருளைப் பெறுவதற்காகப் பணிமொழி கூறிவேண்டி நின்றவனும் அவன்; அவள் ஐயுற்றாளாக 'நின்னிற்பிரியேன்' எனச் சூளுரைத்து அவளைத் தெளிவித்துக் கூடி இன்புற்றவனும் அவன்; இன்றோ, அவளை மறந்து திரிகின்றனன்; இதனால், 'அவன் தன்உணர்வு இல்லாதவன் போலும்' என்று கருதிய தோழி, 'தன்னிலன்' எனக் கூறுந் திறத்தையும் நாம் கருதி இன்புறல் வேண்டும்.

'அவனைச் சான்றோன் எனக் கருதினோம். அவனோ பொய்ம்மை பலவுரைத்து நம்மை மயக்கி, நம் கன்னிமையழகினைக் கைக்கொண்டும் போயினான்; அவன் அருளின்றி நம் அழகு நலம் நமக்கு மீளவும் வருவதில்லை;

இதனை அவன் உணரானோ? உணர்ந்தும், நம் அழகின் உண்மையும் அழிவும் அவன் கைக்குள் அகப்பட்டதனைத் தனது இழிதகைமையாற் கொண்டதென உணராது, தன் ஆண்மையாற் கொண்டதென எண்ணினானோ? பண் அமைந்த தேர்மேல் வருகின்ற அவன் செருக்குத்தான் என்னே? இப்படியெல்லாம் தலைவனின் பிரிந்து மறந்த கொடுந்தன்மையைச் சுட்டியுரைத்துப் பேசுகின்றாள் தோழி.

இவற்றால், தலைவனின் உள்ளத்தே, விரைவில் தலைவியை மணந்து பிரியாத இல்லற நல்வாழ்விலே திளைக்க வேண்டுமென்னும் நினைவு எழுதல் உறுதியாகும். ஆண்மையாளனாகிய அவன், தன்னை உணர்வான்; காமத்தின் நிலையினாலே கடமையைக் கருதாதிருந்த அவன், கடமையிலே உறுதிப்பட்டு நிற்பவனாவான் என்பதும் இப்பேச்சின் பயனாக அமைந்து சிறக்கும். இதனால், தலைவன் தலைவியரின் நல்வாழ்வும் புகழுக்குரியதாகி உயரும்.

## 8. அன்றிலே உரையாய்.

தலைவியை வரைந்து கொள்ளுதல்தான் தன்னுடைய ஆண்மைக்குத் தகுதியானது என்பதனையும், அதுவே தங்களது இருவருடைய வாழ்விற்கும் நிலையான இன்பத்தைத் தருவதாயிருக்கும் என்பதனையும் தலைவன் உணர்ந்து விடுகின்றான். உணர்ந்தபோது, காமவேட்கையிற் சென்றிருந்த அவன் உள்ளம், வரைவதற்கான பொருளினைத் தேடிவருதல் வேண்டுமென்கின்ற ஆண்மைச் செயலின்பாற் சென்று உறுதிப்படுகின்றது. அவன், அதனைத் தலைவிக்கு உரைத்தவனாக, அவளைப் பிரியாமற் பிரிந்து பொருள் தேடிவருவதற்கும் சென்று விட்டான்.

தலைவன் பொருளோடு வந்து தன்னை மணந்து இன்புறுத்துவது தனக்குப் புகழையும் நிலைத்த கற்பு வாழ்வையும் தருவதெனத் தலைவி அறிவாள். எனினும், அவனைப் பிரிந்து, அவன் அருகிலில்லாத தனிமையோடு வாழ்தல் அவளைப் பெரிதும் வருத்துகின்றது. நாட்கள் செல்லச் செல்ல, அவனைப் பிரிந்திருக்கும் அந்த நினைவே உள்ளத்துள் நிறைந்துவிடத் தன்னை எரிக்கும் காம வெம்மையினால், அவள் பெரிதும் தளர்கின்றாள்.

ஒருநாள் இரவு நேரத்திலே, உறக்கம் வராது அவனையே நினைந்து நினைந்து புலம்பியவளாகத் தன்னுடைய பழைய அழகெல்லாம் தேய்ந்துபோன நிலையை நினைந்து வாடியவளாக, அவள் இருக்கிறாள். அப்பொழுது, அவள் வீட்டின் அருகே இருக்கின்ற பனை மரத்தின்மேல் அன்றிற் பறவைகளின் ஆரவார ஒலி எழுகின்றது. அவ்வொலியினைக் கேட்டதும் அவள் உள்ளத்து வேதனையும் மிகுதியாகின்றது.

அன்றிற் பறவைகள் ஒன்றையொன்று பிரியின் உயிர் வாழ்ந்திராத தன்மையன, அதனை எண்ணும்போது, பிரிந்திருக்கும் தன்னுடைய நிலைமை அவளுக்குப் பெரிதும் வேதனையைத் தருவதாகக் கனலுகின்றது. அப்பொழுது, உடனிருந்த தோழி, தலைவனிடம் சென்று, தலைவியின் நிலையைக்கூறி, அவனை விரைய வரச்செய்யும்படியாக அன்றிலிடம் வேண்டிக் கொள்ளுகின்றாள்.

“தெளிந்த நீரைக்கொண்ட கரிய கழியினிடத்தே, வேண்டுமளவுக்கு இரையினை உண்டு விட்டு வந்து பனைமரத்தின் மேல் தங்கியிருக்கின்ற, வளைந்த வாயினையுடைய, என்றும் பிரியாது துணையோடு கூடியிருக்கும் இயல்பினையுமுடைய அன்றிற் பறவையே!

“இளமையின் தன்மையான மழலைச் சொற்களைப் பேசும் இயல்பினையுடைய நின் தலைமகளின் அழகினை எல்லாம் கைக்கொண்டு வந்தனையே! அழகிழந்து அவள் நலிகின்றனளே! அதனால், கன்னிமையாகிய அவள் அழகினைக் கவர்ந்து வந்த நீ அதனையாவது திருப்பித் தந்து விடுக என்று கோவைப்படுத்தித், தண்ணிய நீர்த் துறைக்கு உரியவனான தலைவனிடம் சென்று சொல்வாயாக” என்கின்றாள்.

**தெண்ணீர் இருங்கழி வேண்டும் இரைமாந்திப்**
**பெண்ணைமேற் சேக்கும் வணர்வாய்ப்**
**புணர்அன்றில்**
**தண்ணந் துறைவர்க்கு உரையாய் மடமொழி**
**வண்ணந்தா வென்று தொடுத்து.**

தலைவியின் நலிவினைக் கண்டு, தானும் உளம் வருந்திய வளான தோழி, தலைவியைத் தெளிவிக்கும் பொருட்டாகவே அன்றிலை விளித்து இவ்வாறு கூறினள் என்று கருதுக.

அவன் வந்து வரைந்து கொண்டாலன்றி, இழந்து போன வண்ணம் மீளவும் வராதென்பதனால், அவனது வரவினை விரும்பிக் கூறியதே இதுவாகும் என்பதனையும் அறிதல் வேண்டும்.

'வருவாயோ இல்லையோ, இவள் அழகையாவது திருப்பித் தருக' எனச் சொல்லிக் கேட்கும் தோழியின் சொற்கள், தலைவியின் அழகழிந்த வன்மையைக் கண்டதும் அவள் கொண்ட வேதனைப்பாட்டின் மிகுதியைக் காட்டுவதுமாகும்.

அன்றிற் பறவைகள், துணையோடு பிரியாது வாழ்கின்ற தன்மையிலே மிகமிக உறுதிப்பாட்டுடன் விளங்குவன. துணையைப் பிரியாது வாழும் அவை, துணையைப் பிரிந்து வாடியிருக்கும் தன்னுடைய நிலைமைக்கு இரங்குதல் வேண்டுமெனவும், இரங்கி அவன்பாற் சென்று தூதுரைத்துத் தலைவியினுடைய நலிவைக் கூறி அவனைத் தலைவிபால் வரச் செய்தல் வேண்டுமெனவும் விரும்புகின்றாள் தோழி. அவளுடைய வருத்தத்தின் மிகுதியினாலே அவள் நினைவோட்டம் இப்படியெல்லாம் செல்லுகின்றது. அன்றில்தான் பேசிப் புலம்புதலை உணராதென்பதனை அவள் அறியாதவள் அல்லள். எனினும், தலைவியுடைய ஆற்றாமை மிகுதி தோழி பால் அன்றிலை விளித்துத் தூதுரைத்து வருமாறு வேண்டு தற்கும் தூண்டுகின்றது. முன் செய்யுளில் 'வண்ணங் கைப்பட்ட தனை ஆண்மை எனக் கருதி வருவானோ' என்றவள், இங்கே, 'மடமொழி வண்ணந்தா என்று உரையாய்' என்கின்றாள்.

இதனால், பிரிவான வெம்மை தலைவியது அழகினைச் சிதைத்தது, அவளை நலியச் செய்துவிடுதலான கொடுமையினை விளைப்பது புலனாகும்.

இதன் கருத்தும், தலைவன் தன்னை விரைந்து வந்து மணந்துகொள்ளல் வேண்டும் என்பதே, எனினும், அதனை நுட்பமாகப் புலப்படக் கூறுகின்ற திறம் பாராட்டற்கு உரியதாகும்.

## 9. குருகு அறியாகொல்!

தலைமகன் வரைவிடை வைத்துத் தலைவியைப் பிரிந்து சென்றிருந்த காலத்துப் பிரிவு நீட்டித்ததாகத் தலைவியின் அமகமிங்க கன்மையைக் கண்டு தோழி, அன்றிலுக்கு

உரைத்ததனை மேலே பார்த்தோம். தோழியின் அத்தகைய ஆறுதல் உரைகளும், தலைவியின் பிரிவினாலே கொண்ட துயரத்தைத் தணிவிக்கும் வலியற்றனவாகி விடுகின்றன. அவள், அவனையே நினைந்து, அவன் வருதலையே வேண்டி அதே நினைவாகச் செயலும் சிந்தையும் இழந்து துடித்திருக்கிறாள்.

இந்த நிலையிலே ஒருநாள், தோழியுடன் கடற்கரைப் பகுதிகளில் உலவி வந்தாலாவது தன் வேதனையை மறக்க முடியாதா என்று கருதி, அவளுடன் செல்கின்றவள், தலைவனுடன் வழக்கமாகக் கூடியிருக்கும் கானற் சோலைக்கு வந்ததும் செயலற்று நின்றுவிடுகின்றாள். அவளுடைய நினைவுகள் தங்களது கழிந்த கால இன்பத்தை நோக்கித் தாவுகின்றன. அந்த இடத்தின் ஒவ்வொரு பகுதியும் இன்ப நினைவுகளை எழுப்பிவிட, அவற்றையெல்லாம் இழந்து நிற்கும் தன்னுடைய நிலை அவளைப் பெரிதும் வருத்துகின்றது.

அதனைக் கண்ட தோழி, ‘ஏனடி! இப்படி எதையெல்லாமோ நினைத்துச் சோர்கின்றாய்! அவன் வருவான்; வந்து நின்னை வரைந்து மணந்தும் கொள்வான்; அதன் பின் அவனோடு பிரியாது கூடியிருக்கவும் போகின்றாய்; அந்த வருங்காலத்தைய இன்பநினைவுகளிலே நின் மனத்தைச் செலுத்தி அமைதிகாணக் கூடாதோ?” என்கின்றாள்.

இவர்கள் இப்படிப் பேசிக்கொண்டே வரும் பொழுது, ஆளரவம் கேட்டலால் அஞ்சிய கடற்பறவைகள், தாங்கள் தங்கியிருந்த இடங்களினின்றும் ஆரவாரத்துடன் எழுகின்றன. அவற்றைக் காணும் தலைவியின் உள்ளம், முன்னரும் அப்படி அவை பலகாலும் எழுந்து பறக்க அந்தக் களவுக் காலத்தை நோக்கிச் செல்லுகின்றது. முன்னெல்லாம், அப்படி அவை பறப்பதனையும் இன்பமாகக் கண்டவள், இப்பொழுது அதனையும் வெறுத்து உரைக்கத் தொடங்குகின்றாள்.

‘தோழி!’

‘கடற்கரைச் சோலையிடத்தே வாழ்கின்ற இந்த நாரைகள் நம் நிலைமையை அறியா போலும்?’

‘துள்ளி விளையாடும் சுறாமீன் தொகுதியாகிய கூட்டமானது கலங்கும்படியாக அவற்றின் பால் மோதி, அவற்றைக் கரையிடத்தே வீசுகின்ற அலைகளையுடைய

கடற்கரை நாட்டினன் நம் தலைவன். அவன், நமக்குச் செய்த கொடுமையினை இந்தப் பறவைகள் அறியா போலும்?'

'நம்மை இன்புறுத்துதலை மறந்து, காட்டு வழியிடத்தைச் சேர்ந்தவனாகப் பொருள் தேடிவரச் சென்றான் அவன். நம்பால் அவனது அருளானது அவ்வாறு அற்றுப் போன அந்தச் செயலினைக் கண்டும், இவை, நமக்கு அநுதாபம் கொள்ளுதலை அறிய மாட்டாவோ? . முன்போல எழுந்து ஆரவாரிக்கின்றனவே?'

தலைவியின் எண்ணப் போக்கினைத் தோழி புரியாமல் இல்லை, எனினும், அவள் என்செய்வாள்? 'அவற்றிற்கு ஏதடீ நின் துயரை அறிகின்ற அறிவு?', என்று கூறினவளாகத், தலைவியை வீட்டை நோக்கி அழைத்துச் செல்லுகின்றாள் அவள்.

பிரிவுக் காலத்தே, பழைய இன்பக்காலத்துத் தொடர் புடையன பலவற்றையும் விளித்துப் புலம்பும் தலைமகளிரது உளப்பாங்கினைக் காட்டும் நயமான செய்யுள் இது.

**எறிசுருக் குப்பை இனங்கலக்கத் தாக்கும்**
**எறிதிரைச் சேர்ப்பன் கொடுமை-அறியாகொல்**
**கானகம் நண்ணி அருளற் றிடக்கண்டும்**
**கானலுள் வாழும் குருகு?**

'கடலுள் துள்ளி விளையாடியிருந்த சுறாமீன்களை அவை கலங்குமாறு கரையிடத்தே எறிந்து ஆரவாரிக்கும் கடலலைகளைப் போலத் தன் இல்லிலே கன்னிமைப் பொலிவுடன் களித்துத் திரிந்த தன்னைத் தலைவனும் பிரிவெனும் செயலாற் கொடுமை செய்து போயினனே?' எனக் கூறாமற் கூறுகின்றாள் தலைவி.

## 10. வண்ணந்தா என்கம்!

தலைவியின் தனிமைத் துயரம் பெருகிப்பெருகி மிகுவதனையும், அதனைத் தாளமாட்டாத அவள், உருகி உருகி அழிவதையும் காணக் காணத் தோழியின் நெஞ்சத்தும் துயரம் படர்கின்றது. 'இவ்வளவு அருளற்றுப் போயின அத் தலைவனுடன் இனிமேல் எவ்வகை உறவுமே நமக்கு வேண்டுவதில்லை' என்று கூறும் வெறுப்புணர்வும் எழுகின்றது. எனினும், தலைவியின் அழகினைக் கவர்ந்து போகிய அவனைக்

கண்டு, அதனைத் திரும்பவும் மீட்டுத் தருதல் வேண்டு மென்பதும் தோன்றுகின்றது. தலைவியை அண்மி, அவளுக்கு உரைப்பவளாகத் தன் கருத்தைச் சொல்லுகின்றாள், தோழி!

"என் தோழியே!"

'நுண்மையான கயிறுகளாற் பின்னப்பெற்ற வலையினாலே, பரதவர்கள் பிடித்துக் கொணர்ந்த பலவகை மீன்களின் உணங்கலைப் பறவையினம் கவர்ந்து செல்லுகின்ற தன்மையினையுடைய துறையிடத்திற்கு உரியவன் நம் தலைவன்.'

'அவனை நம் கண்ணினால் காண்பதற்கு இனி நேருமோ? அங்ஙனம் நேருமானால், அவனை விடாது தொடர்ந்து, 'நீ களவுப் புணர்ச்சியாற் கைக்கொண்டு சென்று எம் கன்னிமை அழகினைத் தந்துவிட்டுப் போவாயாக என்று சொல்லி நாம் அவனிடம் கேட்போம்.

அவனை மேலும் பிரியவிடாது பற்றிக் கொள்வோம் என்பது தோழியின் கருத்தாதலைத் தலைவி உணர்கின்றாள். 'அவனை எப்போது நாம் காண்போமோ?' என்கின்றாள். அவள் துயரம் மேலும் ஓங்கிப் படர்கின்றது.

**நுண்ஞாண் வலையிற் பரதவர் போத்தந்த**
**பன்மீன் உணங்கல் கவருந் துறைவனைக்**
**கண்ணினாற் காண வமையுங்கொல்; என்தோழி!**
**வண்ணந்தா வென்கந் தொடுத்து.**

'பரதவர்க்கு உரிமையான மீனுணங்கலைப் பறவைகள் கவர்ந்து செல்லுகின்ற துறைக்குரிய தலைவன்' என்று சொல்வாளாக, அவன் தலையிவின் கன்னிமையழகைக் கவர்ந்து சென்ற களவுத் தன்மையினைச் சுட்டினள்.

மீனுணங்கலைக் கவரும் பறவைபோல, அதனைக் காத்திருந்த அவள் நலத்தினைத் தலைவன் கவர்ந்தான் என்று கூறிப் பழித்ததாகவும் கொள்க.

'வண்ணந்தா என்கம்' என அவன் வரின், அவனோடு இன்புற்றிருத்தலைவிட்டு ஊடிநிற்பேம் என உரைத்தலையும் அறிக.

பரதவர்கள் பெருமுயற்சியோடு கடலிடைச் சென்று மீன்களைக் கொண்டு வருவர்: அவற்றைத் தமக்கு உதவுமாறு

உணங்கப்போட்டு, அதற்குக் காவலும் அமைப்பர்; அந்தக் காவலையும் கடந்து பறவையினம் உணங்கலைக் கவர்ந்துபோம்.

இதனைக் கூறுகின்ற தோழி, அந்தப் பறவைகளைப் போன்ற இயல்பினை உடையவன் தலைவன் என்றும் மறைமுகமாகப் பழிக்கின்றனள்.

கவருகின்ற பறவைகளைக் காணின், பரதவர் கடிந்து ஓட்டுவதுடன் கவண் எறிந்து ஊறுப்படுத்தவும் முனைவர், தம் உரிமையைப் பேணுதலிலே உறுதியுடைய அவர்கள் அதனைச் செய்யாதிரார். ஆகவேதான், 'நீ கவர்ந்து போயின அழகினைத் தந்துவிடு' என்று கேட்டு விடுவோம்; இன்றேல் பரதவர் அவனை விடுவதிலர் என்பதனையும் எடுத்துக் கூறுவோம்' என்ற கருத்தினை உள்ளடக்கி இப்படிக் கூறுகின்றாள் தோழி.

இதனைச் சிறையகத்திருந்து கேட்கும் தலைவன், தன் உறவினாலே தலைவிக்கு வந்துறும் இடர்ப்பாடுகள் பலவற்றையும் கருதுவான் என்பதும், கருதுபவன் அவற்றை நீக்குவதற்கு முயல்வான் என்பதும் அந்த முயற்சியால் விரைய மணம்பெறும் வாய்ப்பு உருவாகும் என்பதும், தோழியின் உள்ளெண்ணமாகும். இந்த உள்ளெண்ணம் மிகவும் நுட்பமாகப் பொதியப் பெற்று, தம்மை நொந்து கொள்வது போன்றவொரு தன்மையோடு திகழ்கின்றது இச்செய்யுளில்.

## 11. தோள் பசலையாயின்று

கடற்கரை நாட்டுத் தலைமகன் ஒருவன், அந்நாட்டைச் சேர்ந்தவளான கன்னி ஒருத்தியுடன் களவிலே உறவாடிச் சில காலம் கழித்தபின், அவளை அறவே மறந்து, தன் தொழிலிலே மனஞ் செலுத்துதற்கு ஈடுபட்டு விட்டான்.

தலைவனின் இச் செய்கையினாலே தலைவியின் உடல் நலன் முற்றவும் அழியத் தொடங்கிய கொடுமையினையும், அவள் தன் பழைய பொலிவினை இழந்து பசலை படர்ந்தவளாக நலிகின்ற நிலையினையும் கண்ட தோழி பெரிதும் மனங் கலங்குகின்றாள். தலைவன்பாற்சென்று, தலைவிக்கு அருள் செய்தலை வேண்டுதற்கும் துணிகின்றாள்.

கடற்கரைப் பாங்கிலே திரிந்து கொண்டிருந்த தலைவனைக் கண்டு வாழ்த்தி நின்ற தோழியை, அவனும்

விருப்புடன் வரவேற்றுக் களிப்புடன் வாழ்த்துகின்றான். அவன் மனம் தலைவிபாற் செல்லுகின்றது. 'தோழி நின் தலைவி நலமோ? எனவும் விசாரிக்கின்றான்.

அவனுடைய விசாரிப்பைக் கேட்டதும், தோழியின் உள்ளம், அவனுடைய செயலினை நினைந்து கொதிப்படைகின்றது. 'அதோ, மணல் மேட்டின்கண் செல்லுகின்ற நண்டுகளைப் பார்.' என்கின்றாள், அவனும் பார்க்கின்றான்.

இணையிணையாகக் களிப்புடன் ஆடித்திரிகின்ற அவற்றின் செயலிலே அவனுடைய உள்ளமும் ஈடுபடுகின்றது. அவற்றைப் பார்த்தபடியே, 'இவற்றின்பால் என்ன புதுமை கண்டனையோ? இவை தம்முடைய இயல்பின்படிதான் மணல் மேட்டிலே விளையாடுகின்றன' என்கிறான் தலைவன்.

'அவை தம் இயல்பின்படி விளையாடுவது உண்மையே! ஆனால், அவை தம் துணையுடன் விளையாடுகின்றனவே அல்லாமல், நின்னைப்போலத் தலைவியைத் தனித்துத் துயருறுதற்கு விட்டுவிட்டுத் திரிவன அல்லவே?' என்கிறாள் தோழி.

தலைவன் திடுக்கிடுகின்றான். நண்டின்பால் விளங்கும் பிரிவறியாத் துணைமை உணர்வு கூடத் தன்பால் இல்லையெனத் தோழி சுட்டிக் காட்டி உரைத்ததனை நினைந்து நாணித் தலைகவிழ்கின்றான். அவனது இயல்பான தகைமை உணர்வு, அவனது செயலினை எள்ளி நகையாடுகின்றது. 'ஏதோ நிகழ்ந்துவிட்டது. இனி அங்ஙனம் நிகழாது பேணுவேன். நீதான் தலைவியைத் தெளிவித்தல் வேண்டும். அவள் எப்படியிருக்கிறாள்?' என்று குறையிரந்தும் நிற்கின்றான்.

'அவள் அழகினைத்தான் நீ கவர்ந்து விட்டனையே? அவள் எப்படி இருப்பாள்? அவளுடைய தோள்கள் இந்நாளில் பசலையாற் படரப் பெற்றவனாகத் தம் பொலிவிழந்து சோர்ந்து போயுள்ளன' என்கின்றாள் தோழி.

இதன்மேல், தலைவன் தலைவியை நாடிச் செல்லும் உணர்வினாலே உந்தப்பட்டுத் தோழியின் உதவியோடு அவளுடைய கூட்டத்தைப் பெறுவதற்கு வேண்டி நிற்கின்றான்.

தோழியின் நயஞ்செறிந்த சொல்லாடலைக் கொண்டு திகழ்கின்ற செய்யுள் இது. உரையாடலின் நுட்பமான

தன்மையைக் கொண்டு விளங்கும் அருமையினை அதனிடத்தே நாம் காணலாம்.

**இவர்திரை நீக்கியிட் டெக்கர் மணன்மேல்**
**கவர்கால் அலவன் தன்பெடை யோடும்**
**நிகரில் இருங்கழிச் சேர்ப்ப! என் தோழி**
**படர்பசலை ஆயின்று தோள்.**

'கரைமேலே ஏறிவருகின்ற அலைகளினாலே கடலினின்றும் கொண்டுவந்து போடப்பட்ட மேடாகிய மணலினிடத்தே, கவரிட்ட கால்களையுடைய நண்டானது தன் பெடையோடும் ஓடியபடியிருக்கின்ற, ஒப்பற்ற கழிக்கால்களை உடைய கடற்கரை நாட்டுத் தலைவனே! என் தோழியது தோள் நின் பிரிவினாற் படரப்பெற்ற பசலையினை உடைத்தாக இப்போது ஆயிற்று; நீ வந்து அதனை விலக்குவாயாக' என்பது இதன் பொருள்.

'எக்கர் மணன்மேல்' என்று உரைத்தது. முன்னர்க் கடற்கானற் சோலையிடத்தே, அவன் தலைவியோடும் களவுறவிலே திளைத்த நிலையினைச் சுட்டிக் காட்டியதுமாகும்.

'கவர்கால் அலவன் தன் பெடை ஓடும்' என்பதற்குக் 'கவர்ந்த கால்களையுடைய நண்டினது பெட்டை, தன் காதலனைத் தேடியபடி ஓடிக்கொண்டிருக்கும்' எனவும் உரைக்கலாம்.

## 12. நெறி அறிதி!

தலைவன் வரைவிடை வைத்துத் தன்னைப் பிரிந்து சென்ற வருத்தம் மேலெழத் தலைவியானவள் பெரிதும் வருத்தமுற்ற வளாக வாடியிருக்கின்றாள். கானற் சோலையிடத்தே, தாம் களவிற் சந்தித்து இன்புற்றிருந்த இடத்திற் சென்று, பழைய நினைவுகளிலே ஆழ்ந்தவளாகச் சோர்ந்தும் இருக்கின்றாள்.

அவளுடைய நெஞ்சத்தில் அவள் கொண்டிருந்த ஆசைக் கனவுகள் பல. அவை எல்லாம் அடியோடு சரிந்து விடுதலை நினைக்க நினைக்க, அவளுடைய உள்ளமும் உடலும் ஒருங்கே சோர்வுற்றுத் தளர்கின்றன.

தன் காதலன் சொன்ன சொற்களினின்றும் தவறாதவன்; தன்னைக் களவிலே கூடியபின் மறந்து கைவிட்டுப் போய்விடும்

கயவன் அல்லன்; விரைவிலே தன்னை மணந்து கொள்வான்; களவுக் காலத்துச் சிறுபிரிவும் கூட அப்போது இல்லாமற் போகும்; அவனுடன் பிரிவினை அறியாதபடி கூடியின்புற்று மகிழலாம்; ஆன்றோர் போற்றும் இல்லறநெறியில் நல்லறந் திகழச் செய்து புகழ் பெறலாம்; ஆசைக்கு ஒரு பெண்ணும் ஆட்சிக்கு ஓர் ஆணுமாகப் பெற்றுப் பெருமிதம் அடையலாம்; இப்படியெல்லாம் அவள் கட்டி மகிழ்ந்த கனவுக் கோட்டை களைச் சொல்லால் எடுத்துரைக்க முடியாது. அந்த இன்பக் கனவுகளிலேயே திளைத்திருந்த அவள், அவன் தன்னை நாடி வருதற்கும் மறந்தான் என்றபோது கலங்கினாள். கனவுகளின் சிதைவோடு அவளுடைய கன்னிமையும் அழிந்தது. கண்டவர் பழிதூற்றும் அவல நிலைக்குத் தானும் உள்ளாக நேருமோ என்ற கவலையும் அவள்பால் மிகுந்தது. அவள் நடை தளர்ந்தது; அவள் உடலும் சோர்ந்தது கண்களோ பெயலைத் தொடங்கின.

அப்போழுது, நாரையொன்று தன் அலகிடத்தே சிறுமீன் ஒன்றைக் கௌவியபடி பறந்து வந்து, அவளிருந்த இடத்தின் மேலாக இருந்த மரத்தின் மேல் அமருகின்றது. மரத்தின் பாலிருந்த கூட்டினின்றும் அதன் குஞ்சுகள் இரையினை விரும்பியவையாய் ஆரவாரிக்கின்றன.

தலைவியின் மனமும், தலைவனோடு தான் வாழ விரும்பிய இன்பமான இல்லற வாழ்வினையும், அதன்கண் தானொரு புதல்வனைப் பெற்றுப் பெருமிதத்தோடு வரைந்து கொண்டு தனக்கு அந்த நல்லதொரு வாழ்வினை அளிக்க முயலாது, பொருளாசையால் தன்னைப் பிரிந்து சென்ற தலைவனின் செயலை நினைந்து, அவள் சுடுமூச்சு எறிகின்றவளாகச் சொல்லுகின்றாள்,

**சிறுமீன் கவுட்கொண்ட செந்தூவி நாராய்**
**இறுமென் குரலநின் பிள்ளைகட் கேயாகி**
**நெறிநீர் இருங்கழிச் சேர்ப்பன் அகன்ற**
**நெறியறிதி மீன்றபு நீ.**

“சிறு மீனை அலகிடையே பற்றிக்கொண்டு வருகின்ற சிவந்த் இறகுகளையுடைய நாரையே! பசியால் வருந்துதலை யுடைய மென்குரலினைக் கொண்டு நின் குஞ்சுகளையே கருதினாயாகி மீன்களை நீ கொல்லுகின்றாய், அங்ஙனம் கொல்லும் நீதான், அலைந்து செல்லும் நீரினையுடைய கழிக்

கால்களைக் கொண்ட சேர்ப்பன், என்னைப் பிரிந்து சென்ற வழியினை நன்றாகத் தெரிவாய் அல்லவோ? தெரிந்தால் என் நிலையை அவனுக்குச் சொல்லுக!' என்பது இதன் பொருள்.

மீன் தருதலின் பொருட்டாகப் பறந்து செல்பவையாதலின், நீ சேர்ப்பன் சென்ற நெறியறிதி' எனக் கூறியதாகவும் கொள்ளலாம்.

பெண்மையின் பெருங்கனவை அழகுறச் சித்தரிக்கின்ற அரியதோர் ஓவியம் இந்தச் செய்யுள். அந்தக் கனவு இன்பமான இல்லறக் கடமைக்கு எத்துணை சிறந்த அடிப்படையாக மிளிர்வது என்பதனையும் இச் செய்யுள் நமக்குப் புலப்படுத்துகின்றது.

நாரைகட்குக் கூடத் தம்முடைய உறவிலே உறுதி யிருக்கின்றது. தாம் கூடியது இன்புறுதற்கு என்று மட்டுமே கருதியவையாய், அவை தலைவனைப் போலத் தம் ஆசை தீர்ந்ததும் துணையை மறந்து பிரிந்து போய்விடவில்லை. தமக்குப் பிறக்கும் குஞ்சுகளை ஆர்வத்துடன் எதிர்நோக்கி, அதற்காகக் கூடுகளையும் கட்டிக்கொண்டு, கடமைப் பொறுப்பிலே திளைக்கின்றன. முட்டைகளை இட்டபின், அவற்றைப் பேணிக் காத்துவருகின்றன. சின்னஞ்சிறு குஞ்சுகளைக் கண்டதும், சிந்தை குளிர்ந்து மகிழ்ச்சியோடும் ஆரவாரிக்கின்றன.

குஞ்சுகள் பெரியவைகளாக ஆகின்ற காலம் வரையும் தம் வாயிலே சிறுசிறு மீன்களைக் கௌவிக்கொண்டு வந்து அன்போடு ஊட்டுகின்றன. பசியோடு கூச்சலிடும் குஞ்சுகள் பாசத்தோடு இரைகொணரும் நாரை! தலைவியின் எண்ணப் பறவை சிறகடித்துப் பறக்கின்றது. தன் மகனுக்குத் தானும் சோறூட்டிக் களிப்புறுகின்ற அந்த இன்ப நாளை நோக்கிச் செல்லுகின்றது.

'அவன் நம்மை மறந்தான்! இனி இவை எல்லாம் நிகழ்வதேது? நம் அழிவுதான் இனி உறுதியாகும்.' அவள் உள்ளம் நெருப்பாகக் கனலுகின்றது. அவள் புலம்புகின்றாள். அந்தப் புலம்பலின் குரலோடு விளங்குகின்றது இந்தப்பாடல்.

பெண்மை எப்போதுமே உயர்ந்த நோக்கத்தைக் கொண்டது. இனத்தை வளர்க்கின்ற கடமையுணர்வு

பெண்மையின் பெரிய சிறப்பு. தனக்கொரு மகன் பிறக்க வேண்டும் என்று விரும்பாதவர் யார்? இந்தச் செறிவான மனப்போக்கையும் செய்யுளிற் காண்கின்றோம்.

இவ்வாறாக, இரங்கலும் இரங்கல் நிமித்தமுமாக இயல்கின்றன மூவாதியரின் செய்யுட்கள். இவற்றுள், இப்பகுதியின் 13,14 ஆவது செய்யுட் கிடையாது போயின வென்பதை முன்னரே கூறியுள்ளோம்.

தமிழகத்தின் வளமான இன்ப வாழ்க்கையானது, எவ்வாறு ஐந்திணை ஒழுக்கத்து அமைதியையொட்டி நிகழ்ந்து வந்தது என்பதனை ஒருவாறு விளக்குமுகத்தான், மூவாதியரின் ஐந்திணை எழுபதை ஒட்டிப் பயின்றுவரும் தலைவன் தலைவியர் தோழியர் ஆகியோரின் உள்ளவுணர்வுகளைக் கண்டோம். இவை பலவும், அமைதியைக் கண்டறிவதற்கு உதவுகின்ற சிறந்த சான்றுகள். ஆகவே, தமிழ் இலக்கியச் செழுமையை விருப்போடு அறிந்து போற்றுதற்குத் தமிழன்பர்கள் முன்வர வேண்டும்; முன் வருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.




ISBN : 978-93-80219-36-3

நூல் கிடைக்குமிடம் :

நூலங்காடி...
www.thebookstore.in
e-mail : gowra_09@yahoo.in

கௌரா ஏஜென்ஸீஸ்
10/14, தோப்பு வேங்கடாசலம் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 5.

ரூ.45